REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 ஜனவரி 31 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 90 இல. 26 | Monday 31,January, 2022 | 16பக்கங்கள் | 30/-

## இரண்டு மாதங்களின் பின் பூஸ்டர் தடுப்பூசி பெறலாம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்கள் அதனையடுத்து இரண்டு மாதங்களுக்குப் பின்னர் மூன்றாவது தடுப்பூசியான பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும் என விசேட மருத்துவ நிபுணர் 06

# நடமாடும் சேவை மூலம் பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டம்

### இராணுவத்தளபதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் இந்த வாரத்தில் விசேட தடுப்பூசித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன் பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் நடமாடும் சேவையை ஆரம்பிக்கப் போவதாகவும் அதற்காக நடமாடும் தடுப்பூசி மத்திய நிலையங்களை ஸ்தாபிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள இராணுவத்தளபதி:

இந்த நாட்களில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருகிறது. இந்த நிலைமையை கவனத்திற்கொண்டு மிகவும் விரைவாக மக்கள் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகும். 06



# உணவுத் தட்டுப்பாடு நிலவுவதாக விரிவுரையாளர்கள் சிலர் பொய்வதந்தி

### குற்றச்சாட்டுக்கு அமைச்சர் மறுப்பு

**(எம்.ஏ.அமீனுல்லா)**

நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சிலர் தவறான கருத்தை பரப்ப முயற்சிப்பதாகவும் இதில் எந்த உண்மையும் கிடையாது எனவும் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

தற்பொழுது மேற்கொள்ளப்படும் பெரும்போக அறுவடை இன்னும் நடைபெறாத நிலையில் உணவு தட்டுப்பாட்டுக்கு எந்தவொரு வாய்ப்பும் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டார். கண்டி மகாவலி ரீச் ஹோட்டலில் நேற்று முன்தினம் (29) நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 06



# தேசிய ஐக்கியத்தை வலுப்படுத்துவதற்கும் வடக்கு தெற்கை ஒன்றிணைக்கவும் அடித்தளம்

### யாழ்ப்பாணத்தில் அமைச்சர் அலி சப்ரி

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தின் செயற்பாடுகளின் ஊடாக தேசிய ஐக்கியத்தை வலுப்படுத்துவதற்கும் வடக்கையும் தெற்கையும் ஒன்றிணைப்பதற்கும் நல்ல அடித்தளத்தை அமைக்க முடியும் என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட நடமாடும் சேவையுடன் இணைந்ததாக வடமாகாண சபையின் வேண்டுகோளுக்கு இணங்க தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் 42 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரி வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஸ்மார்ட் வகுப்பறைக்கான புதிய மூன்று மாடி கட்டடம் நீதி அமைச்சர் அலி சப்ரியினால் திறந்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் பணிப்புரையின் பேரில் தற்போதைய அரசாங்கம் வடக்கில் உள்ள தமிழ் பேசும் மக்கள் தமது மொழிகளில் பேசுவதற்கும் வாழ்வதற்குமான சூழலை உருவாக்கியுள்ளது. அவர்களின் கலாசாரங்களுக்கு ஏற்ப வாழும் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த காலம் முதல் வடக்கு, தெற்கு மக்கள் அனைவரும் சமாதானத்துடனும் நல்லிணக்கத்துடனும் செயற்படுகின்றனர். நாட்டின் அபிவிருத்திக்கு அமைதியும் நல்லிணக்கமும் இன்றியமையாதது என அவர் குறிப்பிட்டார். 06





74வது சுதந்திர தின கொண்டாட்டங்கள் எதிர்வரும் 4ஆம் திகதி சுதந்திர சதுக்கத்தில் நடைபெற உள்ளது. இதன் முன்னோடி ஒத்திகை நிகழ்வுகள் நேற்று இடம்பெற்ற போது பிடிக்கப்பட்ட படம்.

## மிளகாய்த் தூள் வீசி குடும்பஸ்தர் கொலை 02

சாய்ந்தமருதில்

## படுகொலை செய்யப்பட்ட பெண்ணுக்கு கொரோனா

**(கல்முனை விசேட நிருபர்)**

சாய்ந்தமருது பிரதேசத்தில் படுகொலை செய்யப்பட்ட பெண்ணுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து அவரது ஜனாஸா மட்டக்களப்பு, ஓட்டமாவடியில் அமைந்துள்ள மஜ்மா நகர் கொவிட் மையவாடியில் நேற்று (30) நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. இத்தகவலை குறித்த பெண்ணின் புதல்வரான அலியார் சௌபர் உறுதிப்படுத்தியுள்ளார்.

சாய்ந்தமருது15 ஆம் பிரிவு புதுப்பள்ளி வீதியிலுள்ள 06

## கச்சதீவு திருவிழாவிற்கு இந்திய யாத்திரிகர்களுக்கு அனுமதி கிடையாது



கச்சதீவில் வருடந்தோறும் நடைபெறும் அந்தோணியார் திருவிழாவில் இலங்கை யாத்திரிகர்களும் இந்திய யாத்திரிகர்களும் பங்கேற்று வந்த நிலையில் இந்த தடவை மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, கச்சத்தீவு புனித அந்தோணியாரின் 06

ஐ.ஓ.சியிடம் இருந்து

## மின் உற்பத்திக்கு தேவையான எரிபொருள் கொள்வனவு



லங்கா ஐஓசி நிறுவனத்தின் ஊடாக மின்சார சபைக்கு நேரடியாக எரிபொருளை கொள்வனவு செய்யப்பட இருப்பதாகவும் இன்று (31) மற்றும் நாளை (01) அவை கிடைக்க இருப்பதாகவும் மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரத்திற்கு மின்சார சபைக்கு தேவையான எரிபொருளின் அளவு குறித்து நாளை தீர்மானிக்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார். தனியார் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து குறுகிய காலத்திற்கு மின்சாரத்தை பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்துள்ளார். டொலர் நெருக்கடி நிலைமை காரணமாக எரிபொருள் 06

முன்னாள் அமைச்சர்கள், பிரபுக்கள்:

## செலுத்தத் தவறிய வாடகை விமான கட்டணம் ஒரு கோடியே 25 லட்சம் 02



எரிபொருள் இறக்குமதிக்கான டொலர்:


## வழங்கும் பொறுப்பை ஏற்பதாக மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு 02



## கெரண்டி எல்ல ஆற்றில் மூழ்கி ஐவர் பலி; 3 பெண்கள், ஒரு இளைஞரின் சடலம் மீட்பு

**(ஹற்றன் சுழற்சி நிருபர், பசறை நிருபர் )**

பதுளை – அட்டாம்பிட்டிய உமா ஓயாவிற்கு நீர் வழங்கும் கிளை ஆறான கெரண்டி எல்ல ஆற்றில் நீராடச் சென்ற ஐவர் உயிரிழந்துள்ளனர். நீரில் அடித்துச் சென்று காணாமல் போன ஐவரில், நான்கு பேரின் சடலங்கள் இதுவரை கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த சடலங்கள் நேற்று முன்தினம் (29) மாலை கண்டெடுக்கப்பட்டதாக அட்டாம்பிட்டிய பொலிஸார் தெரிவிக்கின்றனர். நீரில் மூழ்கி உயிரிழந்த நால்வரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் ஒரு சிறுமியின் சடலம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை 06



## குழந்தைகளை பாதிக்கும் தீவிர நோய் பரவல் குறித்து மருத்துவர்கள் எச்சரிக்கை

நாட்டில் மீண்டும் கோவிட்19 பரவியுள்ள நிலையில் குழந்தைகளை பாதிக்கக்கூடிய மற்றொரு தீவிர நோய் குறித்து கொழும்பு லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் வைத்தியசாலையின் மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர். “மிஸ்ஸி” என்ற இந்த நோய் 06



## 25 மில்லியன் பெறுமதியான வெளிநாட்டு நாணயங்களை கடத்திய ஐவர் கைது

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு, வெளிநாட்டு நாணயங்களை கடத்தும் வர்த்தகத்தில் ஈடுபட்ட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து இவர்கள் ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக சுங்கப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக, டுபாய் நோக்கி நேற்று பயணிக்க முயற்சித்த சந்தர்ப்பத்திலேயே கைது செய்யப்பட்டுள்ளனர். 06



## இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, குமார வெல்கம எம்.பிக்கு கொரோனா

### அதிவேக நெடுஞ்சாலை ஊழியர்கள் 15 பேருக்கு கொவிட் 19 உறுதி

நுகர்வோர் விவகார இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம ஆகியோருக்கு கொவிட் வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது. முன்னதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதியாகியுள்ளது. இதேவேளை, தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் உள்ள கொட்டாவ இடைமாற்றில் பணிபுரிந்த 15 ஊழியர்களுக்கு 06



## மாற்று வழிமுறைகளை அரசு கையாளாவிட்டால் தற்போதைய நிலைமை மேலும் மோசமடையும்

அரசாங்கமானது டொலர் கையிருப்பினை உறுதி செய்யும் வகையில் மாற்று வழிமுறைகளைக் கையாளவில்லை என்றால் இந்த நிலைமை மேலும் மோசமடையும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒரு நாட்டு மக்களாக இந்த சவாலினை மேற்கொள்வதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டிய தேவையுள்ளது. அதேவேளை இந்த நெருக்கடியினை தீர்ப்பதற்கு அரசாங்கம் கையாளும் வழிமுறைகள் மிக முக்கிய கேள்விகளை எழுப்பியுள்ளது. அரசாங்கமானது வெளிநாட்டு கடன்களை செலுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுப்பதானது, எமது மக்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை 06

### விக்கல் வீராச்சாமி



காணாம போனோரது பிரச்சனைய தீக்க போராட்டங்கள நடத்தாது அரசோடு பேச வாங்கோ எண்டு அலி சப்ரி ஐயா அழைப்பு விடுத்திருக்கிறாரே....

முன்னம் இருந்தவைய விடவும் இவர் இதய சுத்தியோட கூப்பிடுறார், பேசாம அரசோட பேசி ஒரு முடிவுக்கு வாறது உண்மையில நல்லதுதானே...!!!

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஜனவரி 31 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN

**தொழுகை நேரம்**

30 முதல் 31 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 05.11 |
| லுஹர் | 12.25 |
| அஸர் | 03.47 |
| மஃரிப் | 06.19 |
| இஷா | 07.32 |

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் தை 18

ராகுகாலம் : பகல் : 07.30 - 09.00வரை
சுபநேரம் : காலை : 06.00 - 07.30வரை

யோகம்: மரணஅமிர்த யோகம்

திதி: திதித்துவயம்

## புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் விரைவில்

2021, தரம் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை விரைவில் வெளியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதற்கமைய, தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை ஒரு மாதம் 10 நாட்களுக்குள் வெளியிடுவதற்கு எதிர்பார்ப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தர்மசேன தெரிவித்துள்ளார். புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் இன்று (31) ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



தேசிய கல்வி நிறுவகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் ஊடகத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெரும பிரதம அதிதியாக கலந்து கொண்டார். கலந்து கொண்ட மாணவிகளுடன் அமைச்சர் உரையாடுவதை படத்தில் காணலாம்.

# வணிக விவசாய வீழ்ச்சிக்கான காரணங்களை சீர் செய்ய வேண்டும்



சேதனப்பசளையை ஊக்குவிப்பது ஒரு பிரச்சினையல்ல, மாறாக நாட்டில் வணிக விவசாயம் வீழ்ச்சியடைவதையோ அல்லது விவசாயத்திலிருந்து விவசாயி வெளியேற்றப்படுவதையோ ஒருபோதும் அனுமதிக்க முடியாது என கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவங்ச தெரிவித்துள்ளார். வணிக விவசாய வீழ்ச்சிக்கான காரணங்களை சீர் செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் பத்தரமுல்லையில் அமைந்துள்ள 'அபேகம' வளாகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய பல கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

"அடுத்த மூன்று வருடங்களை நன்கு திட்டமிட்டு தவறுகளைக் கண்டறிந்து திருத்தினால், நாட்டு மக்கள் விரும்பிய முடிவுகளை அடைய முடியும். ஆனால் நம் நாடு வணிக விவசாயத்துடன் விளையாடக்கூடாது. இது மிகவும் உணர்திறன் மிக்க பிரச்சினை. வணிக விவசாயம் அழிந்தால், அது இந்த நாட்டின் உணவுப் பாதுகாப்பை குழிபறிக்கும்.

இந்தியாவில், விவசாயிகளின் போராட்டத்தால் இந்திய பிரதமர் மோடி இரண்டு சட்டமூலங்களை திரும்பப் பெற வேண்டியிருந்தது. ஆட்சிக்கு சவால்கள் ஏற்படும் போது, அது பின்வாங்க வேண்டியிருக்கும். எனவே, வணிக விவசாயத்தின் வீழ்ச்சிக்கு காரணமான காரணங்களை உடனடியாக சரி செய்ய வேண்டும்.

06

## புற்றுநோயால் பாதிக்கப்பட்ட மாணவனுக்கு பிரதமரின் பாரியார் உதவி



எலும்பு மச்சை புற்றுநோயால் பாதிக்கப்பட்ட தம்புத்தேகமவை சேர்ந்த டீ.என். சச்சித் சிதுமின மாணவனின் நோயை குணப்படுத்துவதற்கு உதவி செய்வதற்கு பிரதமரின் பாரியார் ஷிரந்தி விக்ரமசிங்க ராஜபக்ஷ முன்வந்துள்ளார்.

சாராணத் தரப் பரீட்சையில் சிறந்த சித்தி எய்திய பதினேழு வயதுடைய டீ.என்.சச்சித் சிதுமின மாணவன் தற்போது அநுராதபுரம் மகுலேவ தேசிய பாடசாலையில் கணித பிரிவில் உயர் தரம் கற்று வருகிறார்.

தந்தை விட்டுச் சென்றதன் பின்னர் தனது தாய் மற்றும் சகோதரியுடன்

06

எரிபொருள் இறக்குமதிக்கான டொலர்:

## வழங்கும் பொறுப்பை ஏற்பதாக மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் நிலவும் டொலர் நெருக்கடிக்கு மத்தியில் எரிபொருள் இறக்குமதிக்கு தேவையான டொலர்களை பெற்றுக் கொடுக்கும் பொறுப்பை தாம் பாரமெடுப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நெருக்கடி தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தின் போது மத்திய வங்கியின் ஆளுநர் தாம் அதற்கான பொறுப்பை பாரமெடுப்பதாக அவர் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, எரிபொருள் இறக்குமதிக்கு தேவைப்படும் டொலர் தொடர்பில் முன்பதாகவே அறியத் தருமாறும் மத்திய வங்கியின் ஆளுநர் அந்த பேச்சுவார்த்தையின்போது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எரிபொருள் நெருக்கடியை கவனத்திற் கொண்டு மின்சார விநியோகத்தில் துண்டிப்பு

06



மர்ஹூம் அஷ்ஷெய்க் மௌலவி எம்.எம்.ஏ.முபாறக் எழுதிய இலங்கையில் வாழ்ந்த சுமார் 100 உலமாக்களின் வாழ்க்கைக் குறிப்பு பற்றிய "செரன்திப் கண்ட சான்றோர்கள்" நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று கொழும்பு ஸாஹிரா கல்லூரி கபூர் மண்டபத்தில் அ.இ.ஜ.உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் றிஸ்வி முப்தி தலைமையில் நடைபெற்ற போது. ( படம்.ஏ.எஸ்.எம். ஜாவித்)

தேசிய வருவாய், கலால் திணைக்கள தொழிற்சங்கம்

## ஜனாதிபதி செயலாளருடனான பேச்சுவார்த்தை; சாதகம் என தெரிவிப்பு

தேசிய வருவாய், கலால் திணைக்கள தொழிற்சங்கம் மேற்கொண்டு வந்த போராட்டத்தை தீர்ப்பதற்கு ஜனாதிபதி செயலாளர் காமினி செனரத்துடன் அதிகாரிகள் மற்றும் தொழிற் சங்கங்கள் நடத்திய பேச்சுவார்த்தை சிறந்த தீர்வொன்றை எட்டியுள்ளதாக அறிய வருகிறது.

வரி வருமானத்தை அறவிடும் வழி முறையில் மாற்றங்களை ஏற்படுத்தி தங்களது திணைக்களத்துக்கு அதிகாரத்தை குறைப்பதற்கு அரசு மேற்கொண்ட புதிய சட்ட வரைவுக்கு சில திருத்தங்களை இணைப்பதற்கு ஜனாதிபதி செயலாளருடன் நடந்த உயர்மட்ட பேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தப்பட்டதே இதற்கு காரணமாகும்.


தேசிய வருவாய் திணைக்களம் அறவிடும் பொருள்கள் மற்றும் சேவைகள் வரி மற்றும் கலால் திணைக்களம் அறவிடும் கலால் வரி உள்ளிட்ட மேலும் பல வரிகள் தொடர்பாக திறைசேரியின் பிரதிச் செயலாளரின் தலைமையில் புதிதாக அமைக்கப்பட்ட விசேட பிரிவு ஒன்றின் ஊடாக மேற்கொள்வதற்கு

06

முன்னாள் அமைச்சர்கள், பிரபுக்கள்:

## செலுத்தத் தவறிய வாடகை விமான கட்டணம் ஒரு கோடியே 25 லட்சம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட பிரபுக்கள் பயணம் செய்வதற்காக வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள விமானங்களுக்காக விமானப் படையினருக்கு ஒரு கோடியே 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட நிதியை செலுத்த வேண்டியுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேற்படி நிதியை செலுத்தாமல் தவறவிட்டுள்ள நிறுவனங்களில் அமைச்சுக்கள் உள்ளிட்ட 10 அரச நிறுவனங்களும் இரண்டு தனியார் நிறுவனங்களும் உள்ளடங்குவதாக அந்த அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கிணங்க விமானப் படையினரிடமிருந்து 2003 / 2013 வருடங்களுக்கு இடையிலான காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட விமானங்களுக்கு 60 லட்சத்துக்கு அதிகமான நிதியும் 2013 ஆம்

06

## மிளகாய்த் தூள் தூவி குடும்பஸ்தர் கொலை

வீட்டில் தனியாக வாழ்ந்து வந்த மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் மீது மிளகாய் தூளை வீசி கத்தியால் குத்தி கொலை செய்த சம்பவம் தொடர்பாக இரண்டு பெண்கள் உட்பட ஏழு பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் கம்பஹா மாவட்டம் திவுலப்பிட்டிய பொலிஸ் பிரிவில் நேற்று நடந்துள்ளது.

இந்த சந்தேக நபர்கள் கொலை செய்யப்பட்டவரின் வீட்டுக்கு அயலில் வசித்து வந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். நுனகஹா கிழக்கு பள்ளியப்பிட்டிய பிரதேசத்தில் வசித்து வந்த கே.வின்சன் என்ற 60 வயதான நபரே சம்பவத்தில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் மனைவி உயிரிழந்த பின்னர் தனியாக வீட்டில் வசித்து வந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அயல் வீடுகளில் குடியேறியவர்களால் தனக்கு தொந்தரவு எனக் கூறியதன் காரணமாக ஏற்பட்ட தகராறை அடிப்படையாக கொண்டு சந்தேக நபர்கள் நேற்று அதிகாலை வீட்டிற்குள் புகுந்து மிளகாய் தூளை வீசி, கத்தியால் குத்தி கொலை செய்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில்

06








யாழ்.மாவட்ட நடமாடும் சேவையுடன் இணைந்ததாக வடமாகாண சபையின் வேண்டுகோளுக்கு இணங்க தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் 42 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரி வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஸ்மார்ட் வகுப்பறைக்கான புதிய மூன்று மாடி கட்டிடம் நீதி அமைச்சர் அலி சப்ரியினால் திறந்து வைக்கப்பட்டது. யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் பல்கலைக்கழக சமூகத்தினருடன் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், நீதி அமைச்சின் செயலாளர், யாழ்.பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 141.83 | 147.84 |
| கனடியன் டொலர் | 153.64 | 159.49 |
| யூரோ | 223.85 | 232.67 |
| ஜப்பான் யென் | 1.7190 | 1.7840 |
| சிங்கப்பூர் டொலர் | 146.13 | 150.84 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 265.27 | 273.66 |
| சுவிஸ் பிராங்க் | 215.03 | 222.69 |
| அமெரிக்க டொலர் | 198.50 | 202.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 533.10 | கட்டார் ரியால் | 55.20 |
| குவைத் டினார் | 664.02 | சவூதி ரியால் | 53.51 |
| ஓமான் ரியால் | 522.07 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.72 |

# NVQ முறை மூலம்

## திறன் மற்றும் தொழில் அனுபவத்திற்கு




## திறன் கடவுச்சீட்டு



QR குறியீடு
மூலம் உறுதி செய்ய முடியும்.

உங்களது அனைத்து திறன்கள்/ தகைமைகள் மற்றும் அனுபவத்தை ஸ்மார்ட் அட்டை (SMART CARD) ஒன்றின் மூலம் உறுதி செய்வது திறன் கடவுச்சீட்டு மூலம் மேற்கொள்ளப்படும். உங்களிடம் உள்ள NVQ சான்றிதழ், தொழில் அனுபவம் தொடர்பில் விபரங்களை நேரடியாக **www.nsp.gov.lk** என்ற இணையதளத்திற்கு அல்லது 011 760 8067 என்ற தொலைபேசி இலக்கம் மூலம் கேட்டு தேவையான வகையில் சமர்ப்பித்து திறன் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள முடியும். இதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட திறன்களுடன் குறித்த தொழிலின் ஓர் ஆண்டு தொழில் அனுபவத்துடன் தொழிலில் ஈடுபடுவது அவசியம் என்பதோடு, 1000 ரூபா கட்டணம் ஒன்றை செலுத்துவது அவசியமாகும். முன்கற்கை அங்கீகரிப்பு (Recognition of Prior Learning – RPL) முறை மூலம் NVQ சான்றிதழை பெறும் திறன் கைவினைஞர்களுக்கு NVQ சான்றிதழை பெற்றுக்கொண்ட பின் "திறன் கடவுச்சீட்டை" (Skill Passport) பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்க முடியும்.

## சான்றளிக்கப்பட்ட திறன் மற்றும் அனுபவத்திற்கு - திறன் கடவுச்சீட்டு
## திறன் அனுபவம் கொண்ட - ஸ்மார்ட் அட்டை

### திறன் கடவுச்சீட்டை பெற்றவர்களுக்கு கிடைக்கும் நன்மைகள்

- தமது திறனுக்கு அங்கீகாரம் கிடைக்கும்
- திறன் மற்றும் அனுபவத்தை அனைவருக்கும் இணையதளத்தின் மூலம் உறுதி செய்ய முடியுமாக இருத்தல்.
- உள்நாட்டு, வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான வழியை ஏற்படுத்தல்.
- கல்வி மற்றும் தொழில் சான்றிதழ் தொகுதி ஒன்றுக்கு பதில் ஸ்மார்ட் அட்டை ஒன்றை பயன்படுத்த முடியுமாதல்.
- உள்நாட்டு அல்லது வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஒன்றின்போது பெற்றுக்கொண்ட திறன் மற்றும் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு NVQ சான்றிதழ் மற்றும் திறன் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

### தொழில் வழங்குநருக்கு கிடைக்கு நன்மைகள்

- அரச அங்கீகாரம் உள்ள திறன்களை உறுதி செய்த/ அங்கீகாரம் உள்ள திறன் கைவினைஞர்களை பணியமர்த்துவதற்கு முடியுமாதல்.
- குறித்த திறன் கைவினைஞர்களின் திறன் மற்றும் அனுபவத்தை ஒன்லைன் மூலம் உறுதி செய்ய முடியுமாக இருத்தல்.
- திறன் கைவினைஞர்களை நியமிப்பதற்காக எடுக்கின்ற காலம் மற்றும் செலவை மட்டுப்படுத்த முடியுமாக இருத்தல்.
- அன்றாட தேவைகளுக்காக தேவையான தொழில்முறையாளர்களின் திறன் மற்றும் அனுபவத்தை உறுதி செய்வதற்கு முடியுமாதல்.

### தகைமை அளவுகோல்

#### விண்ணப்பதாரர்

- இலங்கை பிரஜையாக இருத்தல்.
- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் (TVEC) பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றில் NVQ சான்றிதழ் ஒன்றை பெற்றுக்கொண்ட பின்னர் ஓர் ஆண்டு தொழில் ஒன்றை பெற்றிருத்தல் அல்லது முன்கற்கை அங்கீகரிப்பு (RPL) மூலம் பெற்றுக்கொண்ட NVQ சான்றிதழ் ஒன்று இருத்தல்.

#### விண்ணப்பிக்கும் முறை

- www.nsp.gov.lk என்ற முகவரிக்கு பிரவேசித்து "Apply today" இன் மீது கிளிக் செய்யவும்.
- தேவையான விபரம் மற்றும் அடிப்படை விண்ணப்பத்தை நிரப்பவும்.
- அடிப்படை விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின் விண்ணப்பதாரரின் கல்வி மற்றும் தொழில் தகைமைகள், தொழில் அனுபவம், மொழித் திறன் போன்றவற்றை கட்டமைப்புக்கு உள்ளடக்குவதற்காக நுழைவுத் தகவல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட அனைத்து ஆதார ஆவணங்களின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதிகளையும் பதிவேற்றம் (Upload) செய்ய வேண்டும்.

**குறிப்பு:- வழங்கப்படுகின்ற விபரங்கள் குறித்த உண்மைத் தன்மை நிர்வாகிகள்/ நிறுவனம்/ அமைப்புகள் மூலமாக எம்மால் உறுதி செய்யப்படும்.**

- விண்ணப்பதாரர் 1000 ரூபா கட்டணத்தை நேரடியாக TVEC நிறுவனத்திற்கு அல்லது குறித்த பெயர் குறிப்பிடப்பட்ட வங்கிக் கணக்கிற்கு வைப்புச் செய்ய வேண்டும். கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் ஸ்கேன் செய்த பிரதி ஒன்றை திறன் கடவுச்சீட்டு (Skills Passport) கட்டமைப்புக்கு தரவிறக்கம் (Upload) செய்ய வேண்டும்.
- ஒவ்வொரு கட்டத்திலும் விண்ணப்பதாரருக்கு SMS அறிவித்தல் அனுப்பப்படும். விண்ணப்பதாரருக்கு இறுதி SMS அறிவித்தல் கிடைத்த பின் திறன் கடவுச்சீட்டு அட்டை (Skills Passport Card) TVEC நிறுவனத்திடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

#### தொழில் தொடர்பில் அத்தாட்சி

- விண்ணப்பதாரர் பணியில் ஈடுபடுவதாயின் மற்றும் EPF மற்றும் ETF இற்காக பங்களிப்புச் செய்வதாயின் தொழில் விபரத்தை உறுதி செய்வதற்கு குறித்த கொடுப்பனவு அறிக்கைகளின் பிரதிகளை திறன் கடவுச் சீட்டு பிரிவுக்கு (Skills Passport Unit) பதிவேற்றம் (Upload) செய்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் அவரது தொழில் வழங்குநர் மூலம் வழங்கப்பட்ட தொழில் உறுதி செய்யும் கடிதத்தை திறன் கடவுச்சீட்டு பிரிவுக்கு பதிவேற்றம் (Upload) செய்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் வர்த்தக உரிமையாளராயின் வர்த்தகப் பதிவு (BR) பிரதி மற்றும் அந்தக் கடிதம் கிடைத்த திகதிக்கு குறித்த வர்த்தகம் செயற்படுவது பற்றி குறித்த பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தர் குறித்த படிவத்திற்கு அமைய பதிவேற்றம் (Upload) செய்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் வெளிநாட்டு வேலை ஒன்றில் ஈடுபட்டிருக்கும்போது அவர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழின் பிரதி, தொழில் வழங்குநரினால் வழங்கப்பட்ட சேவைக் கடிதம், விசாவின் பிரதி ஒன்றை பதிவேற்றம் (Upload) செய்தல் வேண்டும்.
- 500க்கு மேற்பட்ட தேசிய திறன் தேர்ச்சிகளில் (www.nvq.gov.lk) உங்களுக்கு பொருத்தமான தொழிலை தேர்வு செய்ய முடியும்.

### மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்...

**தினுஷா லக்மாலி**

**011 760 8067**

**skillspassport@tvec.gov.lk**

திறன்கள் அபிவிருத்தி, தொழில்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு,
நிபுனதா பியச, இல. 354/2, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05.
தொ.பே.: 011 760 8000 தொலைநகல்: 011 255 5007
மின்னஞ்சல்: info@tvec.gov.lk இணையதளம்: www.tvec.gov.lk

TVEC

THE EMPLOYERS' FEDERATION OF CEYLON
*A Voice for Your Business*

International Labour Organization

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் தை மாதம் 18ம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஜுமாதல் ஆகிறா பிறை 27

### குறள் தரும் சிந்தனை



சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்

*சிறிய படை என்றாலும் அது தனக்குரிய இடத்தில் இருந்து போரிட்டால் பெரிய படையை வென்று விட முடியும்.*

## பூஸ்டர் தடுப்பூசி முக்கியத்துவம் நன்கு உணரப்பட வேண்டும்

நாட்டின் பல பிரதேசங்களிலும் கொவிட் 19 தொற்றின் ஒமிக்ரோன் பிறழ்வு பரவி வருகின்றது. இதனை சுகாதாரத் துறையினர் சுட்டிக் காட்டியுள்ளனர். 'தற்போது கொவிட் 19 தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களில் 90_ 95 வீதமானோர் ஒமிக்ரோன் பிறழ்வு தொற்றுக்குள்ளானவர்களாக விளங்குகின்றனர் என்று சுகாதார அமைச்சின் சுகாதார மேம்பாட்டு பணியகப் பணிப்பாளர் டொக்டர் ரன்ஜித் பட்டுவந்துடாவ தெரிவித்திருக்கின்றார்.

ஒமிக்ரோன் பிறழ்வானது, கொவிட் 19 தொற்றில் இற்றைவரையும் ஏற்பட்டுள்ள பிறழ்வுகளை விடவும் மிக வேகமாகப் பரவக் கூடியதாக விளங்குகின்றது. இது உலகளாவிய ரீதியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கொவிட் 19 தொற்றில் ஏற்கனவே ஏற்பட்ட டெல்டா, அல்பா போன்ற திரிபுகளைப் போன்று அதிக உயிராபத்து அச்சுறுத்தலைக் கொண்டிராத போதிலும், மிக வேகமாகப் பரவக் கூடிய தன்மையைக் கொண்டிருக்கின்றது ஒமிக்ரோன் பிறழ்வு.

இப்பிறழ்வு தொற்றுக்குள்ளாகி தீவிர நிலை ஏற்படுமாயின் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற வேண்டிய நிலைமையும் ஏற்படலாம் என்பது தான் மருத்துவர்களின் கருத்தாக உள்ளது. அதன் காரணத்தினால் ஒமிக்ரோன் பிறழ்வின் தாக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கும், அத்தொற்றுக்கு உள்ளானால் அது தீவிர நிலையை அடைவதைத் தவிர்த்துக் கொள்வதற்கும் கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கான தடுப்பூசியின் பூஸ்டர் டோஸ் பெரிதும் பயனளிக்கும். இதனை அடிப்படையாகக் கொண்டுதான் பூஸ்டர் டோஸைப் பெற்றுக் கொள்வதன் அவசியம் பரவலாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கான தடுப்பூசியின் முதலிரு டோஸ்களைப் பெற்றுக் கொண்டுள்ளவர்களுக்கு பூஸ்டர் டோஸைப் பெற்றுக் கொடுப்பதில் எல்லா நாடுகளும் விஷேட கவனம் செலுத்தி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஆனால் கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கான தடுப்பூசிக்கு எதிராகவும் குறிப்பாக பூஸ்டர் டோஸுக்கு எதிராகவும் தவறாகவும் பிழையாகவும் தகவல்கள் பரப்பப்படுகின்றன. இவ்வாறான சூழலில் இத்தடுப்பூசிகள் தொடர்பில் தவறான தகவல்களைப் பரப்புவோரைக் கண்டித்துள்ள பரிசுத்த பாப்பரசர், கொரோனா தொற்றுக்கு எதிரான வலிமையான பேராயுதங்களாகத் தடுப்பூசிகள் விளங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் காலத்திற்கு அவசியமான கண்டனத்தை பரிசுத்த பாப்பரசர் மேற்கொண்டுள்ளார். 2019 இறுதிப் பகுதியில் உலகிற்கே பெரும் சவாலாக உருவெடுத்த கொவிட் 19 தொற்றின் தாக்கத்தையும் பாதிப்புகளையும் மாத்திரமல்லாமல் உயிரிழப்புக்களையும் குறைப்பதில் இத்தடுப்பூசி பெரிதும் பங்களித்துள்ளது. இது தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ள உண்மையாகும்.

இத்தடுப்பூசியின் பயனாக இத்தொற்றின் நெருக்கடிகளுக்கு உள்ளாவோரினதும், இத்தொற்றின் தீவிர நிலை காரணமாக வைத்தியசாலைகளின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெறுவோரினதும் எண்ணிக்கை மாத்திரமல்லாமல் உயிராபத்து அச்சுறுத்தலை எதிர்கொள்வோரினதும் எண்ணக்கையும் குறைவடைந்துள்ளது.

இவ்வாறு மனித சமூகத்திற்கு பெரும் சேவையாற்றி வரும் தடுப்பூசிக்கு எதிராக முன்னெடுக்கப்படும் தவறான தகவல்கள் பரப்பும் நடவடிக்கை எவ்விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாததாகும். ஆனாலும் இது தொடர்பான தவறான தகவல்களைப் பெரும்பாலான மக்கள் நிராகரித்து தடுப்பூசியைப் பெற்று வருகின்றனர்.

அந்த வகையில், இந்நாட்டில் இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியின் முதலிரு டோஸ்களையும் 85 வீதத்திற்கும் மேற்பட்டவர்கள் பெற்றுள்ளனர். ஆனால் கடந்த நவம்பர் மாதம் நடுப்பகுதியில் இத்தடுப்பூசியின் பூஸ்டர் டோஸை வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இற்றைவரையும் 40 வீதமானோர் தான் அதனைப் பெற்றுள்ளனர். பூஸ்டர் டோஸைப் பெற்றுக் கொள்வோரின் எண்ணிக்கையில் மந்த நிலை காணப்படுவதற்கும் தவறான பிரசாரமே காரணமாக விளங்குகின்றது.

பூஸ்டர் டோஸானது உடலின் நோயெதிர்ப்பு சக்தியைப் பலப்படுத்தக் கூடியதாகும். அதன் ஊடாக ஒமிக்ரோன் பிறழ்வை மாத்திரமல்லாமல் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய பிறழ்வுகளை எதிர்கொள்ளவும் இந்த பூஸ்டர் டோஸ் பெரிதும் உதவியளிக்கும் என மருத்துவ நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இவ்வாறான நிலையில், இலங்கையில் கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் நிறைவடைந்துள்ள தினத்தின் மறுநாளான 30 ஆம் திகதி முதலான ஒரு வார காலம் பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நடமாடும் முறையிலும் பூஸ்டர் டோஸ் பெற்றுக்கும் நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே பூஸ்டர் டோஸின் முக்கியத்துவத்தையும் பயன்களையும் கருத்தில் கொண்டு அதனைப் பெற்றுக் கொள்வதில் ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டும். இன்றைய காலகட்டத்தில் அதுவே நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை தருவதாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# முன்னோரின் நல்லாசி வேண்டி வழிபடும் தினம் தை அமாவாசை



## இன்றைய நாளில் தர்ப்பணம், தானம் செய்வதால் முன்னோர் ஆசி கிடைக்கும்

வேர்களைப் பொறுத்தே விருட்சங்களின் உறுதி முடிவு செய்யப்படும் என்கிறது ஆன்மிகம். ஆம், ஒருவனின் சிறப்பான வாழ்க்கை என்பது அவனுடைய முன்னோர்களின் வினைப்பயனைக் கொண்டும் முடிவு செய்யப்படுகிறது.

ஒருவன் தன்னுடைய முன்னோர்களையும், முன்னோர்களின் அம்சமான குல தெய்வத்தையும் வணங்காது விட்டால், மற்ற தெய்வங்களை வணங்கியும் பலனில்லை என்கின்றன நம்முடைய சாஸ்திரங்கள். ஆத்ம சாந்தி அடையாத தன்னுடைய முன்னோர்களுடைய மனக் குறையைத் தீர்க்கும் பொருட்டு பகீரதன் கடும் முயற்சி எடுத்து கங்கையை பூமிக்கு வரவழைத்து தம் முன்னோர்களின் ஆன்மாவை சாந்தப்படுத்தினான் என்கிறது புராணம்.

சாதாரண மானிடரான நாம், நம்முடைய முன்னோர்களின் ஆன்மாவை குளிர்விக்கப் பெரும் பிரயத்தனங்களைச் செய்ய வேண்டியதில்லை. ஆண்டுக்கு மூன்று முறை பித்ருக்களுக்கான வழிபாட்டைச் செய்தாலே போதும் என்கின்றன சாஸ்திர நூல்கள். அதில் முக்கியமான தினம் தை அமாவாசை. பிதுர் லோகத்தில் இருந்து ஆடி அமாவாசை தினத்தில் கிளம்பி வரும் பித்ருக்கள் தங்களுடைய வழித்தோன்றல்களை ஆசீர்வதித்து மீண்டும் மேலோகம் செல்லும் திருநாளே தை அமாவாசை நாள்.

இந்த நாளில் நாம் நம்முடைய பித்ருக்களுக்கான வழிபாட்டை முறையாகச் செய்து, சிறிய அளவிலான தானங்கள் செய்து மகிழ்வித்தால் பெரும் நலங்கள் நம்மை வந்தடையும். தை அமாவாசை நாளில், நாம் செய்யும் ஒவ்வொரு வழிபாடும் நம் பித்ருக்களுப் போய்ச் சேரும். இதனால் அவர்களுடைய ஆசிகளும் நமக்கு வந்து சேரும்.

அவை நமக்கு மட்டுமின்றி, நம் சந்ததிகள் நன்கு தளைத்தோங்க நலலாசிகளும் நமக்கு கிடைக்கப் பெறும். தைஅமாவாசை அன்று பித்ருக்களுக்கு வழிபாடு செய்யாமல் அலட்சியமாக இருப்பின், அவர்களின் சாபத்திற்கு ஆளாகி விட்டால் தெய்வத்தால் கூடக் கருணை காட்ட முடியாது என்கிறது கருட புராணம். தை அமாவாசை நாளில் திதி, தர்ப்பணம், படையல், ஆலய வழிபாடு, தீர்த்தமாடுதல் மட்டுமன்றி மேலும் சில சடங்குகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

பஞ்சகவ்யப் பிரசாதம், பூசணி தானம், வாழைக்காய் சமையல் போன்றவை சில. முக்கியமாக பித்ருக்கள் வழிபாட்டை 'அபரான்ன காலம்' எனப்படும் பகல் 1:12 முதல் 3:36 வரையிலான நண்பகல் காலத்தில் செய்ய வேண்டும் என்பது நியதி. இந்தக் காலத்தில் தான் பித்ருக்கள் பூமிக்கு வந்து நமது வழிபாட்டை ஏற்கிறார்கள். மேலும் 'குதப காலம்' என அழைக்கப்படும் நண்பகல் 11:36 முதல் 12:36 மணி வரையிலான காலத்தில் முன்னோர்களுக்கு வழிபாடு செய்வதும் நல்லதே. ராகு காலம், எமகண்டம் போன்ற விஷயங்கள் பித்ருக்கள் வழிபாட்டிற்கு தொடர்பில்லை என்கிறது சாஸ்திரம்.

இயலாதோருக்கு தானம் கொடுப்பதன் மூலம் நாம் செய்த பாவங்கள், கர்மவினைகள், தீவினைகள் நீங்கும். அன்னதானம், வஸ்திரதானம் செய்ய முன்னோர்களின் ஆசி கிடைக்கும். இந்தியாவில் பித்ரு ஸ்தலங்கள் 7 உள்ளன. அவை, காசி, இராமேஸ்வரம், கயா, திரிவேணி சங்கமம், ஸ்ரீவாஞ்சியம், திருவெண்காடு, ஏழாவதாக திலதர்ப்பணபுரி.

ஜாதகத்தில் பித்ரு தோஷம் இருப்பவர்கள் இராமேஸ்வரம், திருப்புல்லானி மற்றும் கயா அக்ஷயவடம் போன்ற இடங்களில் தில ஹோமம் செய்வது தர்ப்பணம் செய்வது பித்ரு தோஷத்தை போக்கும் என்கிறது சாஸ்திரம். தைஅமாவாசை நாளில் கடற்கரையிலும் நதிக்கரைகளிலும் ஆற்றங்கரைகளிலும் முன்னோருக்கு தர்ப்பணம் செய்வார்கள். கொரோனா கால கட்டுப்பாடுகள் அதிகம் உள்ளதால் நாம் புனித தலங்களுக்கு செய்ய முடியாவிட்டாலும் வீட்டில் இருந்தும் வழிபட்டு தர்ப்பணம் செய்யலாம்.அதாவது வீட்டில் இருக்கும் நீரை கங்கா சுலோகம் கூறுவதன் மூலம் அதைப் புனிதப்படுத்தி நீராடி அதன் பயனை அடையலாம்.

முன்னோர்களின் வருட திதியை மறந்தவர்கள், விடுபட்டு விட்டதென கவலை கொள்வோர் அனைவரும் தை அமாவாசை,ஆடி அமாவாசை போன்ற தினங்களில் தர்ப்பணம் செய்வதன் மூலம் விடுபட்டுப் போன போன பயன்களை அடையலாம்.

எனவே நம் முன்னோர்களுக்கான இப்புனித நற்தினத்தில் அவர்களின் நல்லாசி வேண்டி நாம் ஆற்றும் தர்ப்பணங்கள், தானங்கள் அனைத்தும் நம் சந்ததியினரின் நன்மைக்காகவே என எண்ணி இதயசுத்தியுடன் விரதமிருந்து நற் பலனை அடைவோமாக.

எஸ்.கணேசன் சதீஷ்
கம்பளை

# தெற்காசியாவுக்கான உலகத் தரம் வாய்ந்த நகரத்தை உருவாக்குதல்

கொழும்பு துறைமுக நகரமானது தென்கிழக்கு ஆசியாவின் பிரத்தியேகமான கலப்பு அபிவிருத்தித் திட்டமாகும். இது பசுமையான மற்றும் திறன்மிகு நகரத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 'தென்னாசியாவுக்கான உலகத் தரம் வாய்ந்த நகரத்தை உருவாக்குதல்' என்ற தொலை நோக்குப் பார்வைக்கு அமைவான இத்திட்டம் அபிவிருத்திக்கான சகாப்தத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது.

'கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அமைக்கப்பட்டதிலிருந்து 6 மாதங்களில், ஆணைக்குழு மற்றும் கொழும்பு துறைமுக நகரத் திட்ட நடவடிக்கைகளை உள்ளடக்கிய முன்னேற்ற அறிக்கையை பொதுமக்கள், உள்ளூர் மற்றும் சர்வதேச பங்குதாரர்களுடன் பகிர்ந்து கொள்கின்றது' என Port City Commission பிரதிநிதி தெரிவித்தார்.

செயற்றிட்ட நிறுவனத்தால் தொழில்நுட்ப ரீதியாக முடிக்கப்பட்ட 74 காணிக் கட்டடங்களில் 31 காணிக்கட்டடங்கள் ஆணைக்குழுவிடம் பெறப்பட்டன. 31 காணிக்கட்டடங்களில் 6 காணிக்கட்டடங்களை 99 ஆண்டு குத்தகை அடிப்படையில் விடுவித்ததன் மூலம், 600 மில்லியன் அமெரிக்க டொலர்களின் கூட்டு முதலீட்டு அர்ப்பணிப்புடன் 200 மில்லியன் அமெரிக்க டொலர் விற்பனை வருவாயில் ஈட்டப்படுகின்றது. தன்னை அமைப்பதற்காக பெறப்பட்ட 400 மில்லியன் ரூபா முன்பணத்தை முழுமையாக திருப்பிச் செலுத்துவதற்கு ஆணைக்குழுவிற்கு வருமானம் கிடைத்தது.

உலகின் முன்னணி வரியற்ற (Duty Free) வணிகச் செயற்பாட்டாளர்களில் இருவரால் இயக்கப்படுவதற்காக, பிராந்தியத்தின் முதலாவதும் நகர மையத்தில் அமைந்துள்ளதுமான வரியற்ற (Duty Free) உயர்நிலைக் கடைத்தொகுதியின் கட்டுமானம் தொடங்கப்பட்டது. இது கொழும்பு துறைமுக நகரத்தை பொருட் கொள்வனவுக்கான ஒரு பிராந்திய இடமாக நிலைநிறுத்துகிறது.

ஆணைக்குழு மற்றும் ஆணைக்குழு நிதியத்தின் நிதிகளை நிர்வகிப்பதற்கு சர்வதேச தரத்தில் ஒரு கணக்கியல் நிறுவனம் நியமிக்கப்பட்டது. ஆணைக்குழு மற்றும் ஆணைக்குழு நிதியத்தின் சட்ட பூர்வ கணக்காய்வினை மேற்கொள்வதற்காக சர்வதேச தரத்தில் ஒரு கணக்காய்வு நிறுவனம் நியமிக்கப்பட்டது.

நீதி அமைச்சுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், சர்வதேச வர்த்தகப் பிணக்குத் தீர்வு மையம் ஆரம்பிக்கப்பட்டு சர்வதேச செயற்பாட்டாளர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது. அடையாளம் காணப்பட்ட உந்துதல் துறைகளுக்கு பொருத்தமான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உருவாக்குவதற்கும், நிதி மற்றும் நிதி அல்லாத பகுதிகளில் சிறந்த தரமான நெறிமுறைகளை வடிவமைப்பதற்கும் உலகத் தரம் வாய்ந்த ஆலோசனை நிறுவனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.



## கொழும்புத் துறைமுக நகர ஆணைக்குழுவின் முன்னேற்றம்

பணிப்பாளர் நாயகம் பதவிக்கான சர்வதேச ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பித்தோரில், உரியவரைத் தேர்வு செய்வதற்காக விண்ணப்பங்களில் சிறந்தவற்றைத் தேர்ந்த பின்னர் இடம்பெற்ற இறுதி நேர் காணல்கள்.

ஒருங்கிணைக்கப்பட்ட சிறப்பு துறைமுக நகரத்துக்கான சுமூகமான முதலீட்டாளர் இடமாற்றத்திற்காக ஷெல் நிறுவனங்களை நியமிக்கப்பட்டமை, துறைமுக நகரத்தில் முதலீடு செய்ய நியமிக்கப்பட்ட (பாதுகாப்பான, கட்டுப்பாடற்ற வெளிநாட்டு நாணயக் கணக்குகளை அனுமதிக்கும்) வங்கி உரிம விதிமுறைகள் சாத்தியமான முதலீட்டாளர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நபர்களுக்கான விரைவான ஒப்புதல், முதலீட்டாளர் ஒப்பந்தம் மற்றும் உரிமம் ஆகியவற்றுக்கான செயன்முறைகள், சிறப்பு துறைமுக நகர மின் வணிகம் மற்றும் மெய்நிகர் நகரக் கருத்துருவை பூர்த்தி செய்து, இலங்கை அரசாங்கத்திற்கு சக மதிப்பாய்விற்காக சமர்ப்பித்தமை ஆகியவற்றால் CPCEC சட்டத்தின் 52வது பிரிவின் கீழ் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச பலன்களைப் பெறும் உரிமையுடன், அனைத்து 74 முதன்மை மேம்பாட்டு கட்டடங்களும் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த வணிகங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

துறைமுக நகரத்தினுள் மூலதனப் பொருட்கள் மற்றும் நுகர்பொருட்கள் இரண்டையும் அகற்றுவதற்கான நெறிப்படுத்தப்பட்ட சுங்கச் செயல்முறை வடிவமைக்கப்பட்டுள்ளது. தொடர்புடைய அரசாங்கத் துறைகளுடன் தொடர்பாடல் வசதிக்கான கலந்துரையாடல்களை ஆரம்பித்ததுடன், அதன் ஒரு முன்னோடிச் செயற்றிட்டமாக, துறைமுக நகரின் சர்வதேச மெரினா தளத்தில் முதல் சொகுசுப்படகு 'கலிஸ்மா' வருகைக்கு, இவ்வசதியுடனான முழுச் சேவை வழங்கப்பட்டது.

பல் உள்ளடக்க முதலீட்டாளர் ஈடுபாடுகளுக்காக ஓர் அதிநவீன டிஜிட்டல் தளத்தை வரிசைப்படுத்த முன்னணி உலகளாவிய தொழில்நுட்ப நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்துள்ளது. துறைமுக நகரத்தில் முதலீடு செய்வதற்கும், இலங்கை நிறுவனங்களுடன் பங்குதாரர்களாகவும், அதிக பட்ச அறிவு உருவாக்கம், பரிமாற்றம் மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றை மையமாகக் கொண்ட 'கொழும்பு தொழில்நுட்ப நகரம் 'கருத்தை மையமாகக் கொண்டு, இலங்கையை பசுமையான தகவல் தொழில்நுட்ப மையமாக உருவாக்கும் தேசத்தின் உந்துதலை ஊக்குவிற்பதற்காக, உலகத் தரம் வாய்ந்த தொழில்நுட்ப நிறுவனங்களை ஈர்ப்பதற்கு உகந்த கொள்கைகளை உருவாக்குவதன் மூலம், துறைமுக நகருக்கான உந்துதல் துறையாக IT/KPO இனை அடையாளப்படுத்துவதற்கு SLASSCOM உடன் ஒத்துழைத்தமை, பல சர்வதேச விளம்பர நிகழ்வுகளுக்கு (ரெட்புல் அவுட்ரிக்ட் 2021, FIFA ஃபெடரேஷன் தலைவர் மற்றும் பிரதிநிதிகள் வருகை, LPL கிரிக்கெட் தொடக்கம், ஆசிய ரக்பி தலைவர் மற்றும் பிரதிநிதிகள் வருகை) மற்றும் பல தற்காலிக நடவடிக்கைகளுக்கு உரிமம் வழங்குதல் போன்றவற்றின் மூலம் செயற்றிட்டத்தின் காண்நிலையை மேம்படுத்த முடிகின்றது.

துறைமுக நகரை, எதிர்கால காலநிலைக்கு ஏற்ற நகரமாக தனித்துவப்படுத்துவதில் தரத்தை உயர்த்துவதற்கு, உள் மற்றும் வெளிப்புற நிலைத்தன்மை சார் பட்டறைகள் நடத்தப்பட்டன. வணிகச் செயற்பாடாக மற்றும் அவசரகால நிலையில் , துறைமுக நகரத்திற்குச் செல்லும் மற்றும் அங்கிருந்து வரும் விமான இயக்கத்திற்கான விமானக் கட்டுப்பாட்டு முகாமைத்துவம் தொடர்பில், இலங்கை விமானப்படையுடன் இணைந்து செயற்படுகின்றமை, கடல்வழி அணுகலுக்கான நெறிமுறைகளை வரையறுப்பது மற்றும் துறைமுக நகரத்தின் உள்ளக நீர்வழிகள் தொடர்பாக இலங்கை கடற்படையுடன் ஒரு சாத்தியக்கூறு ஆய்வை நடத்தியது.

கட்டுப்படுத்தப்பட்ட பரிமாற்றக் கட்டுப்பாடுகள் இல்லாதது, தனிப்பட்ட வருமானத்தில் பூஜ்ஜிய வரியுடன் கூடிய முன்னுரிமை வரி அமைப்பு,

வெளிநாட்டு நாணயத்தில் ஊதியம், மற்றும் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கான நெகிழ்வான நீண்ட கால விசாக்கள் மற்றும் இலங்கையின் வாழ்க்கை முறை ஆகியவை சர்வதேச முதலீட்டாளர்களுக்கு குறிப்பிடத்தக்க வகையில் உருவாக்கப்பட்டுள்ளன.

பெப்ரவரி 2022 இல் கொழும்பு சர்வதேச நிதி நிலையத்தை நிறுவியமை மற்றும் அதனுடன் தொடர்புடைய பரிமாற்றங்கள் விரைவில் துறைமுகநகர் ஊடாக நிதி நிலையத்தின் செயற்பாட்டினைத் தூண்டி, வேலைவாய்ப்பை உருவாக்கி, காலப்போக்கில் பரந்த பொருளாதாரத்திற்கு கணிசமான மதிப்பைச் சேர்க்கும்.

பௌதீக உள்கட்டமைப்பு மேம்பாட்டில் கட்டாய மதிப்பு முன்மொழிவுகளை அடையாளம் கண்டு உருவாக்குதல், வங்கி மற்றும் நிதி சேவைகள், அறிவு ஏற்றுமதி மற்றும் பிற முக்கிய துறைகள், ஒவ்வொன்றிலும் புகழ்பெற்ற நங்கூரம் முதலீட்டாளர்களை குறிவைத்தல் ஆகியன மீது தற்போது எமது கவனம் குவிந்துள்ளது.

ஆணைக்குழுவானது வணிகங்கள், தொடர்மாடிக் குடியிருப்பு உரிமை, விளையாட்டு மற்றும் ஓய்வுநேர நடவடிக்கைகள் மற்றும் நகர நிர்வாகத்தை அமைப்பதில் வெளிப்படையான மற்றும் திறமையான செயன்முறைகளுக்கு பாடுபடுகிறது.

# தை அமாவாசை

தை அமாவாசை அன்றுதான் அன்னை அபிராமி அபிராமிப் பட்டருக்காக வானில் இருள் நீக்கி ஒளி சேர்த்தாள். எனவே, தை அமாவாசை நாளில் அம்பிகையை வழிபட நம் வாழ்வில் சூழ்ந்திருக்கும் துன்ப இருள் நீங்கி இன்ப ஒளி சூழும் என்பது நம்பிக்கை. இந்த நாளில் இறைவழிபாட்டோடு பித்ரு வழிபாடும் செய்வது மிகவும் அவசியம். ஆடிமாத அமாவாசை அன்று பித்ருக்கள் பித்ரு லோகத்திலிருந்து பூலோகத்துக்குப் புறப்படுகிறார்கள். இரண்டு மாதப் பயணத்தில் புரட்டாசி மாதம் அவர்கள் பூமிக்கு வந்து சேர்கிறார்கள்.






புரட்டாசிமாதம் முன்னோர்கள் பூமியில் உறையும்காலம். அதனால்தான் அந்த மாதத்தைப் புனிதமான மாதமாகக் கருதிக் கடைப்பிடிக்கிறோம். உத்தராயண புண்ணியகாலமான தை அமாவாசை அன்று அவர்கள் மீண்டும் தங்களின் உலகத்துக்குப் புறப்படுகிறார்கள். நம் வீடுகளுக்கு வந்து தங்கியிருந்து கிளம்பும் உறவினர்களை எப்படி நாம் நல்லமுறையில் போற்றி அனுப்புவோமோ அப்படி பித்ருக்களுக்கு தை அமாவாசை நாளில் தர்ப்பணம் முதலிய வழிபாடுகளைச் செய்து வழிபட்டு அனுப்ப வேண்டும். அவ்வாறு செய்தால் அவர்களின் ஆசீர்வாதம் நமக்கு முழுமையாகக் கிடைக்கும்.





மருதானை கப்பித்தாவத்தை ஸ்ரீ கைலாசநாதர் தேவாலயத்தின் தலைமையில் ஸ்ரீ கைலேஸ்வரம் அறநெறி பாடசாலை அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் ஸ்ரீகைலாசநாதன் சுவாமி தேவஸ்தான பரிபாலனசபை சார்பில் சி. மகேந்திரன் செட்டியார், த. ஹரிசுதன், ம. உமாதர்ஷன், மருதானை இந்துக்கல்லூரி அதிபர் கே. செல்வகுமார், ஆலய முகாமையாளர் க. இராமநாதன், ஆலய பிரதம குருக்கள், யோ. ரஞ்சித குருக்கள், தி. விக்னேஸ்வரராஜ சர்மா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மானுடவியல்

(தொடர்)

### கண்ணப்ப நாயனார்



58

**பெயர்:** திண்ணன்
**குலம்:** வேடர்
**பூசை நாள்:**
தை மிருகசீருஷம்
**அவதாரத் தலம்:** உடுப்பூர்
**முக்தித் தலம்:** திருக்காளத்தி

**வரலாறு:**

அறுபத்து மூன்று நாயன்மார்களில் குறிப்பிடடு என்னை வெகுவாக கவர்ந்தவர் கண்ணப்ப நாயனார். அதற்கு காரணம் காளத்தி நாதன் (சிவலிங்கம்) கண்களில் ரத்தம் வடிகிறது என்று இந்த உலகத்தில் அனைத்து அற்புதமான காட்சிகளை காணும் தன் இரு கண்களையே அம்பு கொண்டு எடுத்து



சிவலிங்கத்தில் வைத்து இன்று வரை தினமும் இரவு காளத்தி நாதனை வழிபடுபவர் கண்ணப்பர் நாயனார்.

கண்ணப்பரையும் அவர் வரலாற்றையும் அவர் சிவ பக்தியும் ஒரு பதிவில் விளக்க இயலாது இதனால் கண்ணப்பரை பற்றி இரு பதிவுகளாக காணலாம்.

பொத்தப்பிநாட்டிலே, உடுப்பூரிலே, வேடர்களுக்கு அரசனாகிய நாகன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் மனைவிபெயர் தத்தை. அவ்விருவரும் நெடுங்காலம் புத்திர பாக்கியம் இல்லாமையால் அதி துக்கங்கொண்டு குறிஞ்சி நிலத்திற்குக் கடவுளாகிய சுப்பிரமணியசுவாமியுடைய சந்நிதானத்திலே சேவற்கோழிகளையும், மயில்களையும் விட்டு, அவரை வழிபட்டு வந்தார்கள்

சுப்பிரமணியசுவாமியுடைய திருவருளினாலே தத்தையானவள் கருப்பவதியாகி, ஒரு புத்திரனைப் பெற்றாள்.

அப்பிள்ளையை நாகன் தன் கையிலே எடுத்தபொழுது திண்ணெனவாயிருந்தபடியால் திண்ணன் என்று பெயரிட்டான். அத்திண்ணனார் வளர்ந்து உரிய பருவத்திலே வில்வித்தை கற்கத் தொடங்கி, அதிலே மகாசமர்த்தராயினார், நாகன் வயோதிகனானபடியால், வேட்டை முயற்சியிலே இளைத்தவனாகி, தன்னதிகாரத்தைத் தன்புத்திரராகிய திண்ணனாருக்குக் கொடுத்தான். **(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**

### திருமண நாள் பார்க்கையில் கவனிக்க வேண்டியவை

**18857) திருமணத்திற்கு நாள் பார்க்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விதிகளுள் முதல் விதி என்ன?**
திருமணம் மல மாதத்தில் இடம் பெறக்கூடாது.

**18858) மலமாதம் என்பது என்ன?**
இரண்டு அமாவாசை அல்லது இரண்டு பௌர்ணமி ஒரே மாதத்தில் வருவது.

**18859) இதில் விதிவிலக்கானது எது?** சித்திரை வைகாசி

**18860) இரண்டாவது விதி என்ன?**
சித்திரை, வைகாசி, ஆனி, ஆவணி, தை, பங்குனி தவிர இதர மாதங்களில் திருமணம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது.

**18861) மூன்றாவது விதி என்ன?**
இயன்றவரை சுக்கில பட்ச காலத்திலேயே திருமணம் செய்வது நல்லது என்பது

**18862) நான்காவது விதி என்ன?**
புதன், வியாழன், வெள்ளி போன்ற சுப ஆதிபத்தியமுடைய கிழமைகள் மிக ஏற்றவை.

**18863) ஏனைய கிழமைகள் எப்படி?**
அவ்வளவு உகந்தவை அல்ல.

**18864) ஐந்தாவது விதி என்ன?**
ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், தனுசு, மீனம் ஆகிய சுப லக்கினங்களில் மட்டுமே திருமணம் நடத்த வேண்டும் என்பது தான்

**18865) ஆறாவது விதி என்ன?**
துவிதியை, திரிதியை, பஞ்சமி, ஸப்தமி, தசமி, திரயோதசி ஆகிய சுப திதிகள் தவிர இதர திதிகளை தவிர்ப்பது

**18866) ஏழாவது விதி என்ன?**
முகூர்த்த லக்கினத்துக்கு 7ம் இடம். முகூர்த்த நாளன்று சுத்தமாக இருக்க வேண்டும்.

**18867) எட்டாவது விதி என்ன?**
அக்கினி நட்சத்திரம், மிருத்யூ பஞ்சகம், கசரயோகங்கள் போன்ற காலகட்டத்தில் திருமணம் நடத்தக்கூடாது.

**18868) ஒன்பதாவது விதி என்ன?**
திருமணத்தின் போது குரு, சுக்கிரன் போன்ற சுபகிரகங்கள் திருமண லக்கினத்துக்கும் மணமக்களின் ஜனன ராசிக்கும் எட்டாம் வீட்டில் இடம் பெற்றிருக்கக் கூடாது.

**18869) பத்தாவது விதி என்ன?**
திருமணநாள் மணமக்களின் சந்திராஷ்டம தினமாக இல்லாமல் இருப்பது மிகமிக முக்கியமான விதி.

**18870) பதினொன்றாம் விதி என்ன?**
மணமக்களின் ஜனன நட்சத்திர நாளிலும் 3, 5, 7, 12, 14, 16, 21, 23, 2வதாக வரும் நட்சத்திர தினங்களிலும் திருமணம் நடத்தக் கூடாது.

**18871) பன்னிரண்டாம் விதி என்ன?**
கடைசியாக மணமக்களின் பிறந்த திகதி அல்லது கிழமைகளிலும் கல்யாணம் பண்ணக்கூடாது. திருமண நாள் பார்க்கையில் கவனிக்க வேண்டியவை.





கொழும்பு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சிவபால ஜோகி மஹரஜ் குழுவினரின் ஏற்பாட்டில் சுவாமியின் 87ஆவது ஜெயந்தி விழா பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் ஆலய தியான மண்டபத்தில் பக்த சீடர்கள் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை மாலை நடைபெற்றது. படத்தில் சுவாமியின் அலங்கரிக்கப்பட்ட பக்தி பூர்வமான காட்சியையும், பஜனை குழுவினரின் பஜனை இசையையும் கலந்து கொண்ட பக்தர்களையும் காணலாம்.

## நாதப் பிரம்ம யோகம் - 04



சுரத்தின் ஒத்திசைவு உலகில் உள்ள அனைத்திலும் இயங்குகிறது. ஒவ்வொரு மரம், செடி, அத்தனை பொருட்களிலிருந்தும் ஒவ்வொரு சுரம் வெளிப்பட்டுக் கொண்டு தான் இருக்கிறது. இவை அனைத்தையும் அறிந்து உணரும் ஆற்றல் எமக்கு இருப்பதில்லை. இதைப்போல் எமது உடலில் ஜட த் தன்மையும், சைதன்ய (உணர்வுத்) தன்மையும் பலவிதமான நாதங்களை உருவாக்குகிறது. இந்தநாதத்தின் ஸ்வரத்தினை நாம் சாதனை மூலம் அறிவதற்கே நாதயோகம் என்ற முறை ரிஷிகளால், சித்தர்களால் உருவாக்கப்பட்ட து.

இசையில் பாரம்பரிய வரலாற்றினைஎடுத்து ஆராய்ந்தோமானால் அது இறைபக்தியுடன் தொடர்புடைய ஒன்றாக இருக்கும். எம்மில் கருணையை வளர்ப்பதும், தூய அன்பினைஉருவாக்குவதும், இறைவன் மேல் ஆழ்ந்த பக்தியை உருவாக்குவதும் இதன் நோக்கம். இது இறைசக்தியுடன் கூடிய ஒரு தெய்வீகக் கலையாக பழங்காலத்தில் இருந்திருக்கிறது. பாரத ரிஷிகளிற்கு இசை என்பது தெய்வீக நிலையை அடையும் ஒரு கலையாக வேத காலத்தில் இருந்திருக்கிறது. பக்தி யுகத்தில் வாழ்ந்த அனைத்து ஞானிகளும், யோகிகளும் பக்திப் பாடல்களை எழுதுவதோ அல்லது பாடுவதையே தமது இறை சாதனையாக வைத்திருந்திருக்கிறார்கள். இந்தப் பாரம்பரியம் தேவ ரிஷி நாரதரில் தொடங்கி சூர்தாஸ், துளசிதாஸர், மீரா, கபீர்வரை தொடர்கிறது.

கல்வித் தெய்வமான சரஸ்வதியின் கைகளில் ஒரு கையில் புத்தகமும், மறுகையில் வீணையும் இருப்பதாக வரையப்பட்டிருக்கிறது. இது அறிவினது இரண்டு பெரும் பிரிவுகளைக் குறிக்கிறது.

சப்த சாஸ்திரம் என்பது அறிவு சொற்களினூடாக வெளிப்படுத்துவது. ஸ்வர சாஸ்திரம் என்பது அறிவினை இசையினூடாக வெளிப்படுத்துவது. இந்த இரண்டு அறிவுப் பாதைகளுக்கூடாக நாம் எமது எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் தூய்மைப்படுத்தி ஒளிரச் செய்ய முடியும்.

ஆச்சாரியர் அந்தந்த வரதன் அவர்கள் இந்துக் கடவுளர்களில் கைகளில் இருக்கும் பொருட்களின் தெய்வீக அர்த்தங்களையும் ஆற்றல்களையும் விளக்கியுள்ளார்.

சிவனின் கையில் இருக்கும் உடுக்கை,கிருஷ்ணன் கையில் இருக்கும் புல்லாங்குழல் இவை எல்லாம் நாதப் ப்ரம்மத்தின் மூலம் மனதையும், உணர்ச்சியையும் எப்படித் தூய்மைப்படுத்தி தெய்வீகத் தன்மை அடைவது என்பதன் விளங்கங்களே.

பண்டைய பாரத கலாசாரத்தில் இசை என்பது மனித கலாச்சாரத்தின் அடிப்படை அனுபவமாக கருதப்பட்டிருக்கிறது. நாரத சம்ஹிதையில் இப்படிக் குறிப்பிடப்படுகிறது. 'ஒரு மனிதனிற்கு இசை,கலை, இலக்கியம் ஆகிய மூன்றும் தெரியாதவன் வாலில்லாத விலங்கு போன்றவன்' பறவைகள், தேனீக்கள், அந்துப்பூச்சி, மான் எனஅனைத்தும் இசைக்கின்றன. இந்த இனிய இசை இயற்கை எங்கும் நிறைந்திருக்கிறது. **(தொடரும்)**

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்









கண்டி பன்விலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது. கொரோனா தொற்று அபாயம் காரணமாக பால்குட பவனி, தீ மிதிப்பு வைபவங்களைத் தவிர்த்து இந்நிகழ்வு வெகு விமரிசையாக இடம் பெற்றது. நிகழ்வுகள் சிலவற்றை படங்களில் காணலாம். (படங்கள்: புசல்லாவை தினகரன் நிருபர் ம நவநீதன்)

# கொரோனா அதிகரித்து நாடு முடக்கப்பட்டால் மாதசம்பளம் பெறுவோர் நெருக்கடியை எதிர்கொள்வர்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்து நாடு முடக்கப்படுமானால் மாதாந்த சம்பளம் பெறுவோர் கூட நெருக்கடிக்கு ஆளாவர் என சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான நிலைக்கு நாட்டைக் கொண்டு வருவதை தடுக்கும் பொறுப்பு நாட்டு மக்களுக்கே உள்ளது என்றும் தெரிவித்துள்ள அவர், சுகாதார வழிமுறைகளை முறையாகப் பின்பற்றி முழுமையான தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டால் அத்தகைய நிலையைத் தவிர்க்கலாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.



நாட்டில் எந்த கொரோனா வைரஸ் பரவல் இடம்பெறுகிறது என சிந்திக்காமல் சுகாதார பாதுகாப்பை முதன்மையாகக் கொண்டு செயற்படவேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ள அவர், பெரும்பாலானவர்களின் செயற்பாடுகள் தொடர்பில் திருப்தியுற முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமூகத்தில் பரப்பப்பட்டு வரும் பல்வேறு கருத்துக்களை வைத்துக் கொண்டு சிலர் மூன்றாவது தடுப்பூசியை பெற்றுக்கொள்வதில் அசமந்தம் காட்டி வருவதை காண முடிவதாக குறிப்பிட்டுள்ள அவர்,அவ்வாறான தவறான கருத்துக்களுக்கு அகப்பட வேண்டாம் என்றும் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

நான்கு மாதங்களுக்குப் பின்னர் நேற்று முன்தினம் நாட்டில் 942 கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்பதை குறிப்பிட்டுள்ள அவர், ஒமிக்ரோன் திரிபு வைரஸ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பரவும் நிலையில் முறையான சுகாதார வழிகாட்டல்களை அனைவரும் பின்பற்றுவது முக்கியம் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மூன்றாவது தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாதவர்கள் கண்டிப்பாக அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் அல்லது அருகிலுள்ள வைத்தியசாலைகளுக்கோ சென்று தமக்கான தடுப்பூசியைப்பெற்றுக் கொள்ளுமாறும் அவர் நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார். (ஸ)



ஜோன் டி சில்வாவின் 100 வது வருட நினைவு தின நிகழ்வு எல்பின்ஸ்டன் மண்டபத்தில் சனிக்கிழமை (29) காலை இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜோன் டி சில்வாவின் பாடல்கள் அடங்கி இறுவட்டை அமைச்சர் பாடலாசிரியர் ஜயந்த அரவிந்தவுக்கு அமைச்சர் வழங்குவதையும் அருகில் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் மற்றும் பிரமுகர்களை படங்களில் காணலாம்.

## அஷ்ரப் ஏ சமதின் தந்தை காலமானார்

பிராந்திய ஊடகவியலாளர் அஷ்ரப் ஏ சமட்டின் தந்தை ஓய்வுபெற்ற தொழிநுட்பக் கல்லூரி அதிபர் எம்.எச்.ஏ.சமட் நேற்று ஞாயிற்றுக்கிழமை(30) மாலை காலமானார்.

அன்னாரின் ஜனாசா சென்மேரிஸ் றோட், கல்கிஸ்ஸை இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. இன்று தெஹிவளை முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்படும்.

## வணிக விவசாய... (03 ஆம் பக்கத் தொடர்)

அந்தத் தவறைத் திருத்த நாம் வெட்கப்படத் தேவையில்லை. தவறு இன்னும் சரி என்று நினைத்து வணிக விவசாயத்துடன் விளையாடுவது வெட்கக்கேடானது. உர மானியமாக வழங்கப்படும் தொகையை விட விவசாயிகள் தற்போது இழப்பீடு தொகையாக வழங்க வேண்டியுள்ளது.

இது தவறின் அளவைக் காட்டுகிறது. விவசாயிகளுடனும் விவசாயத்துடனும் விளையாட முடியாது. இது ஒட்டுமொத்த மக்களின் பசியோடும், நாட்டின் உணவுப் பாதுகாப்போடும் பிணைக்கப்பட்டுள்ளது. எனவே நினைத்தவாறு முடிவு எடுக்க எங்களுக்கு உரிமை இல்லை என்றார்.

## புற்றுநோயால் பாதிக்கப்பட்ட... (03 ஆம் பக்கத் தொடர்)

இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ள டீ.என்.சச்சித் சிதுமின மாணவனின் முழங்கால் பகுதியில் எலும்பு அகற்றப்பட்டுள்ள நிலையில், செயற்கை எலும்பு பொருத்தப்படுவதற்கு 34 இலட்சம் ரூபாய் செலவாகும் என வைத்தியர்கள் பரிந்துரைத்துள்ளனர்.அதுவரை மாதாந்தம் வழங்கப்படும் தடுப்பூசியின் மதிப்பு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாகும். குறித்த முதலாவது தடுப்பூசியை பாதுகாப்பு அதிகாரி ஒருவரின் ஊடாக மாணவனின் வீட்டிற்கே கொண்டு சென்று வழங்கிய பிரதமரின் பாரியார் ஷிரந்தி விக்ரமசிங்க ராஜபக்ஷ, அதன் இரண்டாவது ஊசியை நேற்று (30) அலரி மாளிகையில் வைத்து மாணவனின் தாயார் ஆர்.எம்.சாந்தனி லக்மினியிடம் வழங்கினார்.

## மிளகாய்த் தூள் தூவி... (03 ஆம் பக்கத் தொடர்)

தெரிய வந்துள்ளது. இந்த சம்பவத்தின் பின்னர், சந்தேக நபர்களின் வீடுகளை சிலர் தீயிட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## செலுத்தத் தவறிய வாடகை... (03 ஆம் பக்கத் தொடர்)

ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளப்பட்ட விமானத்திற்கு மேலும் 60 லட்சம் ரூபா நிதி செலுத்தப்படவேண்டியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவரை இன்னும்அந்த நிதி செலுத்தப்படவில்லை என்றும் அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஸ)

## ஜனாதிபதி செயலாளருடனான... (03 ஆம் பக்கத் தொடர்)

சட்டவரைவு ஒன்று முன்வைக்கப்பட்டிருந்தது. அந்தக் குழுவின் தலைவர் வரி நிர்வாக மற்றும் வரி அறவிடும் தலைவராவார்.

இதற்கு எதிராக கடந்த சில தினங்களாக தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இது தொடர்பில் தேசிய வருவாய் மற்றும் கலால் அதிகாரிகள் மற்றும் தொழிற்சங்க தலைவர்கள் கூறியதாவது ,அமைக்கப்பட்ட பிரிவின் தலைவருக்கு அவ்வாறான அதிகாரம் பெற்றுக் கொடுக்க கூடாது என இது தொடர்பாக வெளிப்படையாக தொழிற்சங்கங்கள் கருத்து தெரிவித்திருந்தன. இது தொடர்பாக கருத்து தெரிவித்த ஜனாதிபதி செயலாளர் அதில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு தீவிர கவனம் செலுத்துவதாக கூறினார்.

அதன்படி வரி அறவிட விசேட பிரிவு ஒன்று அமைக்கப்பட்டாலும் வரி நிர்வாக மற்றும் செயற்பாடு தற்போது மேற்கொள்ளப்படும் விதத்திலேயே தேசிய வருவாய் திணைக்கள ஆணையாளர் நாயகத்துக்கும் மற்றும் கலால் திணைக்கள ஆணையாளர் நாயகத்துக்கும் பெற்றுக் கொடுக்கும் வழிவகை ஒன்றை எதிர்காலத்தில் தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

## வழங்கும் பொறுப்பை... (03 ஆம் பக்கத் தொடர்)

மேற்கொள்வதற்கு ஏற்கனவே தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு இருந்தாலும் மத்திய வங்கி ஆளுநரின் அந்த உறுதிமொழியையடுத்து அந்த தீர்மானம் மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கைத்தொழில் மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதற்காக மாதாந்தம் 40 கோடி டொலர் நிதி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு தேவைப்படுவதாகவும் மின்சார உற்பத்திக்கான டீசல் மற்றும் மசகு எண்ணெயை பெற்றுக்கொடுப்பதற்கு மேலும் 5 கோடி டொலர் தேவைப்படுவதாகவும் பெற்றோலிய வளத்துறை அமைச்சர் உதய கம்மன்பில இதன்போது தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க எரிபொருள் இறக்குமதிக்காக மாதாந்தம் 45 கோடி அமெரிக்க டொலர் தேவைப்படுவதாகவும் அது எமது மாதாந்த ஏற்றுமதி வருமானத்தில் 45 வீதம் ஆகும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஏற்றுமதி வருமானத்தில் இந்தளவு நிதியை எரிபொருளுக்காக செலவழிப்பது சிறந்ததல்ல என தெரிவித்துள்ள அவர், எரிபொருள் பாவனையை மட்டுப்படுத்துவது தொடர்பில் மாற்று நடவடிக்கைகளை உடனடியாக இனங்காண வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஸ)

## நடமாடும் சேவை...

கடந்த மூன்று வாரங்களாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கொரோனா வைரஸ் தொற்றுநோயாளிகள் அதிகமாக இனங்காணப்பட்டு வருகின்றனர். மக்கள் மிக விரைவாக பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் பணிப்புரைக்கமைய இராணுவத்தினரின் தலைமையில் முப்படையினரும் இணைந்து நாட்டில் அனைத்து பிரஜைகளுக்கும் தடுப்பூசியைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் விசேட மத்திய நிலையங்களை ஆரம்பித்துள்ளோம். அத்துடன் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு நடமாடும் தடுப்பூசி செயற்திட்டத்தை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

## ஐ.ஓ.ஸியிடமிருந்து...

இறக்குமதி செய்வதில் சிக்கல் ஏற்பட்டது. மின் உற்பத்திக்குத் தேவையான எரிபொருளை பெற்றோலியக் கூட்டத்தாபனம் வழங்காத நிலையில் கடந்த தினங்களில் நெருக்கடி நிலை உருவானது.இந்த நிலையில் ஐஓசியிடம் எரிபொருளை பெறுவது குறித்து மின்சார சபை பேச்சு நடத்தி வருவது தெரிந்ததே. (பா)

## குழந்தைகளை பாதிக்கும் ...

ஏற்பட்டால் குழந்தைகள் இறக்க கூட நேரிடும் என கொழும்பு ரிட்ஜ்வே வைத்தியசாலையின் குழந்தைகள் நல மருத்துவர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

இந்த நோய் மிகவும் தீவிரமாக இருக்கலாம் எனவும் இதனால் அனைத்து புலன்களும் செயலிழந்துவிடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். 12 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவதன் மூலம் இந்த நோயின் அபாயத்தைக் குறைக்கலாம் என அவர் மேலம் தெரிவித்துள்ளார்.

## உணவுத் தட்டுப்பாடு...

தொடர்ந்துரையாற்றிய அமைச்சர்,

இரசாயன உர நிறுவனம் ஒன்றின் பணிப்பாளராக கடமையாற்றும் பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என தெரிவித்துள்ளார்.

அவ்வாறான உணவுப் பற்றாக்குறை ஏற்படாது என நான் பொறுப்புடன் தெரிவிக்கிறேன். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச கோவிட் நிலைமையிலும் 20 மாதங்கள் நாட்டை ஆட்சி செய்து வருகிறார்.

உலகப் பொருளாதார நெருக்கடியை நாம் சந்தித்து வருகிறோம். அனைத்தையும் ஒதுக்கி வைத்துவிட்டு மக்களை வாழ வைப்பதே ஜனாதிபதியின் முக்கிய நோக்கங்களாகும். இன்னும் சிறிது காலத்தில் 85% மக்களுக்கு மூன்று தடுப்பூசிகளையும் வழங்கிய உலகின் ஒரே நாடாக இலங்கை மாறும். தற்போது கொவிட் உயிரிழப்புகளினது எண்ணிக்கை குறைந்துள்ளது. மரணிப்பதை விட வாழ்வதே மிக முக்கியமான விஷயம். மகிந்த ராஜபக்ஷ அவர்கள் 30 வருடகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து இந்த நாட்டில் பயங்கரவாதம் மற்றும் குண்டுகள் பற்றிய அச்சத்தை இல்லாதொழித்தார்.

அத்துடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொரோனா மரண பயத்தில் இருந்து மக்களை விடுவித்தார் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## 25 மில்லியன் பெறுமதியான...

சந்தேகநபர்களின் பைகளில், மிக சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 25 மில்லியன் ரூபா வெளிநாட்டு பணம் கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில், 95000 அமெரிக்க டொலர், 18000 யூரோ, 37000 சவூதி ரியால் அடங்குவதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணத்தை அரசுடமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் சுங்கத்திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

## ராஜாங்க அமைச்சர்...

கோவி ட் தொற்று ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே , கொட்டாவ இடைப்பாதை யில் இருந்து அதிவேக நெடுஞ்சாலைக்குள் நுழையும் வாகன ங்க ளுக்கான நேற்று டிக்கெட்டுகள்விநியோகிக்கப்படவில்லை என அறிய வருகிறது.

இதே வேளை குமார வெல்கம உள்ளிட்ட குழுவினர் புதிய கட்சி யொன்றை உருவாக்க உள்ளதோடு எதிர்வரும் சுதந்திர தினத்தன் று அந்தக் கட்சியின் விசேட நிகழ்வொன்று ஹெரகொல்லவில் ந டை பெ ற ஏற்பாடாகியிருந்தது தெ ரிந்ததே. மீண்டும் கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில் தேவையற்ற பயணங்களை தவிர்க்குமாறு சுகாதார தரப்பு கோரியுள்ளது தெரிந்ததே. (பா)

## கச்சதீவு திருவிழாவிற்கு...

திருநாளைக் குறிக்கும் வகையில், வருடாந்த சமயக் கொண்டாட்டங்களில் கொவிட் நிலைமை காரணமாக இந்த ஆண்டு இந்திய யாத்ரீகர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கே.மகேசன் தலைமையில் யாழ்ப்பாண ஆயர் ஆர்.டி. அருட்தந்தை ஜஸ்டின் ஞானப்பிரகாசம், சுகாதார அதிகாரிகள் மற்றும் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோர் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

சுகாதார அதிகாரிகளின் ஆலோசனையின் அடிப்படையில், மார்ச் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் நடைபெறும் நிகழ்வில் கலந்து கொள்ள இந்திய யாத்ரீகர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று க. மகேசன் தெரிவித்தார்.

இந்தநிலையில் மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் மறைமாவட்டங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 500 உள்ளூர் பக்தர்கள், இரண்டு அளவுகள் மற்றும் பூஸ்டரைப் பெற்றதற்கான தடுப்பூசி சான்றிதழ்களை சமர்ப்பித்தால், நிகழ்வில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள்.

இதேவேளை கொவிட்19 பரவுவதை தடுப்பதற்காக கடுமையான வழிகாட்டுதல்கள் பின்பற்றப்பட்டு வருவதாக நெடுந்தீவு பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசோதி தெரிவித்தார்.

இதற்கிடையில் இந்திய யாத்ரீகர்கள், கச்சத்தீவு நிகழ்வில் பங்கேற்பதைத் தடுக்கும் முடிவிற்கு ராமேஸ்வரம் மோட்டார் படகு சங்கம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

கடந்த 2020ம் ஆண்டு, கச்சத்தீவு திருவிழா கொண்டாடப்பட்டபோது அதில் 3,000 இந்திய யாத்ரீகர்களும் 7,000 இலங்கை யாத்ரீகர்களும் பங்கேற்றனர்.

## இரண்டு மாதங்களின்...

ஆனந்து விஜேவிக்ரம தெரிவித்துள்ளார். சுகாதார அதிகாரிகள் இதற்கு முன்னர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்கள் ஆறு மாதங்களுக்குப் பின்னரே மூன்றாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவித்துள்ள நிலையில் விசேட மருத்துவ நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம நேற்று இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி செயற்திட்டத்தின் வெற்றிகரமான ஒரு வருட நிறைவையொட்டி ஐடிஎச் வைத்தியசாலையில் நடைபெற்ற நிகழ்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ஸ)

## கெரண்டி எல்ல ஆற்றில்...

எனவும் அடம்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர். அட்டாம்பிட்டிய தோட்ட பகுதியை சேர்ந்த ராஜா டேவிட் குமார் (23), சிவ சுப்ரமணியம் காஞ்சனா (21), பவாணி (22), சிந்து (18) மற்றும் சிரியா (20) ஆகியோரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

அட்டாம்பிட்டிய தோட்டத்தின் முதலாம் பிரிவில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பதினொரு பேர் கொண்ட குழுவொன்று நேற்றுமுன்தினம் கெரண்டி எல்ல நீர்வீழ்ச்சிக்கு அருகில் உள்ள குளத்தில் குளிப்பதற்குச் சென்ற போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த ஆற்றில் மிகவும் ஆழமாக உள்ளதால் யாரும் அதில் குளிப்பதில்லை என அட்டாம்பிட்டிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அட்டாம்பிட்டிய பொலிஸாரும், பதுளை எலதலுவ இராணுவத்தினரும் இணைந்து குறித்த நான்கு பேரின் சடலங்களையும் மீட்டுள்ளதோடு காணாமல் போன சிறுமியின் சடலத்தை தேடும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த நால்வரின் சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக அட்டாம்பிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை அட்டாம்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## படுகொலை செய்யப்பட்ட..

ஒழுங்கையில் அமைந்துள்ள வீடொன்றில், தனிமையில் வசித்து வந்த 78 வயதுடைய சுலைமான் செய்யது முஹாரி என்பவர் கடந்த வியாழக்கிழமை (27) அதிகாலை கொலை செய்யப்பட்டு, அவர் வசமிருந்த தங்க ஆபரணங்கள் மற்றும் பணம் என்பன கொள்ளையிடப்பட்டிருந்தன. இதையடுத்து, அன்றைய தினம் மாலை கல்முனை நீதவான் சம்பவ இடத்திற்கு சென்று உத்தரவிட்டதன் பேரில் குறித்த பெண்ணின் சடலம் பிரதேச பரிசோதனைக்காக அம்பாறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. அங்கு அவரது உடலில் இருந்து பெறப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரி மட்டக்களப்பு கொவிட் பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. அந்த பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கை சனிக்கிழமை (29) மாலை அம்பாறை வைத்தியசாலைக்கு கிடைக்கப் பெற்றதாகவும் அதில் தனது தாய்க்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக தங்களுக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் புதல்வர் அலியார் சௌபர் தெரிவித்தார்.

இதையடுத்தே தமது தாயின் ஜனாஸா நேற்று மஜ்மா நகரில் நல்லடக்கம் செய்யப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை கொலையாளி இன்னும் கண்டுபிடிக்கப்படாத நிலையில், இச்சம்பவம் தொடர்பான பொலிஸ் விசாரணைகள், குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சாய்ந்தமருது பொலிஸார் தெரிவித்தனர்.

## மாற்று வழிமுறைகளை அரசு...

இறக்குமதி செய்வதற்கு தேவையான டொலர் கையிருப்பை இல்லாமற் போக செய்கிறது.

எவ்விதத்திலாயினும் கடன் தவணைகளில் எவ்வித தாமதமும் ஏற்படுவதனை தவிர்க்கும் அரசாங்கத்தின் குறிக்கோளானது எமது மக்கள் உண்ணக் கூடிய சூழலில் இருக்கிறார்களா என்கிற அடிப்படை கேள்வியை குறைத்து மதிப்பிடுவதாகவே அமைகிறது. இலங்கையிலுள்ள ஆறிற்கும் அதிகமான அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இந்த சூழ்நிலையினை மேற்கொள்வதற்கான வழிமுறைகள் குறித்து கடந்த 27ம் திகதி கலந்தாலோசனை ஒன்றினை நடாத்தியிருந்தோம்.

இலங்கை உள்நாட்டு உற்பத்திக்கு எதிரான பொது கடன் சுமையானது 120% மாக ஒரு பாரிய ஏற்றமாக காணப்பட்டது கடன் கொடுத்தவர்களிற்கு முழுமையாகவும் சரியான நேரத்திலும் கடனை செலுத்துவதற்காக டொலரை தேக்கி வைக்கும் கொள்கையை மத்திய வங்கி கடைபிடிக்கின்றது. இது எமது மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான டொலரின் பற்றாக்குறைக்கு மேலும் வலு சேர்ப்பதாகவும் உணவு,மருந்து மற்றும் எரிபொருள் போன்ற அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதியை குறைத்துமுள்ளது.

இந்த பற்றாக்குறையின் எதிரொலியினை அத்தியாவசிய பொருட்களிற்கான நீண்ட வரிசைகளிலும் தொடர் மின்துண்டிப்பிலும் நாம் கண்டோம். அரசாங்கமானது டொலர் கையிருப்பினை உறுதி செய்யும் வகையில் மாற்று வழிமுறைகளை கையாளவில்லை என்றால் இந்த நிலைமை மேலும் மோசமடையும்.

முழுமையாக கடன் தவணைகளை மீள் செலுத்துவதற்கு டொலரினை தேக்கி வைத்திருக்கும் மத்திய வங்கியின் கொள்கையானது, உள்நாட்டில் அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு தேவையான டொலர் கையிருப்பை குறைகின்றது என்பதனை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். இந்நிலைமையானது பாரிய பொருளாதார தாக்கங்களை இலங்கை மக்கள் மத்தியில் கொண்டுவருவதோடு நீண்டகால பொருளாதார பிரச்சினைகளையும் உருவாக்குகிறது.

ஆனால் மறுபுறம் இலங்கையின் பிணைமுறி வைத்திருப்பாளர்களுக்கு இது பாரிய இலாபத்தினை கொடுக்கிறது. இலங்கை இந்த பொருளாதார நெருக்கடியின் பாதக விளைவிலிருந்து வறிய மக்களை பாதுகாப்பதற்கான உடனடி வழிமுறைகளை கையாள வேண்டுமென நாங்கள் உடன்பட்டோம். இதிலே பங்குபற்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், மூல காரணங்களை நிவர்த்தி செய்வதற்கும் நிலையான தீர்வுகளை கண்டடைவதற்குமான தேசிய பொருளாதார கொள்கைகளில் முக்கிய சீர்திருத்தங்களை கொண்டுவர வேண்டும் என இணங்கினோம்.

இந்த அரசியல் தலைவர்கள் குழுவானது, இலங்கை மக்களுக்கு நிலையான தீர்வுகள் ஊடாக நீதியை நிலை நாட்டுவதை உறுதி செய்வதற்காக தொடர்ந்து இணைந்து செயலாற்ற இணங்கினோம் எனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேசிய ஐக்கியத்தை...

ஒரு குழுவாக இணைந்து செயற்படுவது ஒரு நாடு என்ற வகையில் சாதிக்க முடியாத சாதனையல்ல எனவும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தின் இந்த செயற்பாடு பாராட்டப்பட வேண்டியது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகள் தேசிய ஐக்கியத்தை வலுப்படுத்துவதற்கும் வடக்கையும் தெற்கையும் ஒன்றிணைப்பதற்கும் நல்ல அடித்தளத்தை அமைக்க முடியும் என்றார். உலக நாடுகளுடன் முன்னோக்கிச் செல்வதற்கு எமது நாட்டுப் பிள்ளைகள் சர்வதேச மொழிகளிலும் கணனித் தொழில்நுட்பத்திலும் புலமைமிக்கவர்களாக மாற்றப்பட வேண்டுமென வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

எமது நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மாணவர்கள் ஒருவரையொருவர் மரியாதையுடன் நடத்துவதும், அதுவே கடந்த காலத்திலிருந்து இருந்துவரும் ஒரு சிறந்த பண்பு எனவும் அவர் நினைவுபடுத்தினார். நல்லிணக்கத்திற்கு உகந்த இலங்கைச் சமூகச் சூழலை உருவாக்கும் நோக்கில் இக்கல்லூரிக்கு வகுப்பறைக் கட்டிடம் ஒன்றை அமைத்துக் கொடுத்தமைக்கு தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் பாராட்டு தெரிவித்ததோடு, அதன் தலைமைத்துவத்திற்காக நீதியமைச்சருக்கு தனது நன்றியைத் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மற்றும் நீதியமைச்சின் செயலாளர் எம்.எம். பி.கே. மாயாதுன்ன, மாகாண பிரதம செயலாளர் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், அரச அதிகாரிகள், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலக அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களும் கலந்துகொண்டனர்.

நீதிக்கான அணுகல் நடமாடும் சேவைக்கு சமாந்தரமாக யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக சமூகத்தினருடன் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், நீதி அமைச்சின் செயலாளர், யாழ்.பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.

# இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2022 பெப்ரவரி 02ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 88,500 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09122E060 | LKA18222H052 | LKA36423B032 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 38,000 | 20,500 | 30,000 | 88,500 |

ஏல விற்பனைத் திகதி : 2022 பெப்ரவரி 02

தீர்ப்பனவுத் திகதி : 2022 பெப்ரவரி 07

வழங்கப்படும் திகதி : 2022 பெப்ரவரி 04

விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2022 பெப்ரவரி 02, புதன்கிழமை மு.ப. 11.00

விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்க பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம். இசட். எம். ஆசிம்**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

---


# For classified advertisements and for replies

received in response to advertisements published under Lake House box numbers

Manager front office
**+94 112429341**
**Hotline 1949**


---

## நொத்தாரிசு இறுதிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னரான அறிவித்தல்

ஆலய முன்றல் யட்டிப்பில மிரிஸ்ஸ என்னும் முகவரியில் வசிக்கும் **சாமனி தினேஷா பள்ளியகுரு** ஆகிய நான் நொத்தாரிசுமார் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 107) பிரிவு 7இன் படி மாத்தறை மாவட்டத்தில் சிங்கள மொழியில் பிரசித்த நொத்தாரிசாக சேவையாற்றுவதற்காக பதிவாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் பேரில் இன்றிலிருந்து ஒரு மாதம் முடிவடைந்த பின்னர் நொத்தாரிசு இறுதிப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு பதிவாளர் நாயகத்திற்கு கோரிக்கைவிடுப்பேன் என இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் சகல மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

**சாமனி தினேஷா பள்ளியகுரு,**
**ஆலய முன்றல் யட்டிப்பில,**
**மிரிஸ்ஸ.**

28.01.2022

---

## அற்றோணித் தத்துவ பத்திரம் இரத்து அறவித்தல்

மொறட்டுவை, சொய்சாபுரம், மிராஜ் வீட்டுத்திட்டம் இலக்கம் 164/122 **மல்கொடகே எவலின்** (தேசிய அடையாள அட்டை இலக்கம் 428261399V) ஆகிய நான் இத்தால் இலங்கை அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவது யாதெனில் களனி, பெட்டியாகொட, மாவல்ல வீதி தேசிய வீடமைப்பு திட்டம் இலக்கம் பி5/3 **போபகமகே அசேல சியாமள்** (தேசிய அடையாள அட்டை இலக்கம் 700680916V) இலங்கையில் எனது அற்றோணித் தத்துவக்காரராக நியமித்த கம்பஹா பிரசித்த நொத்தாரிசு **குமுது எஸ். ஜெயக்கொடி** முன்னிலையில் 31.06.2018 திகதியில் 65ஆம் இலக்கத்தில் முடிந்த தத்துவப் பத்திரத்தை இத்தால் இரத்து செய்து மீளப் பெறுகிறேன். குறித்த **போபகமகே அசேல சியாமள்வை** எனது தத்துவக்காரர் பதவியிலிருந்து நீக்கிவிட்டேன்.

இரத்து செய்யப்பட்ட மேற்குறித்த தத்துவ பத்திரத்தின் மூலம் **போபகமகே அசேல சியாமள்** என் சார்பில் செய்யும் காரியங்களுக்கும் செயல்களுக்கும் நான் எவ்விதத்திலும் பொறுப்பல்ல என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மல்கொடகே எவலின்**
2022.01.22

---

# Repeat Your Ad For Better Offers

---

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 244(3)ஆம் பிரிவின் கீழானது

2021 ஒகஸ்ட் 19ஆம் திகதியிலிருந்து வலுப்பெறும் வகையில் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 239ஆம் பிரிவின் கீழ் கம்மாபார்ம் சியுடிகல்ஸ் (பிரைவட்) லிமிட்டட் உடன் இன்டர்பார்ம் (பிரைவட்) லிமிட்டட் ஆனது ஒன்றிணைக்கப்பட்டுள்ளதெனவும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 244(1)(a) இன் பிரிவின் பிரகாரம் ஒன்றிணைப்பு சான்றிதழானது வழங்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

**ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின் பெயர்:** இண்டர்பார்ம் (பிரைவட்) லிமிட்டட்
**ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின் பதிவு அலுவலகம்:**
இல. 476, யூனியன் பிளேஸ் கொழும்பு -02
**ஒன்றிணைக்கப்பட்ட திகதி**: 2021.08.19
**ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின் பதிவிலக்கம்:** பிவி 6140

**சபையின் கட்டளைப் பிரகாரம்**
**பீடிஓ கோப்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**கம்பனி செயலாளர்கள்**

---

தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு

## தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (தேகஆநி)

## குழு கால வாழ்நாள் உத்தரவாத பத்திரம் மற்றும் குழு மருத்துவ காப்பீடு ஆகியவற்றை வழங்கல்

1. பின்வரும் சேவையை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

| விலைமனு இலக்கம் | அம்ச விளக்கம் | விலைமனுப்பிணை (ரூபாவில்) |
|---|---|---|
| NBRO/ADMIN/2022/236 | குழு கால வாழ்நாள் உத்தரவார பத்திரம் மற்றும் குழு மருத்துவ காப்பீடு ஆகியவற்றை வழங்கல் | 125,000.00 |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-05, ஜாவத்த வீதி, 99/1, தேகஆநி, நிதிக்கான பணிப்பாளரிடமிருந்து 2022 சனவரி 31 ஆம் திகதியிலிருந்து 2022 பெப்ரவரி 21 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம்.
4. 2022 சனவரி 31 ஆம் திகதியிலிருந்து 2022 பெப்ரவரி 21 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் ஒவ்வொரு ஆவணத்திற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக 1,500 ரூபாவை ரொக்கப் பணத்தில் தேகஆநி காசாளரிடம் செலுத்திய பின்னர், கொழும்பு-05, ஜாவத்த வீதி, 99/1, ஆம் இலக்கத்திலுள்ள தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், நிதிப் பிரிவிலிருந்து ஆங்கில மொழியிலுள்ள மேலேயுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
5. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் தபாலுறையொன்றில் சேர்க்கப்பட்டு பாதுகாப்பு முத்திரையிடப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனுவின் பெயர் குறிப்பிடப்பட்டு 2022 பெப்ருவரி 21 ஆம் திகதியன்று விலைமனுக்களை மூடும் நேரமான பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம், 99/1, ஜாவத்த வீதி, கொழும்பு-05 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது தேகஆநி இடப்பரப்பில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான மற்றும் இலத்திரனியல் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளின் மூடும் நேரத்தின் பின்னர் திறக்கப்படுமென்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதி விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்.
6. ஒவ்வொரு விலைமனுவும் மேலேயுள்ள அட்டவணையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள பெறுமதிக்காகவும் இலங்கையிலுள்ள புகழ் வாய்ந்த வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதாகவும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள உருமாதிரியில் அமைக்கப்பட்டதாகவும் விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 120 நாட்கள் காலப்பகுதிக்கு (2022.02.21 இலிருந்து 2022.06.19 வரையும்) செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது தேகஆநி காசாளரிடம் ரொக்கப் பணத்தில் வரவு வைக்கப்படல் வேண்டும்.
7. எந்தவொரு தெளிவுறுத்தல்களுக்காகவும் 2022 பெப்ரவரி 15 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு தேகஆநி கேட்போர்கூடத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

**தலைவர்/ பெறுகைக் குழு,**
**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்,**
**99/1, ஜாவத்த வீதி, கொழும்பு-05.**
**தொலைபேசி: 011-2588946**
**தொலைநகல்: 011-2502611**

---

## ஸ்ரீ பாளி வளாகம்
## கொழும்பு பல்கலைக்கழகம்

# வெற்றிடங்கள்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஸ்ரீ பாளி வளாகத்தில் வெற்றிடமாகவுள்ள கீழ்க்காணும் பதவிக்காக தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து 2021 பெப்பரவரி 18ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**நிரந்தர பதவி**
கணினி கல்விப் பிரிவு

01. விரிவுரையாளர் (பயிலுநர்), விரிவுரையாளர் (நிரந்தரமாக்கப்படாத) சிரேஷ்ட விரிவுரையாளர் (II/I தரம்)

தகைமைகள் : தகவல் தொழில்நுட்பம் அல்லது கணினி (information Technology or Compunting) ஆகிய படங்களில் கௌரவ பட்டத்தைப் பயின்றிருத்தல்

02. ஆலோசகர் (கணினி தொழில்நுட்பம்) II ஆம் தரம்

தகைமைகள் : கணினி விஞ்ஞானம்/கணினி பொறியியில் (Computer Science/Computer Engineering) ஆகிய பாடங்களில் கௌரவப் பட்டத்தைப் பயின்றிருத்தல்

**அரங்கேற்ற கல்விப்பிரிவு**

01. விரிவுரையாளர் (பயிலுநர்) விரிவுரையாளர் (நிரந்தரம் இல்லாத) சிரேஷ்ட விரிவுரையாளர் (II/I தரம்)

தகைமைகள் : கீழ்க்காணும் துறைகளில் கலைமாணி கலை/ அரங்கேற்றக்கலை/அழகியற்கலை கௌரவ பட்டத்தை பயின்றிருத்தல்

***துறை : சினிமா கல்வி***

**சித்திரம் மற்றும் திட்டமிடல்**

மேற்படி பதவிக்காக விண்ணப்பிப்பதற்கு எதிர்ப்பார்க்கும் விண்ணப்பதாரிகளுக்கு குறித்த மாதிரி விண்ணப்பத்தை மற்றும் விபரப்பத்திரங்களை பிரதிப்பதிவாளர், ஸ்ரீ பாளி வளாகம், வேவல, ஹொரண இடம் அல்லது ஸ்ரீபாளி வளாகத்தின் இணைய தளத்தில் (https://spc.cmb.ac.lk) பதிவிறக்கம் (download) செய்து கொள்ளலாம் ஸ்ரீ பாளி வளாகத்தின் இணையதளத்தில் உள்ள மேற்படி வெற்றிடங்கள் சம்பந்தமான விபரப்பத்திரங்களை விளங்கிக் கொள்ளுமாறு குறித்த விண்ணப்பதாரிகளுக்கு மேலும் அறிவுறுத்தல் விடுக்கப்படுகின்றது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, குறித்த கல்வித் தகைமைகள் (விபரமான பட்ட சான்றிதழுடன்) மற்றும் தொழில்சார் மற்றும் சேவை சான்றிதழ் மற்றும் வேறு தகைமைகளுடன் குறித்த சான்றிதழ்களின் பிரதியுடன் பிரதிப் பதிவாளர், ஸ்ரீ பாளி வளாகம், கொழும்பு பல்கலைக்கழகம், வேவல, ஹொரண என்ற முகவரிக்கு 2022 பெப்ரவரி 18ஆம் திகதி அல்லது அத்தினத்திற்கு முன் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களை உள்ளிட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். அரச திணைக்களங்கள் /கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவன தலைமையூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். நிறுவன தலைமையினால் அனுப்பப்படும் விண்ணப்பத்தில் மேலதிக பிரதியை தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். குறித்த தினத்திற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படமாட்டாது. பூர்த்தியற்ற விண்ணப்பங்கள் முன் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

**பிரதிப்பதிவாளர், ஸ்ரீ பாளி வளாகம்**
**பதிவாளர் கொழும்பு பல்கலைக்கழகம் சார்பாக**
**2022.01.28**

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**மத்திய மாகாண சபையின் இளைஞர் விவகாரம், மகளிர் விவகாரம், கிராமிய அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் அமைச்சு**

## 2022 ஆம் வருடத்தில் கைத்தறி புடவை உற்பத்திக்காக பதப்படுத்தப்படாத நூல்களை கொள்வனவு செய்தல்

அமைச்சின் பெறுகைக்குழுத்தலைவரினால் மத்திய மாகாண புடவை கைத்தொழில் திணைக்களத்தின் கைத்தறி புடவை உற்பத்திக்கு தேவையான பின்வரும் விபரங்களின் பிரகாரம் பதப்படுத்தப்படாத நூல்களை கொள்வனவு செய்வதற்காக தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

| நூல் பரிமாணம் | வர்க்கம் | தொகை (கிலோ கிராம்) | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| 2/80 | சீவப்பட்ட சின்ஜ மேஸ்ரைஸ் | 8,000 | 35,000.00 |
| 2/30 | பதப்படுத்தப்படாத நூல் | 15,000 | |
| 16 | பதப்படுத்தப்படாத நூல் | 10,000 | |

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்கள் மேற்குறிக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையை அமைச்சின் நிதி உதவியாளருக்கு செலுத்தி விலைமனு விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ளலாம். 2022.02.01 ஆம் திகதி மு.ப. 8.30 மணி முதல் 2022.02.21 ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான வாரத்தின் வேலை நாட்களில் வேலை நேரங்களில் பின்வரும் முகவரியில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களை இரு நகல்களில் தயாரித்து 2002.02.22 திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் தலைவர். அமைச்சுப் பெறுகைக் குழு இளைஞர் விவகாரம், மகளிர் விவகாரம் கிராமிய அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் அமைச்சு த.பெ.இல. 41, கெட்டம்பே பேராதனை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அமைச்சில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் உள்ளிட்டுச் சமர்பிக்கலாம். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும். தாமதமாக கிடைக்கப்பெறும் விலை மனுக்கள் நிராகரிக்கப்படும். 2022.02.22 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்க பின்வரும் முகவரியில் அமைந்துள்ள இளைஞர் விவகாரம், மகளிர் விவகாரம் கிராமிய அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் விலைமனுக்கள் இயக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதி ஒருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்.**
**அமைச்சுப் பெறுகைக் குழு.**
**இளைஞர் விவகாரம், மகளிர் விவகாரம், கிராமிய அபிவிருத்தி, கட்டுறவு அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் அமைச்சு**
**த.பெ.இல் கெட்டம்பே, பேராதனை.**
**081-2385451 081-2232393 0812205336**

---

திகதி 29.01.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் : 4662
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 12,448,960.00
ஆங்கில எழுத்து: D — வெற்றி இலக்கங்கள்: 5 5 8 2 2 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 34,353,970.00

**கொவிசெத** (Govisetha) — சீட்டிழுப்பு இலக்கம் : 2957
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,871,000.00
ஆங்கில எழுத்து: C — வெற்றி இலக்கங்கள்: 05 21 41 56
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,399,222.40

**Mega POWER மெகா பவர்** (கோடி 10) — சீட்டிழுப்பு இலக்கம்: 1010
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,660,220.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 196,992,850.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: A — சுப்பர் இலக்கம்: 08 — வெற்றி இலக்கங்கள்: 32 61 62 74
மெகா அதிர்ஷ்ட இலக்கம் 02861

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் : 692
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,677,660.00
ஆங்கில எழுத்து: V — வெற்றி இலக்கங்கள்: 07 17 60 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 94.637.729.20

**ஹந்தஹன** ராசி சுப பலன் — சீட்டிழுப்பு இலக்கம் : 0003
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,731,280.00
இலக்கினம்: மீனம் — வெற்றி இலக்கங்கள்: 02 08 17 20
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,507,800.92

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் : 1204
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,967,440.00
வெற்றி இலக்கினம்: கன்னி — வெற்றி இலக்கங்கள்: 6 6 8 8 7 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,925,518.40

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01 — தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 பெக்ஸ்: 0114 669 416

---

திகதி 28.01.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் : 4661
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 12,669,770.00
ஆங்கில எழுத்து: R — வெற்றி இலக்கங்கள்: 4 8 0 2 8 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 34,353,970.00

**கொவிசெத** (Govisetha) — சீட்டிழுப்பு இலக்கம் : 2956
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,997,400.00
ஆங்கில எழுத்து: C — வெற்றி இலக்கங்கள்: 42 64 65 72
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,004,556.80

**Mega POWER மெகா பவர்** (கோடி 10) — சீட்டிழுப்பு இலக்கம்: 1009
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,891,760.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 194,227,674.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: Z — சுப்பர் இலக்கம்: 22 — வெற்றி இலக்கங்கள்: 17 36 54 72
மெகா அதிர்ஷ்ட இலக்கம் 09534

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் : 691
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,716,680.00
ஆங்கில எழுத்து: K — வெற்றி இலக்கங்கள்: 03 18 30 54
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 94,632,917.20

**ஹந்தஹன** ராசி சுப பலன் — சீட்டிழுப்பு இலக்கம் : 0002
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,782,820.00
இலக்கினம்: சிம்மம் — வெற்றி இலக்கங்கள்: 09 16 23 59
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,505,727.08

**வாசனா சம்பத** (Vasana Sampatha) — சீட்டிழுப்பு இலக்கம் :1690
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,315,220.00
ஆங்கில எழுத்து: B — வெற்றி இலக்கங்கள்: 49 54 80 88
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,408,283.50

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01 — தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 பெக்ஸ்: 0114 669 416

# அரசாங்கத்திடம் பாரபட்சம் இல்லை நம்பிக்கையுடன் தீர்வு பெறுங்கள்

**- அமைச்சர் டக்ளஸ்**

கரவெட்டி தினகரன் நிருபர்

எமது மக்கள் எதிர்கொள்ளும் நீதித்துறைசார் பிரச்சினைகளுக்கு இலகுவாக தீர்வினை வழங்கும் நோக்கோடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நீதிக்கான அணுகல் நடமாடும் சேவையை எமது மக்கள் சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட நீதிக்கான அணுகல் எனும் தொனிப் பொருளிலான நடமாடும் சேவை சனிக்கிழமை யாழ் மத்திய கல்லூரியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நீதி அமைச்சர் அலி சப்ரி மற்றும் வெளியுறவு அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் ஆகியோரின் பங்குபற்றலுடன் கலாசார நிகழ்வுகள் சகிதம் சம்பிரதாயபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்

“காலதாமதமான நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமனானது” என்ற ஒரு அனுபவ வாசகம் இருக்கின்றது. அந்த வகையில் இந்த நீதிக்கான அணுகல் நிகழ்வானது ஜனாதிபதி கோட்டபய ராஜபக்சவின் தலைமையில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் வழிகாட்டலில் நீதி அமைச்சர் அலி சப்ரியின் முயற்சியால் அமைச்சரவைக்கு கொண்டுவரப்பட்டு தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை நீண்டகாலமாக வன்முறை



யில் வடக்கு மக்களே அதிகளவில் பாதிப்புகளை சந்தித்துள்ளனர். இதனால் இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ள மக்களுக்கு பரிகாரங்களை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதாலும் அவர்களது வீட்டுகளுக்கே துறைசார் அதிகாரிகளுடன் நீதிக்கான அணுகல் என்னும் நடமாடும் சேவை வந்துள்ளது. இதை எமது மக்கள் சரியாக பயன்படுத்த வேண்டும்.

அதேபோன்று நீதி அமைச்சர் அலி சப்ரி ஒவ்வொரு அமைச்சரவையிலும் இவ்வாறான ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரங்களை சமர்ப்பித்து வருவதையும் காணமுடிகின்றது. அதாவது கடந்தகால சட்டத்தில் இருக்கக் கூடிய குறைபாடுகளை ஈடு செய்யும் வகையிலான புதிய சட்ட ஏற்பாடுகளை கொண்டுவருவதிலும் காலத்திற்கு பொருந்தக்கூடிய சட்டங்களை உருவாக்கவதிலும் அவர் அயராது பாடுபட்டு வருகின்றார் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேவேளை ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரது வழிகாட்டலில் நாடுதழுவிய ரீதியில் பல்வேறு சேவைகளும் அபிவிருத்திகளும் பாரபட்சமற்ற வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக 2022 ஆண்டுக்குரிய வரவு செலவு திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட அபிவிருத்தி சார் திட்டங்கள் நாடுதழுவிய ரீதியில் ஒரே நேரத்தில் எதிர்வரும் 3 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மக்களுக்கான விடயங்களில் பாரபட்சங்களை காட்டப் போவதில்லை. இந்த அரசாங்கத்தை நம்பி அவர்களுடன் பயணிப்பதனூடாக எமது பிரச்சினைகளுக்கான தீர்வுகளை விரைவாக பெற்றுக்கொள்ளவும் முடியும். அந்தவகையில் உங்களது பிரச்சினைகளை நம்பிக்கையுடன் கொண்டுசென்று தீர்வுகளையும் பரிகாரங்களையும் காணவேண்டும் என்றும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தினகரன் வடக்கின் உதயம் Vadakkin Uthayam

# வவுனியாவில் 100 பேருக்கு நீர் வடிகட்டும் இயந்திரம் வழங்கி வைப்பு



வவுனியா விசேட நிருபர்

சிறுநீரக நோயில் இருந்து பாதுகாக்கும் முகமாக வவுனியாவில் 100 பேருக்கு நீர் வடிகட்டும் இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டது.

தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மற்றும் கிராமிய, பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்ட இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த பெரேரா ஆகியோரின் சிறுநீரக நோயாளர்களுக்கான நிவாரண வேலைத் திட்டத்தின் கீழ் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரின் கோரிக்கைக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட 100 பேருக்கு நீர் வடிகட்டும் இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டது. இவ் இயந்திரத்தை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் வழங்கி வைத்தார்.

சிறுநீரக நோய் பாதுகாப்பு மற்றும் உடல் ஆரோக்கியம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட மண்ணினால் செய்யப்பட்ட நீர் வடிகட்டி இயந்திரத்தை பயன்படுத்தும் முறை தொடர்பிலும் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்கள அதிகாரிகளால் இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில், மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, வவுனியா பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் பிரியதர்சினி, தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்கள அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



ஒற்றையாட்சிக்கு உட்பட்ட 13ஐ நிராகரிப்போம் எனும் தொனிப்பொருளில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸினால் ஒழுங்கு செய்யப்பட்ட பேரணி நல்லூரில் திலீபனின் நினைவிடத்தில் ஆரம்பமாகி கிட்டுப்பூங்காவில் நிறைவடைந்தது. இந்தப் பேரணியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (படம்: யாழ். விசேட நிருபர்)

# நாவற்குழியில் பேருந்து சில்லுக்குள் அகப்பட்டு குடும்பப் பெண் மரணம்

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழி சந்தியை அண்மித்த பகுதியில் ஏ9வீதியில் ஞாயிற்றுக்கிழமை காலை 9மணியளவில் இடம்பெற்ற விபத்தில் குடும்பப் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு சென்று விட்டு இ.போ.ச பேருந்தில் வந்த பெண் , பேருந்தினை விட்டு இறங்கும் போது சறுக்கி கீழே விழுந்து பேருந்து சில்லுக்குள் அகப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. கைதடி நாவற்குழிப் பகுதியைச் சேர்ந்த 55வயதான சிவராசா சுகிர்தா என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

# பேதுறுமுனை பிரதேசத்தில் சிரமதானம்

## பருத்தித்துறை பொலிஸாரால் நடவடிக்கை

கரவெட்டி தினகரன் நிருபர்

பேதுறு முனை பிரதேசம் நேற்று ஞாயிற்றுக்கிழமை சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டது. பருத்தித்துறை பொலிசாரால் இப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந் நிகழ்வில் பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொலிஸார் அனைவரும் கலந்து கொண்டனர். இதேவேளை குறித்த பகுதியில் மரங்களும் நாட்டி வைக்கப்பட்டன. இம் மரக்கன்றுகளை பருத்தித்துறை பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க, உதவி பொலிஸ் அத்தியட்சகர் சுஜீவ இத்மால் கொட உட்பட பலரும் நாட்டி வைத்தனர்.

## கிழக்கின் குரல்

# தடுப்பூசி ஏற்றுவதில் ஒரு வருடம் பூர்த்தி; மட்டு.மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகள்

**கொவிட்டால் உயிர்நீத்த மருத்துவர்கள், சுகாதார துறையினருக்கு அஞ்சலி**

(மட்டக்களப்பு விசேட, புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்)

கொவிட்19 தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு, தடுப்பூசியின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் சேவைகள் புரிந்த சுகாதாரத் துறையினரை பாராட்டும் நிகழ்வு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்தில் சனிக்கிழமை (29) நடைபெற்றது.

கொவிட்19 செயலணியின் ஒருவருட பூர்த்தியை முன்னிட்டு அதற்கு வலுச்சேர்க்கும் வகையில் இந் நிகழ்வு தாய் சேய் பிரசவ வைத்தியர் எஸ். அச்சுதன் தலைமையில் நடைபெற்றது. கொவிட்19 அச்சுறுத்தலுக்கு மத்தியில் உயிர்நீத்த மருத்துவ அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் தொற்றினால் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து, இறைவணக்கம் செலுத்தப்பட்டது.





தொற்றுக் காலத்தில் அர்ப்பணிப்பு மிக்க சேவைகளை புரிந்துகொண்டிருக்கும் சுகாதார அதிகாரிகள், சுகாதார உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பொலிஸார், முப்படையினர், உள்ளுராட்சி மன்ற உறுப்பினர்கள், அரச , அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் (ஜனா), அரசாங்க அதிபர் கே.கருணாகரன், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுகுணன் , உதவி பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் என்.மயூரன், பிராந்திய தொற்றுநோயியல் வைத்திய அதிகாரி எஸ். குணராசசேகரம், சுகாதாரத் தகவல் தொடர்பாடல் வைத்தியர் எஸ். நவலோஜிதன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இஸ்லாம் பாடநூல்களை மீளப் பெறப்படுவதன் நோக்கம் என்ன?

**பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கேள்வி**

(ரொட்டவெவ குறூப் நிருபர் )

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் அச்சிட்டு விநியோகிக்கப்பட்ட இஸ்லாம் பாடநூல்களை மீளப் பெறப்படுவதன் நோக்கம் என்ன என்பதை நீதி அமைச்சர் அலிசப்ரி உள்ளிட்ட அரசிலுள்ள முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களுக்கு தெளிவு படுத்த வேண்டும் என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



ஞானசார தேரர் தலைமையிலான ஒரேநாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் பரிந்துரைக்கமைய இஸ்லாம் பாட நூல்கள் மீளப் பெறப்படுவதாக ஊடகங்களில் செய்தி வெளிவந்துள்ளது.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் நியமிக்கப்படும் துறை சார்ந்த வாண்மை மிகுந்தோரினால் தான் பாடநூல்கள் எழுதப்படுகின்றன. இஸ்லாம் பாடநூல்களும் அவ்வாறு தான் எழுதப்படுகின்றன.

இந்த விடயத்தில் அரசில் முக்கிய பங்கு வகிக்கும் அமைச்சர் அலி சப்ரி கவனம் செலுத்த வேண்டும்.

அரசுக்கு ஆதரவு வழங்கி வரும் தேசிய காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தில் மௌனம் காப்பதன் அர்த்தம் என்ன? இந்த மௌனம் இவர்களது சம்மதத்தோடு தான் இந்த நாடகம் அரங்கேற்றப்படுகின்றதா என்ற சந்தேகத்தை மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது என்றார்.

# சம்மாந்துறை புளக் ஜே வண்டு வீதி புனரமைப்பு

(சவளக்கடை குறூப் நிருபர்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகனடத்திற்கமைய ஒரு இலட்சம் கிலோ மீற்றர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்தின் கீழ், சம்மாந்துறை புளக் ஜே மேற்கு வண்டு வாய்க்கல் வீதி 46 மில்லியன் ரூபாய் செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.



இதற்கான அபிவிருத்தி பணிகளை சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எம்.முஹம்மட் நௌஷாட் ஞாயிற்றுக்கிழமை (30) ஆரம்பித்து வைத்தார்.

இதன்மூலம் நீண்டகாலமாக குண்டும் குழியுமாக காணப்பட்ட 1.5 கிலோமீற்றர் வீதி கொங்கிறீட் வீதியாக செப்பனிடப்படவுள்ளதுடன், இதன்மூலம் விவசாயிகள், பிரதேச மக்கள் உள்ளிட்ட பலர் நன்மையடவுள்ளனர்.

இந்நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அக்கரைப்பற்று பிராந்திய பிரதம பொறியியலாளர் டி.சிவசுப்புரமணியம், சம்மாந்துறை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.எஸ்.எம்.நவாஸ், சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் என். கோவிந்தசாமி, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கொரோனா தடுப்பு நடவடிக்கையில் இலங்கை முன்னிலையில் உள்ளது

**கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர்**

மக்கள் ஒத்துழைக்கின்றபோதுதான் எமது பிராந்தியம் கொரோனா தடுப்பு, ஒழிப்பு நடவடிக்கைகளில் வெற்றிக் கொடி நாட்ட முடியும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ. எல். எம். றிபாஸ் தெரிவித்தார்.

கொவிட் – 19 தடுப்பூசி ஏற்றும் பணியின் ஒரு வருட பூர்த்தி நிகழ்வு சனிக்கிழமை (29) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்ற வேளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், விஞ்ஞான ரீதியாக துறை சார்ந்த நிபுணர்கள் சொல்வதை நம்பி செயற்பட்டு கொரோனா தடுப்பு, நடவடிக்கைகளுக்கு மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும். முன்னாள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ. சுகுணன் விட்டு சென்ற இடத்தில் இருந்து தொடங்கி இன்னமும் மேலதிகமாக எனது சேவைகளை திறம்பட முன்னெடுப்பேன் என இத்தருணத்தில் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன் என்றார்.



கொரோனா தடுப்பு தவிர்ப்பு நடவடிக்கைகளில் எமது நாடு உலக அளவில் முன்னிலையில் நிற்கின்றது. நாட்டில் எத்தகைய பொருளாதார. அரசியல் நெருக்கடிகள் ஏற்பட்டாலும்கூட சுகாதார துறையினரின் சேவைகள் எந்த நிலையிலும் தவிர்க்க முடியாதவையாக உள்ளன. கொரோனா மீண்டும் மீளெழுச்சி பெற்று பரவுகின்றது.

ஒமிக்ரோன் திரிபு மிக வீரியமாக தொற்றிய வண்ணம் உள்ளது. சுகாதார துறையினர் இதை வெல்வதற்கு இன்னமும் வீரியமாக போராட வேண்டி உள்ளது. ஆனால் மக்கள் இயல்பு நிலைக்கு மீண்டும் திரும்பியது போல் நடந்து கொள்வது கவலை தருகின்றது.

கிழக்கு மாகாணத்தின் நிலை உண்மையிலேயே மிக கவலைக்குரியதாக இருக்கின்றது. மிக கணிசமான எண்ணிக்கையில் தொற்றாளர்கள் கிழக்கு மாகாணத்தில் அடையாளம் காணப்பட்ட வண்ணம் உள்ளனர் என்பதை புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

# ஆரையம்பதியில் கோரவிபத்து; ஒருவர் படுகாயம்



மட்டக்களப்பு ஆரையம்பதி செல்வாநகர் சிவன் கோவிலுக்கு முன்னால் உள்ள பிரதான வீதியில் ஞாயிற்றுக்கிழமை (30) பேக்கரி தொழிலாளி ஒருவர் மோட்டார் சைக்கிளுடன் வீதியை கடக்க முற்பட்டபோது, மட்டக்களப்பில் இருந்து கல்முனை நோக்கி பயணித்த மோட்டார் காருடன் மோதுண்டு படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் கார் முன்பகுதி சிதைவடைந்த நிலையிலும், காரில் பயணித்த சிறு குழந்தை உட்பட குடும்பஸ்தர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

# பவளவிழாவில், பெருமையடையும் தல்கஸ்பிடிய மு.ம.வித்தியாலயம்

## இன்று முன்னோடி நிகழ்வுகள்



அதிபர் சீ.எம். எஸ் மஹ்பூப்






இராஜாங்க அமைச்சர் கனகஹேரத்

சப்ரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்தில் மாவனல்லை கல்வி வலயத்தில் அமைந்துள்ள அழகிய கிராமம் தல்கஸ்பிடிய.மலைச்சாரல்களால் நாலாபுறமும் சூழப்பட்ட குறிஞ்சி நிலத்தில், தலைதூக்கி யவாறு, தல்கஸ்பிடிய திகழ்கிறது.இவ்வூரின் பெயரைக் கேட்கும் சகலரும் வரலாற்று நிகழ்வுகளை நினைவுபடுத் தத் தவறுவதுமில்லை.

"கல்வியைத் தேடுவது சகல முஸ்லிம்களதும் கடமை" என்ற இஸ்லாமிய சிந்தனையால் தூண்டப்பட்ட மர்ஹூம் கதீப் கொழும்பு உடையார் எனப்படும் அப்துல் ரஸ்ஸாக் அவர்களின் உள்ளத்தில் தோன்றியதுதான், பவளவிழாக்காணும் தல்கஸ்பிடிய முஸ்லிம் மகா வித்தியாலயமாகும்.மர்ஹூம்களான செய்னுல் ஆப்தீன், மௌலவி,கே.எம் ஜெமால்தீன்,எம்.எஸ்.எம் ஹனீபா, ஏ.ஆர்.எம் சுலைமான் லெப்பை ஆகியோர்,இவரது சிந்தனைக்கு உரமூட்டியதால்,இந்தப் பாடசாலை (03.02.2022) பவளவிழா (75) காணுகிறது.

இதன் முன்னோடி நிகழ்வுகள் இன்று நடைபெறுகையில் இதில் பிரதம அதிதியாக தேயிலை, இறப்பர் பெருந்தோட்டங்கள் இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், கௌரவ அதிதியாக அரநாயக்க பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் டபிள்யு ஜயரட்ன ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

தலாவ என்ற பகுதியில், 1947.02.03இல், ஓலைக் குடிசையில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையின்,முதலாவது அதிபராக மர்ஹூம் எம். எச். ஹனீபா கடமையாற்றினார்.

இதன் முதல் மாணவனாக எம்.எச்.எம் தாஹா என்பவர் பதிவுசெய்யப்பட்டுள்ளார். சுமார் எழுபது மாணவர்களுடன் கலவன் (ஆண்,பெண்) பாடசாலையாக இது, ஆரம்பிக்கப்பட்டதாக சம்பவத் திரட்டுப்புத்தகம் சான்று பகர்கிறது.இம்மாணவர்களுக்கு கல்விபுகட்ட ஒருசில ஆசிரியர்கள் முன்வந்தமை, பாடசாலையின் வளர்ச்சிப்பாதைக்கு வித்திட்டது.

நல்லெண்ணமுள்ள ஆசிரியர் குழாமினரால் விதைக்கப்பட்ட மாணவ வித்துக்கள், விருட்சமாகி பாரெல்லாம் இன்று,நிழல் பரப்புவது நல்லுள்ளங்களுக்கு கிடைத்த வெற்றியாகும்.

தன்னிகரில்லா அதிபர்களின் சளைக்காத சேவைகள், தன்னலம் பாராத துணிச்சல், ஒற்றுமையுடன் செயற்படும் ஆசிரியர் குழாமினரை, இப்பாடசாலைக்கு அருட்கொடையாக இறைவன் வழங்கி வருகிறான். அவ்வப்போது, காலத்திற்கேற்றவாறு, தேவையான வளங்களைப் பெற்றுக் கொள்வதில் பங்களிப்பு நல்கும் அரசியல்வாதிகளும் இதற்குக் கிடைத்த பக்கபலமே.

இந்த வகையில்,1953ம் ஆண்டு பாரியளவிலான கட்டிடமும், அதிபர் விடுதியும், நீர் பெறுவதற்கான கிணறும் தல்கஸ்பிடிய முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டது.

1959 ஆம் ஆண்டு இங்கு,க.பொ.தசாதாரண தரம் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையிலிருந்து 1960 இல் பரீட்சைக்குத் தோற்றிய சகல மாணவர்களும் முதற்தடவையிலே சித்தியடைந்தமை வரலாற்றுச் சான்றாகும்.

மாணவர் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்ததால், பாடசாலைக்கென காணி பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், கட்டடங்களும் தொடராக கிடைக்கப் பெற்றன.



இதனைத் தொடர்ந்து 1976 மற்றும் 1978 களிலும் இரண்டு கட்டடங்கள் கிடைத்ததால், மாணவர்களுக்கு சௌகரிய மாகக் கல்வி பயிலவும் வசதி ஏற்பட்டது. இதன் வளர்ச்சித் தொடரில்,2000 ம் ஆண்டு, பல்லூடகப் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாறே 2001இல் வாசிகசாலையும் 2003 இல் கலாசார மண்டபமும் கிடைக்கப்பெற்றன. இந்தக் காலகட்டத்தில்தான் 2002 இல் இந்தப்பாடசாலை,மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது. பின்னர்,மாணவர்களின் தொகை அதிகரித்ததால்,

2005– 2008 ம் ஆண்டுகளுக்கிடையே இரண்டுமாடிக் கட்டிடமும் கிடைத்தது.

மேலும்,2014 இல், கணினி கூடமும் 2019இல், நிர்வாக அலகுடன் கூடிய கேட்போர் கூடமும் அமைந்த 3 மாடிக் கட்டிடம் கிடைத்ததுடன், பௌதீகவளங்களில் கம்பீரமாகக் காட்சியளிக்கத் தொடங்கியது இப்பாடசாலை. தற்போது, இதன் அதிபராக சீ.எம். எஸ் மஹ்பூப் ஆசிரியர் கடமையேற்றுள்ளார். இவரின் அயராத உழைப்பு, முயற்சி, தலைமத்துவப் பண்புகளை கல்விச்சமூகம் பாராட்டுகின்றமை அவரது தொழில்பற்றுக்கான சான்றுகளாகின்றன.

இவரின் காலப்பகுதி, கொவிட்19 அச்சுறுத்தலுக்கு உட்பட்டாலும், நிலைமையைக் கருத்திற் கொண்டு தேவையான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதிபரின் எதிர்காலத் திட்டங்களும் பாடசாலை பற்றிய அவரது கனவுகளும் நிறைவேற வேண்டுமென்பதே, தல்கஸ்பிடிய மக்களின் பிரார்த்தனைகளாகும்.

தற்போது அதிபர் சீ.எம்.எஸ் மஹ்பூபை தலைமையாகக் கொண்ட இந்த பாடசாலை 36 ஆசிரியர் குழாமினர், 520 மாணவர்களுடனும் கல்விப் பயணத்தில் வீர நடை போடுகிறது.

தற்போது புதிய கட்டிடத்தின் நிர்மாணப்பணிகள் இறுதிக் கட்டத்தில் உள்ளமையும்,பௌதீகவளம் மற்றும் சுகாதார வசதிகளில் பாதுகாப்பாக விளங்குகின்றமையும் சந்தோஷம் நிறைந்த செய்திகளாக உள்ளன.




### நிகழ்ச்சி நிரல்கள்

*****************

- தேசியகீதம் இசைத்தல்.
- தேசியகொடி ஏற்றுதல்.
- பவளவிழா நினைவுப்படிகம் திரைநீக்கம்.
- பிரதான நுழைவாயிலுக்கு அடிக்கல் நடுதல்.
- விளையாட்டு மைதான புனரமைப்பு.
- அதிபரின் உரை.
- பாண்ட்வாத்திய குழுவுக்கு உபகரணங்கள் வழங்கல்.
- பாடசாலைக்காணிக்கான உரிமைப்பத்திரம் வழங்கல்.
- பாராட்டுவிழா.
- கௌரவ அதிதி உரை.
- பிரதம அதிதி உரை.
- நன்றி உரை.





## சர்வதேச செய்திகள்

# கொவிட்-19 தொற்று: பல நாடுகளும் வட்டார நோயாக செயற்பட ஆரம்பம்

### உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை



கொவிட்–19 நோய்த் தொற்று ஒரு பெருந்தொற்றாக (பெண்டெமிக்) பரவி சுமார் இரண்டு ஆண்டுகளை எட்டியுள்ள நிலையில் அதனை பருவகால காய்ச்சல் போன்ற ஒரு வட்டார நோயாக (எண்டெமிக்) கருதி பல நாடுகளும் செயற்பட ஆரம்பித்துள்ளன.

ஒமிக்ரோன் வைரஸ் திரிபு வேகமாக பரவி வருகின்ற போதும் இங்கிலாந்து மற்றும் அயர்லாந்து போன்ற நாடுகள் பொது வாழ்வில் கட்டுப்பாடுகளை தளர்த்த ஆரம்பித்துள்ளன.

இந்த வாரத்தில் கட்டுப்பாடுகளையும் தளர்த்தும் அறிவிப்பை டென்மார்க் வெளியிட்டுள்ளது.

“கொவிட் தொடர்ந்தும் சமூகத்திற்கு ஆபத்தானதாக கருதப்படமாட்டாது” என்று டென்மார்க் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த வைரஸுடன் வாழ்வதற்கு சமூகம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று ஸ்பெயின், பிரிட்டன் மற்றும் சில நாடுகளின் அரசியல் தலைமைகள் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளன.

“கொவிட் அழிந்துவிடாது. அது பல ஆண்டுகளுக்கு சில நேரம் எப்போதும் எம்முடனேயே இருந்துவிடும். அதனுடன் வாழ நாம் பழகிக்கொள்ள வேண்டும்” என்று பிரிட்டன் சுகாதார அமைச்சர் சாஜித் ஜாவிட் கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தார்.

“பெண்டெமிக்கில் இருந்து எண்டெமிக் நிலைக்கு ஐரோப்பாவை நாம் வழிநடத்துகிறோம் என்று நினைக்கிறேன். கொவிட்டுடன் எவ்வாறு வாழ்வது என்பதை உலகுக்கு காட்டுவதில் நாம் முன்னணியில் உள்ளோம்” என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் கொவிட் தொற்றை ஒரு எண்டெமிக் நோயாக கையாள்வது முன்கூட்டியதாக இருக்கும் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது. இந்த வைரஸின் பரிணாமம் நிச்சயமற்றதாவும் உலக அளவில் இதன் தீவிரம் தொடர்ந்தும் நீடிப்பதாகவும் உலக சுகாதார அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

எண்டெமிக் எனும்போது இந்தத் தொற்று மக்களிடையே நிரந்தரமாக அல்லது சில ஆண்டுகளுக்கு காணப்படும். ஆனால் பாதிப்பின் தீவிரம், பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அளவுக்கு அதிகமாக இருக்காது.

எயிட்ஸ், மலேரியா போன்று கொவிட்–19 நோயும் மாறிவிடும். அவ்வப்போது சிலருக்கு வரும், போகும் என்ற நிலையில் இருக்கும்.

## வடகொரியா 2017 இன் பின் மிகப்பெரிய ஏவுகணை வீச்சு




வட கொரியா 2017 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தனது மிகப்பெரிய ஏவுகணை சோதனையை நடத்தியுள்ளது.

ஒரு இடைநிலை ஆயுதம் என நம்பப்படும் இந்த ஏவுகணை நேற்று ஜப்பான் கடலில் விழுவதற்கு முன்னர் 2,000 கிலோமீற்றர் பாய்ந்துள்ளது.

வட கொரியா இந்த மாதத்தில் நடத்தியுள்ள ஏழாவது ஏவுகணை சோதனையாக இது உள்ளது. இதற்கு ஜப்பான், தென் கொரியா மற்றும் அமெரிக்கா கண்டனம் வெளியிட்டுள்ளன.

வட கொரியா பலிஸ்டிக் ஏவுகணை மற்றும் அணு ஆயுத சோதனை மேற்கொள்வதற்கு ஐ.நா தடை இருப்பதோடு அந்த நாட்டின் மீது தடைகளும் விதிக்கப்பட்டுள்ளது.

## கட்டாய தடுப்பூசியை எதிர்த்து கனடாவில் வாகன அணிவகுப்பு



கனடா தலைநகரில் கொவிட்–19 தடுப்பூசி போட்டுக்கொள்வது கட்டாயமாக்கப்படுவதற்கும் வைரஸ் கட்டுப்பாடுகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து நூற்றுக்கணக்கான கனரக வாகனங்கள் அணிவகுத்துள்ளன.

இந்த மாத நடுப்பகுதியில் கனடாவும், அமெரிக்காவும் கனரக வாகன ஓட்டுநர்கள் தடுப்பூசி போட்டுக்கொள்வதைக் கட்டாயமாக்கின.

அதற்கு எதிராக “சுதந்திரமான வாகன அணி” எனும் பெயரில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் அது அரசாங்கத்தின் அத்துமீறலுக்கு எதிரான ஆர்ப்பாட்டமாக மாறியது.

உலகின் மிக நீளமான எல்லையைக் கடக்கும் வாகனமோட்டிகள் அதனால் பாதிக்கப்பட்டனர்.

போராட்டத்தைக் கட்டுக்குள் கொண்டுவரத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவிருப்பதாக ஒட்டாவா பொலிஸார் தெரிவித்தனர்.

## அமெரிக்காவில் பனிப்பொழிவு



கடந்த 4 ஆண்டுகளில் முதல் முறையாக அமெரிக்கக் கிழக்குக் கடற்கரைப் பகுதியை பெரிய அளவிலான பனிப்புயல் தாக்கியுள்ளது.

கடுமையான பனிப்பொழிவும் சூறாவளியும் அப்பகுதியில் ஏற்படுவதற்கு சில மணிநேரங்களுக்கு முன்னதாக, 5 மாநிலங்களில் அவசரநிலை பிறப்பிக்கப்பட்டது.

சில பகுதிகளில் வரலாறு காணாத பனிப்பொழிவு ஏற்படும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். மேலும், கடலோரப் பகுதியில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சுமார் 6,000 அமெரிக்க விமானங்கள் இதன் காரணமாக ரத்து செய்யப்பட்டுள்ளன.

## இத்தாலி ஜனாதிபதியாக செர்கியோ மீண்டும் தேர்வு



இத்தாலியில் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை நியமிப்பதில் கூட்டணி கட்சிகளிடையே இணக்கம் எட்டப்படாத நிலையில் பதவியில் உள்ள ஜனாதிபதி செர்கியோ மட்டரெல்லா தனது இரண்டாவது தவணைக்கு பதவி வகிக்க இணங்கியுள்ளார்.

கடந்த ஆறு நாட்களாக இடம்பெற்ற இழுபறியை அடுத்தே பெரும்பாலானவர்களின் தேர்வாக 80 வயதான செர்கியோ நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் பதவியில் இருந்து வெளியேறுவதற்கு விருப்பத்தை வெளியிட்டபோதும், பிரதமர் மரியோ ட்ராகி, இத்தாலியின் ஸ்திரத்தன்மைக்காக பதவியில் நீடிக்கும்படி வலியுறுத்தியுள்ளார்.

இதன்படி எட்டு சுற்று வாக்குப் பதிவுக்கு பின்னர் அவர் உத்தியோகபூர்வமாக மீண்டும் அந்தப் பதவிக்கு கடந்த சனிக்கிழமை தேர்வு செய்யப்பட்டார்.



கண்டி, அம்பிட்டிய சென் மேரீஸ் தமிழ் வித்தியாலயத்தின் கணனி அறை திறப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கண்டி கல்வி வலய கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தமிழ்ச்செல்வன் அதனை திறந்து வைப்பதையும் பாடசாலை அதிபர் மற்றும் கல்வி ஆலோசகர் ஆகியோர் அருகில் இருப்பதையும் காணலாம். நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

## ருவன்புர அதிவேகப் பாதை பணிகளுக்கு நிலம் தெரிவு

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

ருவன்புர அதிவேகப் பாதையின் 25 கிலோ மீறறர் தூர வீதியின் முதற்க ட்டமான கஹதுடுவ முதல் இங்கிரிய வரையிலான அமைப்புப் பணிகள் தற்போது இடம்பெற்று வருவதுடன் 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இப்பணிகள் நிறைவு பெறவுள்ளதாக இத்திட்டத்தின் நிறைவேற்றுக் காரியாலய அதிகாரிகள் நேற்று ஊடகங்களுக்கு தெரிவித்தனர்.

இதேவேளை இங்கிரிய முதல் பெல்மதுளை வரையிலான இதன் இறுதிக்கட்டப் பணிகளுக்கு பொருத்தமான நிலத்தினை தெரிவு செய்யும் ப ணிகள் தற்போது இடம் பெற்று வருவதாகவும் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள ஆறு நிலப் பிரதேசங்களில் மிகவும் பொருத்தமானதை வீதி அபிவிருத்தி அதிகார சபை மொரட்டுவ பல்கலைக்கழகம் பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் இயந்திர தொழில்நுட்ப நிறுவனம் ஆகியன மேற்கொண்டு வருவதாகவும் இவ்வதிகாரிகள் தெரிவித்தனர்.




## தலவாக்கலை- கிளாரெண்டன் தோட்டத்தில் சிறந்த கொழுந்து பறிக்கும் போட்டி

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

தலவாக்கலை பெருந்தோட்ட கம்பெனிக்கு உட்பட்ட கிளாரெண்டன் தோட்ட நிர்வாகத்தின் ஏற்பாட்டில் 2022ஆம் ஆண்டு சிறந்த கொழுந்து பறிக்கும் போட்டி அண்மையில் நடத்தப்பட்டது.

முகாமையாளர் இஷான் முகமட் தலைமையில் இடம்பெற்ற இந்த தேயிலை பறிக்கும் போட்டியில் அதிதிகளாக நானுஓயா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பெருந்தோட்ட கம்பனியின் மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் முகாமையாளர் ராம், தோட்ட அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



பத்து நிமிடத்தில் கொழுந்து பறிக்கும் நிறைக்கு ஏற்ப வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். அதற்கு ஏற்ப எம்.விஜயலட்சுமி 2 கிலோ 560 கிராம் கொழுந்தை பறித்து முதலாம் இடத்தையும், இருதயசாமி ரட்ண மேரி 2 கிலோ 260 கிராம் பறித்து இரண்டாம் இடத்தையும், சுப்பிரமணியம் கோமதி 2 கிலோ 200 கிராம் கொழுந்து பறித்து மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். இதன்போது வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களையும், பெறுமதிமிக்க பரிசுப் பொருட்களையும் தோட்ட நிர்வாகம் வழங்கி தோட்டத் தொழிலாளர்களை கௌரவப்படுத்தியது விசேட அம்சமாகும்.

## தனது துப்பாக்கி வெடித்து சார்ஜன் அவ்விடத்திலேயே பலி

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

ஹப்புத்தளை விசேட அதிரடிப் படையின் சார்ஜனின் துப்பாக்கி வெடித்ததினால், சார்ஜன் அவ்விடத்திலேயே பலியானார். இச்சம்பவம் ஹப்புத்தளை அதிரடிப்படை முகாமில் கடந்த 29ஆம் திகதி மாலை இடம்பெற்றுள்ளது. 54 வயதுடைய அதிரடிப்படை சார்ஜன் தனது துப்பாக்கியை சுத்தம்செய்து கொண்டிருந்த வேளையில், எதிர்பாராதவிதமாக அத்துப்பாக்கி வெடித்து, அதன் ரவை சார்ஜனின் தலைப்பகுதியை துளைத்துச் சென்றதினால், அவர் அவ்விடத்திலேயே பலியானார். சடலம் தற்பொழுது தியத்தலாவை அரசினர் மருத்துவமனை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## கால்நடை வைத்தியர்களுக்கு தெளிவூட்டும் நிகழ்வு





**உக்குவளை விசேட நிருபர்**

மாத்தளை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி கண்டறிவதற்காக இம்மாவட்ட கால்நடை வைத்தியர்களை தெளிவூட்டும் நிகழ்வு மாத்தளை மாவட்ட செயலக கெப்பட்டிபொல மண்டபத்தில் இடம் பெற்றது. இதன்போது கால்நடை சம்பந்தமான இராஜாங்க அமைச்சர் ஹேரத், மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹண கமாரதிசாநாயக்க, மாத்தளை மாவட்ட செயலாளர் தேஜானி திலக்கரத்ன அமைச்சின் மேலதிக செயலாளர் சமரநாயக்க அமைச்சின் பணிப்பாளர் நாயகம் திருமதி கொத்தலாவல ஆகியோர் உரையாற்றினார்கள்.

## புதிதாக நிர்மானிக்கப்படும் பஸ்தரிப்பு நிலையம் உடைப்பு

### ஐந்து பேர் கைது

**ஹட்டன் விசேட நிருபர்**

அக்கரபத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கரபத்தனை மன்ராசி நகரத்தில் நிர்மானிக்கப்பட்டு வந்த புதிய பஸ் தரிப்பு நிலையத்தினை உடைப்பு சம்பவம் தொடர்பாக ஐந்து பேர் கைது செய்து நேற்று (30) நுவரெலியா நீதிவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ள பொலிஸார் தெரிவித்தனர்.

மன்ராசி நகரத்தில் பஸ்தரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு அமைவாக ராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் மன்ராசி பாலத்திற்கு அருகாமையில் பஸ்தரிப்பு நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நிர்மானப்பணிகள் இடம்பெற்று வந்தன.



இந்த பஸ்தரிப்பு நிலையம் நிர்மானிக்கப்பட்ட காணி தொடர்பாக பிரச்சினைகள் எழுந்ததன் காரணமாக பஸ் தரிப்பு நிலையம் நிர்மானப்பணிகள் தாமதமாகின.

இந்நிலையில் கடந்த 26 திகதி இரவு குறித்த பஸ் தரிப்பு நிலையம் நிர்மானிப்பதற்காக போடப்பட்டிருந்த கொங்கிறீட் தூண்கள் இனந் தெரியாதவர்களால் உடைக்கப்பட்டன.

இது குறித்து அக்கரபத்தனை பொலிஸ் நிலையத்தில் அக்கரபத்தனை பிரதேசசபைத்தலைவரினால் செய்யப்பட்ட முறைபாட்டுக்கமைய மன்ராசி பிரதேசத்தினை சேர்ந்த ஐந்து பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்து நேற்று (30) திகதி நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களை பிணையில் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரபத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நகர்வலம்



# இராஜகிரிய- நாவல புதிய பாலத்தின் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துக

## நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பணிப்பு





எத்துல்கோட்டே நாவல வீதியில் நிலவும் கடும் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வாக இராஜகிரிய நாவல கால்வாயின் குறுக்கே நிர்மாணிக்கப்படும் புதிய பாலத்தின் நிர்மாணப் பணிகள் 60% பூர்த்தியடைந்துள்ளது.

நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்தி பாலத்தை பூர்த்தி செய்யுமாறு ஆளும் தரப்பு பிரதம கொறடா நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பணிப்புரை வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் அவர் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் ஆகியோருக்கு பணிப்புரை வழங்கினார். நெடுஞ்சாலை முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின் போது இந்தப் பணிப்புரைகளை வழங்கியதாக அமைச்சர் தெரிவித்தார்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் முழு மேற்பார்வையின் கீழ் அரச அபிவிருத்தி மற்றும் வடிவமைப்புக் கூட்டுத்தாபனத்தினால் இரு வழிப்பாதையுடன் கூடிய இந்தப் பாலம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

600 மீற்றர் நீளமும் 10.4 மீற்றர் அகலமும் கொண்ட இந்தப் புதிய பாலத்திற்கு ரூ.1,698.55 மில்லியன் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பாலத்தின் இருபுறமும் தலா 1.5 மீட்டர் அளவில் இரண்டு நடைபாதைகள் அமைக்கப்படும். மேலும் அங்கம்பிட்டியில் இருந்து பாலம் நோக்கி 60 மீற்றர் நீள பிரவேச வீதியும், பாலத்தில் இருந்து பாடசாலைக்கான பாதை வரை 40 மீற்றர் நீள பிரவேச வீதியும் அமைக்கப்படும். இப்பகுதியில் உள்ள சதுப்பு நிலங்கள் சேதமடையாத வகையில் மின் கம்பங்களில் புதிய பாலம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இந்த புதிய பாலம் நிர்மாணிக்கப்படுவதன் மூலம் பாராளுமன்ற வீதி மற்றும் கோட்டே ஆகிய பகுதிகளில் இருந்து வரும் வாகனங்கள் நாவலை நோக்கி இலகுவாக செல்லக்கூடியதாக இருப்பதுடன் ராஜகிரிய வீதியில் நிலவும் போக்குவரத்து நெரிசல் குறையும் என அமைச்சு தெரிவித்தது.

'கொவிட் 19' வேலைத்திட்டம்:

# கொழும்பு மாநகர சபை பிரிவில் பங்களிப்பு செய்தோர் கௌரவிப்பு



பாணந்துறை மத்திய குறூப் நிருபர்

கொவிட்19 தடுப்பூசி வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு கொழும்பு மாநகர சபை பிரிவில் இந்த வேலைத் திட்டத்தில் பங்களிப்புச் செய்த மாநகர மன்ற சுகாதாரப் பிரிவினர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

கொழும்பு மாநகர சபை மேயர் ரோஸி சேனாநாயக்க தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமது சுகாதார நிலையைக்கூட பொருட்படுத்தாது தமது கடமை பொறுப்புகளுக்கு அப்பால் சென்று பாரிய பங்களிப்பு வழங்கிய பொதுச்சுகாதார அதிகாரி வில்பிரட் வடர்ஸ்லட் மற்றும் அம்பியூலன்ஸ் வண்டி உதவியாளர் கே.சிரியானந்த ஆகியோர் மேயரினால் "கொழும்பு நகரின் கொவிட் ஒழிப்பு வீரன்" என்ற பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் மாநகர பிரதி மேயர் எம்.ரீ.எம். இக்பால், நகர ஆணையாளர் சட்டத்தரணி ரோசனீ திசாநாயக, சுகாதார திணைக்களத் தலைவர் டாக்டர் ருவன் விஜயமுனி உள்ளிட்ட அதிகாரிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

தென் மாகாணத்தைச் சேர்ந்த

# 33,000 அரச ஊழியர்களுக்கு ரூ. 5000 கொடுப்பனவு

மாத்தறை தினகரன் நிருபர்

தென்மாகாணத்திலுள்ள சுமார் 33,000 கல்விச் சேவையாளர்களுக்கு அரசாங்கம் வழங்கிய 5000 ரூபா கொடுப்பனவு ஜனவரி மாதச்சம்பளத்துடன் வழங்கப்பட்டதாக தென் மாகான கல்வி அமைச்சின் செயலாளர் ரஞ்சித் யாப்பா தெரிவித்தார்.

காலி, மாத்தறை, ஹம்மாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட கல்விச் சேவை ஊழியர்களுக்கே இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

மாகாண ஆளுநர் விலிகமகேயின் ஆலோசனையின் பேரில் சபை நிதியிலிருந்து இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். சுமார் 33,000 கல்விச் சேவையாளர்களுக்கு இந்தக் கொடுப்பனவை வழங்க அரசாங்கம் 165 மில்லியன் ரூபாவை செலவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அங்கவீன குழந்தைகளுக்கு இலவச மருத்துவ முகாம்

புத்தளம் வண்ணாத்தவில்லு பிரதேசத்தில் 35 வயதிற்குட்பட்ட அங்கவீனர்களுக்கான இலவச மருத்துவ முகாம் ஒன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

மேற்படி மருத்துவ முகாம் இன்று (31) திங்கட் கிழமை காலை 8:30 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை நடைபெறவுள்ளது.

வண்ணாத்தவில்லு பிரதேச சபை பிரதான மண்டபத்தில் இம் மருத்துவ முகாம் நடைபெறும். இம் முகாமை வண்ணாத்தவில்லு பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் பிரிவு ஏற்பாடு செய்துள்ளது. இம்மருத்துவ முகாமிற்கு வொய்ஸ் (Voice) நிறுவனம் அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அநுராதபுரம் நுவரவெவ அருகில் சுற்றுலா வலயம்

## அரசாங்கம் விசேட கவனம்

அநுராதபுரம் தினகரன் நிருபர்

அநுராதபுரம் நுவரவாவிக்கு அருகில் (நுவரவெவ) சுற்றுலா பயணிகளை கவரக்கூடிய விதத்தில் சுற்றுலா வலயமொன்றினை அமைப்பதற்கு அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளதாக மாவட்ட திட்டமிடல் பிரிவு தெரிவிக்கின்றது.

மேற்படி திட்டத்தினை துரித கதியில் மேற்கொள்வதற்காக வேண்டி நகர நிர்மான அதிகார சபையின் அநுராதபுரம் அலுவலக உயர் அதிகாரிகள் மற்றும் நீர்பாசன திணைக்கள அதிகாரிகள் அப்பகுதிக்கு சென்று நிலைமைகளை ஆராய்துள்ளனர். இத்திட்டத்தினை மேற்கொள்வதற்காக வேண்டி பிரான்ஸ் நாட்டு அரசாங்கம் தேவையான நிதி உதவிகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளதுடன் 200 மில்லியன் ரூபா நிதி செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. சுற்றுலா வலயம் அமைக்கும் போது நுவரவாவி குளத்திற்கு எந்த விதமான பாதிப்புக்களும் ஏற்படாத விதத்தில் அபிவிருத்தி திட்டத்தினை மேற்கொள்வதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட திட்டமிடல் பிரிவு மேலும் தெரிவிக்கின்றது.

# பொலன்னறுவை அஹதியா பாடசாலை புதிய நிர்வாகிகள்

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்



பொலன்னறுவை மாவட்ட அஹதிய்யா பாடசாலைகளின் சம்மேளனத்தின் புதிய நிருவாக தெரிவு (29) பொலன்னறுவை கதுறுவல ஜும்ஆப் பள்ளிவாசல் மர்கஸ் வளாகத்தில் நடைபெற்றது.

அஹதிய்யா பாடசாலைகளின் சம்மேளனத்தின் தேசிய தலைவர் எம்.ஆர்.எம்.ஸரூக் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சம்மேளனத்தின் பொருளாளர் எம்.எச்.எம்.உவைன், உப தலைவர்களான பாரூக் பதீன், அஷ்ஷெய்ஹ் யூ.எல். றிபாய்தீன், உப செயலாளர் ஹிஸாம் ஸுஹைல், பொருளாளர் அஷ்ஷெய்ஹ் அக்ரம் ஜுனைத், முஸ்லிம் சமய கலாச்சார பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள மாவட்ட கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் அஷ்ஷெய்ஹ் பீ. றவூப்தீன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது நடப்பு வருடத்திற்கான புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டவர்களின் விபரங்கள் பின்வருமாறு,

இதன்படி பொலநறுவை மாவட்ட அஹதிய்யா பாடசாலைகளின் சம்மேளனத்தின் புதிய தலைவராக ஓய்வு பெற்ற அதிபர் என். எம்.ஏ.மஜீத், செயலாளராக அமானா வங்கி முகாமையாளர் ஆர்.ஜிப்ரி, பொருளாளராக தொழிலதிபர் எஸ். எச்.அமானுல்லாஹ், உதவி தலைவர்களாக அஷ்ஷெய்ஹ் ஏ.சீ.எம். ஜௌபர், ஏ. மௌஸூர் (அதிபர்), அஷ்ஷெய்ஹ். ஐ.ஏ.மஜீத், உதவிச் செயலாளராக அஷ்ஷெய்ஹ் எம். என்.எம். சிபான், உதவிப் பொருளாளராக பி.ஏ. ஜப்பார் (தொழிலதிபர்) ஆகியோருடன் நடப்பு வருடத்திற்கான புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாக 17 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கல்வித்துறைக்கு பாரிய பங்களிப்பு

## நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி விழாவில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த

பேருவளை விசேட நிருபர்



இலங்கையின் கல்வி வரலாற்றில் கல்வித்துறை முன்னேற்றத்திற்காக அரசாங்கம் 2022 ம் ஆண்டிற்கு ஆகக் கூடுதலான நிதியை ஒதுக்கி வரலாறு படைத்துள்ளதாகவும், கொவிட் பாதிப்பினால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கூட நாட்டின் கல்வித் துறையை கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விஷேட கவனம் செலுத்தியுள்ளதாகவும் அதற்கமையவே 1000 பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தி அப்பாடசாலைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய பாரிய திட்டம் வகுத்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷான்த டி சில்வா தெரிவித்தார்.

பேருவளை சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தும் வைபவமும் மாணவர் தலைவிகளுக்கான சின்னஞ் சூட்டும் நிகழ்வும் (27) பாடசாலை பாக்கீர் மாக்கார் மண்டபத்தில் அதிபர் பஹீமா பாயிஸ் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலின் வேண்டுகோளின் பேரில் மேற்படி பாடசாலை தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டமை இங்கு விசேட அம்சமாகும்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் உட்பட முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தொடர்ந்து உரையாற்றும் போது, சீனன் கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் தேசிய பாடசாலையில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து அங்க சம்பூரணமான தேசிய பாடசாலையாக மாற்றியமைக்க என்னால் முடியுமான அனைத்தையும் செய்வேன். பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலின் வேண்டுகோளின் பேரில் இப்பாடசாலை உட்பட மாவட்டத்திலுள்ள மேலும் பல பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தப்பட்டன.

வெறுமனே பெயர் பலகைக்கு மட்டுப் படுத்தப்படாமல் தேசிய பாடசாலைகளை சிறந்த நிலைக்கு கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்வேன். தேசிய பாடசாலைகள் பற்றி சிலர் விஷமத்தனமான தவறான பிரசாரங்களை செய்கின்றனர்.

தமது அரசியல் இலாபத்திற்காக இவ்வாறு போலிப் பிரசாரங்களை செய்கிறார்கள். தேசிய பாடசாலைகள் பெயர் பலகைக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் தேசியப் பாடசாலைக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க ஜனாதிபதி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். நாம் எமது வருங்கால பிள்ளைகள் பற்றி சிந்திக்க வேண்டும். இதன்போது நீலம், பச்சை, சிவப்பு கட்சிகள் பற்றி சிந்திக்கக் கூடாது.

பிள்ளைகளின் எதிர்கால முன்னேற்றத்திற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் நல்ல பணிகளை வர்ணக் கண்ணாடி கொண்டு பார்க்கக் கூடாது.

ஜனாதிபதியின் 1000 தேசிய பாடசாலைகள் அமைக்கும் பிரதான இலக்கு நகர் புர பாடசாலைகளைப் போல் கிராமப் புர பாடசாலைகளையும் எவ்வித வேறுபாடின்றி முன்னேற்றுவதே ஆகும். அந்த வகையில் நாட்டின் வரலாற்றில் எந்தவொரு அரசாங்கமும் ஒதுக்காத ஆகக் கூடுதலான நிதியை இன்றைய அரசாங்கம் கல்விப் பணிக்காக ஒதுக்கியுள்ளது.

இப்பாடசாலையின் முன்னேற்றத்தில் பாடசாலை சமூகம் உட்பட பெற்றோர்களும் பாரிய பங்களிப்பை வழங்கி வருகின்றமை பாராட்டத்தக்கது என்றார்.


## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 07 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது குறிப்பு இலக்கம்**

I. DIVNA/LND/LA/ACQUI/04/1/17
II. DIVNA/LND/LA/ACQUI/04/1/25
III. DIVNA/LND/LA/ACQUI/04/1/16

**காணி அமைச்சின் குறிப்பு இல**

I. 4-3/7/2020/HW/154
II. 4-3/7/2020/HW/189
III. 4-3/7/2020/HW/19

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**அட்டவணை**

I. வட்டார இல. 1052, பெலவத்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள கொசுர கிராமத்தின் நில அளவை அதிபதியால் தயாரிக்கப்பட்ட இறுதிக்கிராம வரைபட இல.551 துணை இல. 06. தாள் இல.06 திகதி 30.11.2021 இல் குறிப்பிடப்பட்ட 92 தொடக்கம் 100 வரையான 09 (ஒன்பது) காணித்துண்டுகள்.

II. வட்டார இல. 1054, கொடாகூறுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள கொடாகூறுவ கிராமத்தின் நில அளவை அதிபதியால் தயாரிக்கப்பட்ட ஆரம்பத்திட்ட வரைபட இல.கு 2491 திகதி 29.11.2021 இல் குறிப்பிடப்பட்ட 01 தொடக்கம் வரையான 3 (மூன்று) காணித்துண்டுகள்

III. வட்டார இல 1059. நாக்கலகமுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள நாக்கலகமுவ கிராமத்தின் நில அளவை அதிபதியால் தயாரிக்கப்பட்ட ஆரம்பத்திட்ட வரைபட இல. கு 2490 திகதி 25.11.2021 இல் குறிப்பிடப்பட்ட 01 தொடக்கம் 06 வரையான (ஆறு) காணித்துண்டுகள்

வடமேல் மாகாணம் குருணாகல் மாவட்டத்தின் நாரம்மல பிரதேச செயலாளர் பிரிவில் அனைத்திற்குமானது மேலதிக விபரங்களுக்கு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 04.01.2020 இன் மேலதிக பொதுச்சாதாரண வர்த்தமானி இல 2251/4 ஐ பார்க்கவும்.

**டபிள்யூ.பி.சி.என். பதிரன**
**பிரதேச செயலாளர் மற்றும் காணி எடுத்தல் அலுவலகர்.**
**நாரம்மல**

**பிரதேச செயலாளர் அலுவலகம்**
**நாரம்மல.**
**31.01.2022**



## பெறுகை அறிவித்தல்

**எரிசக்தி அமைச்சு**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**

**இபெகூ தலைமை அலுவலக மத்திய வளிச்சீராக்கி முறைமையின் 03ஆம் இலக்க குளிராக்கி (CHILLER) (System B) CONDENSER COIL திருத்தவேலைக்கான விலைக்கோரல்**

**B/09/2022**

இபெகூ தலைமை அலுவலக மத்திய வளிச்சீராக்கி முறைமையின் 03ஆம் இலக்க குளிராக்கி (CHILLER) (System B) CONDENSER COIL திருத்தவேலை" ஒப்பந்தத்திற்கு இலங்கையின் அங்கீகரிக்கப்பட்ட ஆர்வமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் கோருகின்றார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கொவிட்-19 தொற்று பரவல் காரணமாக விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/. மற்றும் மீளளிக்கப்படாத கட்டணமான 1,000 ரூபாவை (ரூ. 925.93 + 8% VAT) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டை மூலப் பிரதியை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

சகல விலைமனுக்களுடனும் 10,000.00 ரூபா தொகைக்கான விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2022-02-21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகள்,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**01ஆம் தளம்,**
**இல: 609, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

மின் பாவனையாளர்களுக்கு சிறந்த விநியோகம் மற்றும் சேவையினை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன், இலங்கை மின்சார சபை கீழ் காட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் மின்சார தொகுதி பராமரிப்பு, புனரமைப்பு அல்லது கட்டுமானங்களை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. இதற்காக அப்பிரதேசங்களில் தற்காலிக மின்வெட்டு கீழ் காட்டப்பட்டுள்ள நாட்களில் / நேரங்களில் இடம்பெறும். இதற்காக வாடிக்கையாளருக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக எமது வருத்தத்தினை தெரிவித்துக்கொள்வதோடு திட்டமிட்ட திருத்தங்கள் நிறைவு பெற்றவுடன் மீண்டும் விநியோகத்தினை வழமைபோல் மேற்கொள்ள இலங்கை மின்சார சபை நடவடிக்கை மேற்கொள்ளும்.

# தென் மாகாணம் 2 - பெப்ரவரி 2022

## மின் பொறியலாளர் பிரதேசம் : அம்பாந்தோட்டை

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : அம்பலாந்தொட்ட

2022-02-01 08:30-17:00
விநியோகம் : தெஹிகஹலன்த, கொடவாய, கொடவாய விகாரை

2022-02-05 08:30-12:30
மொத்த : அம்பலந்தொட்டை நீர் சுத்திகரிப்பு, அம்பலந்தொட்டை நீர் சுத்திகரிப்பு பழைய
விநியோகம் : மெலே கொலனிய - பள்ளி

2022-02-05 13:00-17:00
விநியோகம் : போலான நீர் சூஷனய, ஸெத்புரகம, வீரஹெதெப்ம

2022-02-14 08:30-17:00
விநியோகம் : பிங்கம

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : அம்பாந்தோட்டை

2022-02-02 08:30-17:00
மொத்த : பெல்லகஸ்வெள நீர் விநியோகம்
விநியோகம் : போ - ஆர, மஹவெலி அலுவலகம், ரன்ஜன் விஜேரத்னகம, வலவ 7வது அலகு, வலவ 8வது அலகு

2022-02-06 08:30-17:00
மொத்த : செக் கொன்கிரீட் கலக்கும் பகுதி, லாப் கேஸ், எண்ணெய் கொவிபல

2022-02-10 08:30-17:00
மொத்த : ஆரபொக்க ரேன்த கேட்
விநியோகம் : 40 வெள, இஹல கட்டுவ, சர்வதேச கேட்போர் கூடம், கட்டுவெவ சந்தி, நாகரவெள புதிய, நாகரவெள பழைய, ரீ.ஆர். 15, வலயம் 06

2022-02-14 08:30-17:00
மொத்த : விடுதி முகாம் 4வது பகுதி, செக் காண்ட பகுதி, துமிந்து உப்பு, கட்டுவெள ஆயகாயப் பாலம், மிரிஜ்ஜவில ஆகாயப் பாலம், எம்.ரீ.வீ. ஆலை வரிசை
விநியோகம் : யுத்த இராணுவ முகாம், கஜுவத்தை, கட்டுவெள சந்தி, மாகா , மஹஆர, ரன்கிரி உயன

2022-02-20 08:30-17:00
மொத்த : ஸிரிபோப்புர ஆகாயப் பாலம் 02, ஸொலிட் வேஸ்ட்
மொத்த மற்றும் விநியோகம் : அதல்ல
விநியோகம் : கேன் வீடுகள், ஹங்கம வீடுகள், ஜுல்கமுவ, கொஹொலன்கல, மயுரபுர, மெத்ஸெவன, பல்லெமலல, ருவன்புர, சப்ரகமுவ வீடுகள், ஸஜித் பதனம, சிங்கப்பூர் வீடுகள், ஸோபிதகம, ஸ்தூதி கிராமம் - கலாச்சார கிராமம், ஸ்தூதி கிராமம், ஸ்வர்ணபரனகம, ஸ்வர்ணமாலிபுர, துருஸெவண, ஸுனாமி ஆரம்பப் பாடசாலை, ஸுசி, ஸுசி - ஏ.பீ.ஸீ., ஸுசி - எச், ஸுசி - ஜே, ஸுசி பாடசாலை, ஸுசி ஆகாயப் பால கிராமம், உடமலல - ஆராம பாதை, வெஹெரகல ஆரண்ய, வனஜீவி, வெலிகத்த

2022-02-23 08:30-17:00
மொத்த : பூந்தல உப்புத் தொழிற்சாலை, வெலிகத்த விவசாய பல்கலைக்கழகம்
விநியோகம் : பூந்தல உப்புக் கிராமம், பூந்தல கிராமம், ஸிரியகம

2022-02-26 08:30-17:00
மொத்த : பர்னாட் - மிரிஜ்ஜவில எப்.ரீ. ஸெட், கேன்- மிரிஜ்ஜவில எப்.ரீ. ஸெட், லக்கீ - மிரிஜ்ஜவில எப்.ரீ.ஸெட், தொழிற் பயிற்சி நிலையம் - மிரிஜ்ஜவில
மொத்த மற்றும் விநியோகம் : டய்னமிக் - மிரிஜ்ஜவில எப்.ரீ.ஸெட்

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : கதிர்காமம்

2022-02-15 08:30-17:00
மொத்த : லுணுகம்வெஹெர வலது கரை, லுணகம்வெஹெர நீர் விநியோக சபை
விநியோகம் : லுணுகம்வெஹெர இடது கரை, பிலிமஹெல, ஸன்தகிரிகல 1-2 கொலனிய, ஸிஸிலகம, தம்மென்னாவ

2022-02-15 09:00-17:00
மொத்த : லுணுகம்வெஹெர வலது கரை, லுணகம்வெஹெர நீர் விநியோக சபை
விநியோகம் : லுணுகம்வெஹெர இடது கரை, பிலிமஹெல, ஸன்தகிரிகல 1-2 கொலனிய, ஸிஸிலகம, தம்மென்னாவ

2022-02-17 08:30-17:00
மொத்த : ஸித்துல்பவ்வ நீர் விநியோக சபை

2022-02-17 09:00-17:00
மொத்த : ஸித்துல்பவ்வ நீர் விநியோக சபை
மொத்த மற்றும் விநியோகம் : கும்புக் ஸெவண
விநியோகம் : மொபிரெல் தூண் போதிராஜபுர, போதிராஜபுர, கட்டகமுவ யுத்த இராணுவ முகாம், ஸித்துல்பவ்வ, வல்லிமாதாகம

2022-02-22 09:00-17:00
விநியோகம் : மத்தல, பதவிகம, ஸிதுமினகம

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : சூரியவெவை

2022-02-01 08:30-17:00
மொத்த : மதுனாகல ரேன்த கேட், ஸபாரி பூங்கா
மொத்த மற்றும் விநியோகம் : அலுவலக மற்றும் விடுதி முகாம்
விநியோகம் : மஹபெலெஸ்ஸ 02 வெள, உனதிய உல்பத, கரண்டுலேன, மதுனாகல, ஸீனிமோதரயாய, உடகம சந்தி

2022-02-02 08:30-17:00
விநியோகம் : ஹத்போருவ -டீ - 1 ஓடை, குருகம்வெட்டிய, வெனிவெல்ஆர விகாரை, வெனிவெல் ஆர - 2, வெனிவெல் ஆர - 1

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : திஸ்ஸமகாராமை

2022-02-01 08:30-17:00
விநியோகம் : அட்டிக்காவ - ஹல்மில்லேவ, தியெஸ்யாய, டபல் போக்குவ, இக்கபள்ளம, நெதிகம்வில நவோதா, உனவ, வல்கம்பத்துவ, வெலிபொதேவெல, வெலிபொதேவெல புதிய

2022-02-01 09:00-17:00
விநியோகம் : டபல் போக்குவ, இக்கபள்ளம, நெதிகம்வில நவோதா, உனவ

2022-02-03 08:30-17:00
மொத்த : ரேன் ட்ரீ
விநியோகம் : அனிகட்ஸ் 10, தம்பேவெலேன, தெபரவெள ஆஸ்பத்திரி, தெபரவெள சந்தி, தெபரவெள ரெலிகொம், தெபரவெள நீர் விநியோக சபை - 01 - கிராமம், தெபரவெள நீர் விநியோக சபை - 02, எகமுதுகம, கெமுனுபுர, காஸிங்கம நகரம், பொல்கஹவெலேன, ஸன்துன்கம, டிக்கிரி உதானபுர, திஸ்ஸ நிவாடு நிகேதனய, விஜிதபுர, யட்டல, யாயகொட

2022-02-07 08:30-12:30
மொத்த : வீரவில யொவுன் சேனாங்கய
விநியோகம் : ஸெத்கிருலகம, வீரவில கொவிபல

2022-02-07 08:30-17:00
மொத்த : வீரவில யொவுன் சேனாங்கய
விநியோகம் : யுத்த இராணுவ முகாம் 1, ஸெத்கிருலகம, ஸிரிஜயகம

2022-02-07 13:00-17:00
மொத்த : தேதுண லெஷர்
விநியோகம் : ப்ளவர் கார்ட்ன் லேக் ரிஸோர்ட், ஸேதவத்தை

2022-02-23 08:30-17:00
விநியோகம் : கோன்வெலேன

## மின் பொறியலாளர் பிரதேசம் : மாத்தறை

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : திக்வெலை

2022-02-02 08:30-17:00
மொத்த : காகில்ஸ் புட் ஸிட்டி
விநியோகம் : அலுத்கொடை, தொடம்பஹல, மாவெல்ல பாதை புதிய, பிஹிம்பிய

2022-02-03 08:30-17:00
விநியோகம் : கலகம புதிய, கலகம புதிய

2022-02-11 08:30-17:00
விநியோகம் : மாகா காண்ட தொழிற்சாலை, வலகன்த கிழக்கு

2022-02-21 08:30-17:00
விநியோகம் : நில்வெல்ல, நில்வெல்ல ஆடை, நுவன் ஐஸ் தொழிற்சாலை

2022-02-22 08:30-11:00
மொத்த : தலல்ல பலகைத் தொழிற்சாலை

2022-02-22 11:00-13:00
விநியோகம் : தலல்ல நீர் விநியோக சபை

2022-02-22 14:00-16:30
விநியோகம் : டீ.ஜீ. பெஷன்

2022-02-25 08:30-17:00
விநியோகம் : லெபீம வத்தை

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : ஹக்மனை

2022-02-11 08:30-17:00
மொத்த : சீன புகையிரத நிலையம் வலகன்த
விநியோகம் : வலகன்த

2022-02-14 08:30-17:00
விநியோகம் : ஹீல்லகன்த, உடகிரின்த

2022-02-17 08:30-17:00
விநியோகம் : கொஹுலியத்த

2022-02-26 08:30-17:00
மொத்த : கடவெத்துவ சீனக் கருத்திட்டம், கொட்டவத்தை பாதைகள் அபிவிருத்தி, துன்போதிய சீனக் கருத்திட்டம், யட்டியன ஆடைத் தொழிற்சாலை
மொத்த மற்றும் விநியோகம் : லிஹினியா டய்ல், யட்டியன
விநியோகம் : அரச பீங்கான செங்கல் கூட்டுத்தாபனம், ஹொரன்துவ, கடவெத்துவ, கோட்டவத்தை, வல்பூலுகஹஹேன

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : கித்தேட்டிய

2022-02-02 08:30-17:00
மொத்த : கெதிக் நெவ் பகுதி, தக்ஷின அபிவிருத்தி, நிபொலெக்
மொத்த மற்றும் விநியோகம் : இஸ்ஸதீன் நகர பம்புகை நிலையம்
விநியோகம் : அதகஹபு சந்தி, கல்பமுண, கல்பமுண 11, இ.மி.ச. ஹித்தெட்டிய நுகர்வோர் சேவை நிலையம், நில்வலா கேட், பாலட்டுவ, உனெல்ல, வெலேகொட பழைய

2022-02-10 08:30-17:00
விநியோகம் : திக்கஸ்கொட, கொடகம - பெல தவான, கொடகம கித்ஸிரி பெதெஸ, கனத்தெகொடை, பிரகதீ மாவத்தை, வனிகஸேக்கரவத்தை, வெளஹமன்துவ

2022-02-18 08:30-17:00
விநியோகம் : அத்துடாவ, வட்டகெதர

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : கம்புறுபிட்டிய

2022-02-09 08:30-17:00
மொத்த : தொழினுட்ப பீடம், லக்கீ லங்கா, ட்ரைஸ்டார் ஆடை
விநியோகம் : பிபுலவெல புதிய, கம்உதாவ பிபுலவல, கம்உதாவ பம்புகை நிலையம், கோதாவ, கெத்தமுல்ல, மிரிஸ்வத்தை, பரகஹங்க

2022-02-10 08:30-17:00
மொத்த : பிரதேச செயலகம் - திஹகோட
விநியோகம் : அலவத்துகொட, கொடமக நீர் சுத்திகரிப்பு, கபுதுவ புதிய, கோமன்கொட, மிதெல்லவல, பெத்தெரே, பிங்வெல்ல, பொல்அத்துகொடை, திஹகொட, திஹகொட புதிய

2022-02-19 08:30-11:00
மொத்த : மாபலான பல்கலைக்கழகம் 11

2022-02-19 08:30-17:00
மொத்த : மாபலான பல்கலைக்கழகம் 11, றுஹுணு தொழிற்சாலை
மொத்த மற்றும் விநியோகம் : மாபலான பல்கலைக்கழகம்
விநியோகம் : மாபலான பாடசாலை, ஓட்டோ லங்கா டயர் நிறுவனம், பட்டுவிட்ட, பட்டுவிட்ட ஜனாவாஸ, பட்டுவிட்ட உடுதமன, ஜனசக்திகம, கஹகல, மாபலான புதிய, மாஸ்முல்ல, பெதும்கம, ரட்டலங்காவத்தை, உல்லமஹஹேன, ஊரபொல, ஊரபொல அக்கருகொட

2022-02-19 11:00-13:00
விநியோகம் : உல்லமஹஹேன

2022-02-19 14:00-16:30
மொத்த : அபிமங்ஸல கதார

2022-02-24 09:00-17:00
மொத்த : மாகன்துர தேயிலைத் தொழற்சாலை, மாகன்துர ஸமகி உற்பத்தி
விநியோகம் : மாகன்துர பெரகம, ரணகல, ரணகலகன்த

2022-02-26 08:30-17:00
மொத்த : மஹல்பே தேயிலைத் தொழிற்சாலை, எண்ணெய் ஆலை
மொத்த மற்றும் விநியோகம் : பமுணுகம போகஹஹேன
விநியோகம் : பமுனுகம, ஈரியதொட்ட புதிய, ஹொரபாவிட்ட, ஹொரபாவிட்ட புதிய, ஈரியதொட்ட, நாரங்தெனிய, ரன்ஸிரி மாவத்தை, திப்பலஹேன

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : மாத்தறை

2022-02-25 08:30-17:00
விநியோகம் : பிரீ லன்ட்

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : முலட்டியானை

2022-02-01 09:00-17:00
விநியோகம் : அலகொலதெனிய, கம்மெத்தகம, ஹன்துகல, கெட்டபலகன்த, புவக்கஹஹேன

2022-02-03 08:00-17:00
மொத்த : குடாபான தேயிலைத் தொழிற்சாலை
விநியோகம் : கொம்பத்தல, கில்லதெனிய, குடாபான

## மின் பொறியலாளர் பிரதேசம் : தங்காலை

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : அங்குனகொலபெலஸ்சை

2022-02-03 08:30-17:00
மொத்த : கட்டகடுவ நீர் கம்பம், கட்டகடுவ நீர் விநியோகம், கட்டகடுவ நீர் பம்புகை நிலையம், கொன்கோஸென்ட்
மொத்த மற்றும் விநியோகம் : அங்குணகொலபெலெஸ்ஸ சிறைச்சாலை, கஹதுவ கூட்டுறவு
விநியோகம் : அன்துபெலேன, எஸெட்லய்ன், பகின்க்ஹெம் பெதெஸ, சேதியகிரிய, டேவிட் பீரிஸ், கெமுனு மாவத்தை, கோட்டய்ம்பர கிராமம், கதிரகொடை, கஹதுவ நீர் பம்புகை நிலையம், கட்டகடுவ ஜன உதான, கட்டகடுவ புதிய, லேனமுல்ல, நிதஹஸ்கம, ஒருவெல்ல - ரேகவ, ஒஸ்கா கிராமம், பேவுவெள, பேவுவெள 02, பொகுணுகொட, பொரோன்துகம, ரத்ன ஆஸ்பத்திரி, ருவனிகம, வாடியகொட, வாடியகொட புதிய, வெல்லோடய, விகமுவ புதிய

2022-02-07 08:30-17:00
விநியோகம் : அமரதுங்கம, பெலிஅத்தகம, பிங்கம, கய்லவெல்போட்டாவ, கொஹொம்பகஸ் வெள, மெதஆர, மெதஆர புதிய, மெட்டிகத்வல, விஜேஸிங்ஹகம

2022-02-08 08:30-17:00
மொத்த : தில்மி அரிசி ஆலை, லியன்கஸ்தொட்டை நீர் விநியோகம்
விநியோகம் : பரவகும்புக நகரம் , லியன்கஸ்தொட்டை நீர் விநியோகம்

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : அங்குனகொலபெலஸ்சை

2022-02-18 08:30-16:30
விநியோகம் : எத்வட்டுவ புதிய, கஜமன்கம, மஹவெல

2022-02-18 08:30-17:00
மொத்த : கலமெட்டிய மீன் பிடிக்கிராமம், ஸெனொக், ஸினஹவ ஹோட்டல்
விநியோகம் : குருபொக்குண, குருபொக்குண புதிய, ஹாமுகன்த, கஹதமோதர - புதிய, கஹதமோதர, தில்லவதவன, வெஹெரநவய

2022-02-21 08:30-17:00
விநியோகம் : பொலட்டியன, தெனிய, எத்வட்டுவ புதிய, கொரகஹவெல

2022-02-26 08:30-17:00
மொத்த : எரமினியாய, எம்.எச்.ரீ.
மொத்த மற்றும் விநியோகம் : அங்குணகொலபெலெஸ்ஸ ஆஸ்பத்திரி, இளைஞர் சேவை
விநியோகம் : அங்குணகொலபெலெஸ்ஸ இ.மி.ச., தொடம் வகாவ, எரமினியாய நீர் பம்புகை நிலையம், கனுகெட்டிய, மஹவெள, மூலன, பட்டமலுவ, ரஸிகா காமன்ட், வெலகத்வல, யகாகல கல் ஆலை

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : பெலியத்தை

2022-02-03 08:30-17:00
விநியோகம் : பிரதேச செயலகம், கம்புஸ்ஸாவல, மஹஹீல்ல நீர் விநியோக சபை, மஹஹீல்ல, வட்டதெனிய

2022-02-09 08:30-17:00
விநியோகம் : கூரகொலயாய, பல்லத்தர, ஒகேவெல ஸமகி மாவத்தை

2022-02-11 08:30-17:00
விநியோகம் : அம்பகஸ்தெனிய நீர் விநியோக சபை, அம்பேகாவ, எல்தெனிய, நாயக்கவத்தை, தென்னபல்ல புதிய, தென்னபல்ல, உபாஸகொட

2022-02-15 08:30-17:00
மொத்த : ட்ரேன்ட் ஸெடர்ஸ்
மொத்த மற்றும் விநியோகம் : பெல்அத்த புகையிரத நிலையம்
விநியோகம் : குருடர் கல்லூரி, கைத்தொழில் ஜனபதய, ஒவ்லான நீர் விநியோக சபை, பலபொத, புவக்தண்டாவ, றுஹுணு விஜயபா பாடசாலை, ஸிட்டினமலுவ, விஸ்கம்புர 2, விரித்தமுல்ல

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : பெலியத்தை

2022-02-17 08:30-17:00
மொத்த : ஸஜீவனீ கல் ஆலை
விநியோகம் : மாலிகதென்ன

2022-02-18 08:30-17:00
விநியோகம் : பட்டியவெல, வலவெல நீர் விநியோக சபை

2022-02-22 08:30-17:00
மொத்த : ஹத்போதிய நீர் விநியோக சபை
மொத்த மற்றும் விநியோகம் : ஹத்போதிய
விநியோகம் : அரன்வெல, அரன்வெல ஏல விற்பனை காணி, ஹத்போதிய ஆஸ்பத்திரி, மய்க்ரோ எக்ரோ, ஸியம்பலாகொட

2022-02-26 08:30-17:00
மொத்த : ஸிங்கர்வத்தை கல் ஆலை
விநியோகம் : வாடிய, யக்வெள

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : மித்தெனிய

2022-02-21 08:30-17:00
விநியோகம் : நிகதவுல

2022-02-25 08:30-17:00
விநியோகம் : அம்பகொலவெள, அத்தனயால, அத்தனயால புதிய, திம்புலகொட, கஜநாயக்ககம, கல்வங்குவ, கோனதெனிய பாடசாலை, கோனதெனிய நீர் கருத்திட்டம், கபுகம்பொத, கெமேகல, கொட்டுவெல்கெலே நீர் பம்புகை நிலையம், மொரயாய, ஸியம்பல ஹெத்தேவ, வேகன்னதவெல

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : தங்காலை

2022-02-02 08:30-17:00
விநியோகம் : கடொல்வெள, பட்டியபொல, ரொட்டே

2022-02-05 08:30-17:00
விநியோகம் : பொரலுவ, நெட்டொல்பிட்டிய

2022-02-07 08:30-16:30
விநியோகம் : எத்கல்முல்ல, ஸுதர்ஷன கிராமம், விதாரன்தெனிய, யக்வெள

2022-02-10 08:30-16:00
மொத்த : விதாரன்தெனிய நீர் பம்புகை நிலையம்
விநியோகம் : தெமட்டவலவத்தை, தம்புல்லகொடை, தலகம்பொல்தவான

2022-02-12 08:30-17:00
மொத்த : காகில்ஸ் புட் ஸிட்டி, மீன்பிடித் துறைமுகம் 1, தங்கல்லை ஆஸ்பத்திரி, கீல்ஸ் ஸுப்பர் தங்கல்லை, கீல்ஸ் ஸுப்பர்
விநியோகம் : சிறுவர் பூங்கா, டயலொக் கம்பம், மீன்பிடித் துறைமுகம் 2, தங்கல்லை கடற்படை முகாம், மக்கள் வங்கி, ஸாகர பல்கலைக்கழகம், ஸம்பத் வங்கி, தங்கல்லை பஸ் தரிப்பு நிலையம், தங்கல்லை பொலிஸ் நிலையம், தங்கல்லை நகரம், தங்கல்லை ரெலிகொம், வாஸுல ஐஸ்

2022-02-13 08:30-17:00
மொத்த : ஸிலோன் ஸீ ஹோட்டல், கோல்டன் பர்ல் பீச் ஹோட்டல்
மொத்த மற்றும் விநியோகம் : இ.பொ.ச. பஸ் டிப்போ
விநியோகம் : தன்கெட்டிய, ஹேனகடுவ தொழினுட்பக் கல்லூரி, ஹேனகடுவ தொழினுட்பக் கல்லூரி, கனத்த சந்தி, மெதகெட்டிய, மெடில்ல, பொலன்மாருவ

2022-02-14 08:30-17:00
மொத்த : என்.பீ.ஆர். கல் ஆலை
விநியோகம் : ஹதபான்கொடெல்ல, பலபொத யாயவத்தை

2022-02-15 08:30-17:00
மொத்த : வெளிநாட்டுச் சேவைகள் நியுக்தி அலுவலகம், உயர்கல்வி அமைச்சு, லெகுன்பெரடைஸ், கொடிகமுவ இளைஞர் சேவை
மொத்த மற்றும் விநியோகம் : மாரகொல்லிய நீர் பம்புகை நிலையம்
விநியோகம் : கொடிகமுவ யாயவத்தை, கபுஹேன்கல, மாரகொல்லிய

2022-02-23 08:30-17:00
மொத்த மற்றும் விநியோகம் : அக்குர ஐஸ்
விநியோகம் : கொகரட்டுவ, கொஸ்வத்தை, மாவெல்ல, ஸீனிமோதர, ஸுவிஸ்வத்தை

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : வலஸ்முல்லை

2022-02-01 08:30-17:00
விநியோகம் : அம்பகஹஹேன, பின்தென்ன, பின்தென்ன சந்தி, கரமெட்டிய, கோன்கஸ்தென்ன, கோன்கரஹேன, ஓபடகஹதெனிய டயலொக் கம்பம், ஓபடகஹதெனிய சந்தி, பிகலேல்ல, வல்கம்முல்ல, வதுகன்த, வியஸிரிபுர புதிய

2022-02-10 08:30-17:00
விநியோகம் : மெதிகம்கொட

2022-02-14 08:30-16:30
விநியோகம் : தோதுவல, ஹெவன்தெனிய, கெகிரிம்பட, பிஸ்ஸுபெத்த 2, ரலுவ புதிய, வீதிகன்த

2022-02-17 08:30-17:00
விநியோகம் : கல்கணுகொரட்டுவ, கொரககஹவத்தை, கெகுனதெனிய, கன்தெபெத்த - ஹதரே புட்டுவ, மஹமடித்த, ஓலுஆர, பல்லெகன்த, எஸ்.கே.அரிசி ஆலை, உடதெனிய

2022-02-19 08:30-17:00
விநியோகம் : ஹக்கிதகன்த வடக்கு, கெரேதெனிய, ரம்மல, ஸபுதன்திரீகன்த

2022-02-24 08:30-17:00
விநியோகம் : இத்ததெமலிய, இத்ததெமலிய புதிய, ஸுனீதகம, உடுகிரிவில

2022-02-25 08:30-17:00
விநியோகம் : போதிமலுவ, கின்விகுனெ டயலொக், மெதமூலன வலவ்வ, மெதமூலன சந்தி, ரலுவ பழைய

பிரதிப் பொது முகாமையாளர் (தென் மாகாணம் 02), இலங்கை மின்சார சபை, இல. 61/1ஏ, கடற்கரை ஒழுங்கை, தங்காலை.

*வளமான வாழ்விற்கு மின்சாரம்*

*நீங்கள் இப்போது உங்கள் மின்சார கட்டணங்களை www.ceb.lk மூலம் செலுத்தலாம்*

## அறிவித்தல்

கொழும்பு -05 ஹவ்லொக் வீதி 185/4ஆம் இலக்கத்தில் அதனது பதிவு அலுவலகத்தையுடைய டெக் வன் க்லோபல் (பிரைவட்) லிமிட்டட் ஆனது (கம்பனி இல. பிவி 9020 இரண்டாயிரத்து இருபத்தொன்று (2021) ஜுலை 10ஆம் திகதியிலிருந்து செயல் வலுப் பெறும் வகையில் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 8ஆம் பிரிவிற் கமைவாக அதனது பெயரை எனடொக் (பிரைவட்) லிமிட்டட் என மாற்றியுள்ளதென மேற் கூறப்பட்டுள்ள சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது.

**பீடிஓ செக்கரட்டரிஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**கம்பனி செயலாளர்கள்**

## அறிவித்தல்

கொழும்பு -2 யூனியன் பிளேஸ் 476ஆம் இலக்கத்தில் அதனது பதிவு அலுவலகத்தையுடைய இன்டர்பார்ம் (பிரைவட்) லிமிட்டட் ஆனது (கம்பனி இல. பிவி 6140) ஆனது 2021 ஒக்ரோபர் 4ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 8ஆம் பிரிவிற்கமைவாக அதனது பெயரை கம்மா இன்டெர்பார்ம் (பிரைவட்) லிமிட்டட் என மாற்றியுள்ளதென மேற் கூறப்பட்டுள்ள சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது.

**சபையின் கட்டளைப் பிரகாரம்**
**பீடிஓ கோர்ப்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டெட்**
**கம்பனி செயலாளர்கள்**
**இல. 65/2, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கர்ாடினர் மாவத்தை,**
**கொழும்பு -02**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**(எரிசக்தி அமைச்சு)**
**இபெகூ தலைமை அலுவலகத்தின் கூரைக்கு மேல் Aluminum Composite Cladding வேலைகளை வழங்குதல் மற்றும் நிறுவுதல்**

**B/10/2022**

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டதும் மற்றும் (அண்ணளவாக) 3.0 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தைக் கொண்ட இபெகூ தலைமை அலுவலகத்தின் கூரைக்கு மேல் Aluminum Composite Cladding வேலைகளை வழங்குதல் மற்றும் நிறுவுதல் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் (DPC) தலைவர் அழைக்கின்றார்.
2. இந்த வேலையின் நிர்மாணக்காலம் ஒரு (01) மாதமாகும்.
3. விலைமனுக்கோரல் தேசிய விலைமனுக்கோரல் நடைமுறை பிரகாரம் நடாத்தப்படும்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் உள்ளடக்கப்படாதவராகவும் ICTAD நிறுவனத்தில் C-8 அல்லது C-07 பதிவை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
5. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமைகளில் உள்ளடங்குபவை: இந்தக் கேள்விக்காக விண்ணப்பிப்பதற்கு விலைமனுதாரர்கள் C8 அல்லது C7 CIDA பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. கொவிட்-19 தொற்று பரவல் காரணமாக விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் http://cepetco.gov.lk/public-tenders மற்றும் விலைமனுதாரர் மீளளிக்கப்படாத 2000.00 ரூபா கட்டணத்தை (ரூபா 1,851.85 + 8%) மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டை மூலப் பிரதியை விலைமனுவுடன் இணைத்து அனுப்பவும்.
7. விலைமனுக்களை 2022-02-21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை), பெறுகை மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகள், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-09 எனும் முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
8. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதி நாள் முதல் அறுபத்து மூன்று (63) நாட்கள் வரையில் விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
9. அனைத்து விலைமனுக்களுடனும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் பெற்றுக்கொண்ட 30,000.00 ரூபா பெறுமதியான விலைமனுப் பிணைமுறி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணை முறியானது 2022-05-23ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகள்,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல. 609,**
**டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-09.**
**தொ.பே. 011-5455331, தொலைநகல்: 011-5455424**

# சுற்றுலா மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி விலைமனுக்கோரல்**

## இரத்மலானை சர்வதேச விமானநிலையத்தின், முன்னிணைத்து அமைக்கப்பட்ட கட்டிடத்தினை வடிவமைத்து கட்டமைத்தல்

**விலைக்கேள்வி இலக்கம் 097/T/2021**

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி சார்பாக அதன் தவிசாளரால் இரத்மலானை சர்வதேச விமானநிலையத்தின், முன்னிணைத்து அமைக்கப்பட்ட கட்டிடத்தினை வடிவமைத்து கட்டமைக்கும் பொருட்டு முத்திரைக்குறியிடப்பட்ட விலைக்கேள்விகள் தகைமைகளைப் பெற்ற தகுதியுடைய விலைக்கூறுநர்களிடமிருந்து கீழே குறிப்பிட்டுள்ளவாறு இத்துடன் அழைக்கப்படுகின்றன. மதிப்பிடப்பட்ட தொகை வரி தவிர்ந்த ரூபா 46 மில்லியன்களாகும்.

இவ் வேலைப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டுமான பணிகளாக, முன்னிணைத்து அமைக்கப்பட்ட கட்டிடத்தின் கட்டமைப்பினை வடிவமைத்தல், வழங்கல் மற்றும் நிமிர்த்தம் உள்ளிட்ட மலசலகூடங்கள், முன் தாழ்வாரம் மற்றும் தற்போதுள்ள கட்டிடத்துடன் இணைக்கப்பட்டுள்ள கொரிடோ அமைத்தல் (அண்ணளவாக 232 சதுர மீட்டர் கொண்ட நிலப்பரப்பு) மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அக்குறித்த அனைத்து கட்டுமானப் பணிகளுக்கும் தேவையான அனைத்து கட்டிடப் பொருட்கள் மற்றும் தொழிற்படை பெற்று, விவரக்குறிப்பீட்டில் உள்ளவாறும், விலைப்பட்டியல் மற்றும் வரைப்படங்களுக்கமைவாகவும் மற்றும் உரிய பொறியியல் திட்டமிடலுக்கமைய மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

ஒப்பந்தத்தின் கட்டுமான வேலைகளுக்குரிய கால எல்லை - 60 நாட்களாகும்.

**கருத்திட்டங்கள் அமைவிடம்** : இரத்மலானை சர்வதேச விமானநிலைய வளாகம்

தேசிய போட்டியிடல் விலைக்கோரல் நடைமுறைகளுக்கமைவாகவே, விலைக்கேள்விகள் இடம்பெறும்.

இவ் ஒப்பந்தம் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விலைக்கேள்வியாளர்களுக்கே வழங்கப்படுவதுடன், இதற்கு முன்னர் நிராகரிக்கப்பட்ட பெயர் பட்டியலில் பெயர் உள்ளடங்கப்படாத ஒருவர் / தாபனமாக அமையப் பெறுதல் வேண்டும். மேலும், இந்த விலைக்கேள்வியாளர்கள் கட்டிட நிர்மாணிப்பு கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA), (இதற்கு முன்னர், (ICTAD) பேரில் அழைக்கப்பட்ட), C5 தரத்தில் அல்லது தரங்களில் பதிவுசெய்யப்பட்ட குறித்த வகையிலான கட்டுமானப் பணிகள் தொடர்பான அனுபவமுள்ள ஒப்பந்ததாரராக இருத்தல் வேண்டும்.

இது தொடர்பாக ஆர்வம் காட்டும் விலைக்கேள்வியாளர்களுக்கு, 2022/02/01 முதல் 2022/02/22 ஆந் திகதி வரையில் ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப 09.00 மணிக்கும் பி.ப 03.00 மணிக்கும் இடையேயான காலப்பகுதிக்குள்இ கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின், வழங்கல் தொடர் தலைவருக்கு திருப்பி தரப்படாத ரூபா 11,000/- (பதினொராயிரம் ரூபா) மாத்திரம் காசாகச் செலுத்தி மற்றும் எழுத்துபூர்வமான விண்ணப்படிவமொன்றினை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள அனைத்தும் பூர்த்திசெய்யப்பட்ட விலைக்கேள்வி இணைப்பு கோவையொன்றினைக் கொள்வனவு செய்துகொள்ள முடியும். அக்குறித்த விலைக்கேள்வி ஆவணங்களை மேற்குறிப்பிட்ட விலாசத்தில் கட்டணங்களின்றி பார்வையிடுவதற்குத் தேவையான வசதிகள் வழங்கப்படும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக சகல விலைக்கேள்வியாளர்களும், குறித்த ஒரு விலைக்கேள்விக்காக ரூபா ஐந்து இலட்சம் மாத்திரம் (ரூபா. 500,000) பணமாக அல்லது விலைக்கேள்வி தகவல் அட்டவணையில் 05 ஆம் பகுதியில் 16.2 பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தாபனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கேள்வியின் அடிப்படையிலான விலைக்கேள்வி பிணைமுறியுடன் குறித்த விலைக்கேள்வியினை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2022/02/10 ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு இரத்மலானையில் அமைந்துள்ள இரத்மலானை விமானநிலையத்தின் பிரதான விமானநிலைய முகாமைத்துவ அலுவலகத்தின் கருத்தரங்கு அறையில் நடைப்பெறும் ஆரம்ப விலைக்குறிப்பீட்டு கூட்டத்தில் பங்கேற்குமாறு அனைத்து விலைக்கேள்வியாளர்களுக்கு அல்லது அவர்களின் அதிகாரம் பூர்வமான பிரதிநிதிகளுக்கு இத்துடன் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

சரியான முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கேள்விகள், 2022/02/23 ஆந் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர், தவிசாளர், இலக்கம் 1, பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க என்ற விலாசத்திற்கு நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் கிடைக்கக்கூடியவாறு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். அத்திகதியில் குறித்த நேரத்தில் விலைககேள்விகள் பொறுப்பேற்கும் நேரம் முடிவடைந்ததும், விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பூர்வமான பிரதிநிதிகள் முந்நிலையில் அக்குறித்த விலைக்கேள்விகள் திறக்கப்படும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், சிவில் பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) பிரிவின், கிளைத் தலைவர் மூலம் 011-2263502/07 - என்ற தொலைபேசி இலக்கங்களை அழைப்பதன் ஊடாக அல்லது தொலைநகல் இலக்கம் 011-2251356 மூலம் அறிந்து கொள்ள முடியும்.

**தவிசாளர்**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க.**

# இலங்கை வங்கி

## ஏலவிலை கோரல்

இலங்கை முழுவதும் உள்ள இலங்கை வங்கிக் கிளைகளுக்கு 188 Pylon விளம்பரப் பலகைகளைத் தயாரித்தல், வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் பராமரித்தல்

**கேள்வி இல : P/PROC/2020/80**

1. **இலங்கை வங்கிக் கிளைகளுக்கு மேலே குறிப்பிடப்பட்ட ஏலவிலைகூறலைப் பகுதி வாரியாக வழங்கத் தகுதி உள்ள உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் இருந்து ஏலவிலைகள் கோரப்படுகின்றன.**

2. **தகைமைக்கான நிபந்தனைகள்**

   2.1 ஏலவிலை கூறுபவர் இலங்கையில் செல்லுபடியாகும் வர்த்தகப் பதிவினைக் கொண்டிருக்க வேண்டும்.

   2.2 ஏலவிலை கூறுபவர் இலங்கை அரசாங்கத்தினால் அல்லது இலங்கை வங்கியினால் அல்லது ஏதேனும் ஒரு அரசாங்க நிறுவனத்தினால் நிராகரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியலில் காணப்படாதவராக இருத்தல் வேண்டும்.

3. **தகுதி அடிப்படைகள்**
   ஏலவிலை கூறுபவர் அவர்களது திறனைப் பொறுத்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்கு ஏலவிலை கூற முடியும். பல பகுதிகளுக்கு ஏலவிலை கூறும்போது தகுதி அடிப்படைகள் கீழ்க் கண்டவாறு வேறுபடும்.

| தகுதி அடிப்படை | ஒரு பகுகிக்கான தகுதி அடிப்படை | ஏதேனும் இரண்டு பகுதிகளுக்கான தகுதி அடிப்படை | ஏதேனும் மூன்று பகுதிகளுக்கான தகுதி அடிப்படை | அனைத்துப் பகுதிகளுக்குமான தகுதி அடிப்படை |
|---|---|---|---|---|
| இதனை ஒத்த கருத்திட்டங்களை கடந்த மூன்று வருட காலத்தினுள் தொடர்ச்சியாகப் பூர்த்தி செய்த அனுபவம் | 2019, 2018, 2017 | | | |
| கடந்த மூன்று வருட காலத்தினுள் சராசரி வருடாந்தப் பணப்புரள்வின் பெறுமதி 2019, 2018, 2017 அல்லது 2019/20, 2018/19, 2017/18 | ரூபா.50 மில்லியன் | ரூபா.65 மில்லியன் | ரூபா.80 மில்லியன் | ரூபா.100 மில்லியன் |
| ஏனைய ஒப்பந்த வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதிகள், இந்த ஒப்பந்தத்தின் பொருட்டு வழங்கப்படக் கூடிய ஏதேனும் முற்பணங்கள் என்பன தவிர்த்து கொண்டிருக்க வேண்டிய திரவநிலைச் சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் வசதிகளின் பெறுமதி | ரூபா.10 மில்லியன் | ரூபா.12 மில்லியன் | ரூபா.15 மில்லியன் | ரூபா.18 மில்லியன் |

4. **பகுதிகளின் விபரம்.**

| | மாகாணம் | கோபுரங்களின் எண்ணிக்கை S | M | L | மொத்தத் தேவை |
|---|---|---|---|---|---|
| பகுதி A | மத்திய மாகாணம் | 2 | 5 | 5 | 12 |
| | வட மத்திய மாகாணம் | - | 1 | 26 | 27 |
| | மேல் மாகாணம் வடக்கு | 2 | 7 | 6 | 15 |
| பகுதி B | வட மாகாணம் | 1 | 1 | 24 | 26 |
| | மேல் மாகாணம் தெற்கு | - | 5 | 9 | 14 |
| பகுதி C | கிழக்கு மாகாணம் | 3 | 9 | 1 | 13 |
| | தென் மாகாணம் | 12 | 6 | 6 | 24 |
| பகுதி D | வடமேல் மாகாணம் | - | 4 | 12 | 16 |
| | சபரகமுவ மாகாணம் | 2 | 9 | 9 | 20 |
| | ஊவா மாகாணம் | 7 | 2 | 12 | 21 |
| | | | | | **188** |

5. ஏலவிலை கூறுபவர் பிற்சேர்க்கை 1இல் குறிப்பிடப்பட்டுள்ள "ஏலவிலை கூறுபவருக்கான அறிவுறுத்தல்"களை முழுமையாகப் பின்பற்ற வேண்டும்

**முக்கியம்**

1. விலைகூறல்களை தெரிவிக்க ஆர்வமுடையோர் விலை கூறல் ஆவணத்தொகுதி மற்றும் தொடர்புடைய விவரக் குறிப்புகளை திருப்பிச் செலுத்தாக் கட்டணம் ரூபா. 21,600/- (ரூ. 20,00.00 + 1,600.00 VAT) மாத்திரம் செலுத்தி கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", 14ஆம் தளம், சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் எழுத்து மூலமான விண்ணபத்தை சமர்ப்பிப்பதன் பேரில் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை பணமாகும்.

2. பூரணப்படுத்தப்பட்ட ஏலவிலை கூறலானது ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியாக இலங்கை வங்கி தவிர்ந்த இலங்கையில் செயற்படும் வேறொரு உரிமம் பெற்ற வணிக வங்கியிடமிருந்து பெற்ற ரூபா. 325,000/- பெறுமதியானதும் 2022.02.23ஆம் திகதி முதல் 2022.06.21ஆம் திகதி வரை செல்லுபடியானதுமான (மாற்றமுடியாத, நிபந்தனையற்ற, தேவையின்போதான) விலைகூறல் பிணை முறியுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். விலைகூறல் பிணைமுறிக்குப் பதிலாக பணவைப்பு ரசீது / வங்கி வரைவு ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

   குறிப்பிட்ட பகுதி இலக்கம் / இலக்கங்கள் பிணைமுறியில் குறிப்பிடப்பட வேண்டும். பிணை முறியுடன் சேர்த்து அனுப்பப்படாத ஏலவிலை கூறல்கள் நிராகரிக்கப்படும்.

3. ஏலவிலை கூறுபவர் குறிப்பிட்ட ஏலவிலையின் பொருட்டு 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் கம்பனிப் பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்டிருக்க வேண்டும் மற்றும் PCA3 படிவமானது குறிப்பிடப்பட்ட சட்டத்தின் அல்லது அதன் திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய இணைத்து அனுப்புதல் வேண்டும். கட்டண ஆதாரமானது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

| | |
|---|---|
| ஏலவிலை கூறல் ஆவணங்களை விநியோகிக்கும் கடைசித் திகதியும் நேரமும் | 2022.02.22ஆம் திகதி 1400 மணி வரை |
| ஏலவிலை கூறல் ஆவணங்களை விநியோகிக்கும் நேரம் | 0900 மணி முதல் 1200 மணி வரை |
| ஏலவிலை கூறல் முடிவடையும் திகதியும் நேரமும் | 2022.02.23 ஆம் திகதி 1000 மணி |
| ஏலவிலை கூறல் திறக்கும் காலம் | ஏலவிலை கூறல் முடிவடைந்த உடன் |
| முன்கூட்டிய ஏலவிலைகூறல் கூட்டம் | 2022.02.11 1100 மணிக்கு ஏலவிலைகூறல் கூட்ட முறைமையானது எதிர்வரும் தினங்களில் அறிவிக்கப்படும் |

இலங்கை வங்கி, எவ்விதக் காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லாக் கேள்விப் பத்திரங்களையும் நிராகரிக்கும் அல்லது கேள்விப்பத்திரமொன்றின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்ளும் உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி,
"இலங்கை வங்கிச் சதுக்கம்",
இல.01, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு - 01.
தொலைபேசி இல. 2544310, 2434786

Repeat Your ad For Better Offers

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# பெறுகை அறிவித்தல்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

### தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்

பின்வரும் வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.
CBO நீர் வழங்கல் திட்டத்திற்கு PVC/PE/GI/DI குழாய்கள், பொருத்தல்களை வழங்குதல் மற்றும் நீர் பம்பிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதல்
பின்வருமாறு விபரிக்கப்பட்ட PVC/GI குழாய்களை வழங்குவதற்காக உற்பத்தியாளர்கள் / வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பெறுகைக் குழு அழைக்கின்றது.

| ஒப்பந்தத்தின் பெயர் | வாகனங்களின் எண்ணிக்கை | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலைமனுப்பிணை முறி (ரூபா) (வங்கி உத்தரவாதம்) | விலை மனுக்கள் வழங்கப் படும் இடம் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|---|
| 1. PVC குழாய்கள் மற்றும் பொருத்தல்களை வழங்குதல் ஒப்பந்த இல. DNCWS/PRO/2022/PVC/01 | PVC குழாய்கள், பொருத்தல்களின் உற்பத்தியாளர்கள் | 3,500.00 | 90,000.00 | பணிப்பாளர் (பெறுகைகள்), தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், இல. 1114, பன்னிப்பிட்டிய வீதி, தலவத்துகொட |
| 2. GI/DI குழாய்கள் மற்றும் பொருத்தல்களை வழங்குதல் ஒப்பந்த இல. DNCWS/PRO/2022/GI/01 | GI/DI குழாய்கள், பொருத்தல்களின் வழங்குநர்கள் | 5,000.00 | 150,000.00 | தொ.பே. 0112774927 |
| 3. பம்பிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் ஒப்பந்த இல. DNCWS/PRO/2022/PUMP/01 | பம்பிகள் வழங்குநர்கள் | 5,000.00 | 175,000.00 | விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் 2022 பெப்ரவரி 22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு |

**மேற்படி விடயங்களுக்கான பொது நிபந்தனைகள் மற்றும் அறிவுறைகள்**

**அறிவுறைகள்**

1. விண்ணப்பதாரரின் கடிதத் தலைப்பில் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் விலைமனுக்கள் வழங்கப்படும் மற்றும் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திற்கான மீளளிக்கப்படாத வைப்புக்கான வங்கி வைப்புச் பற்றுச்சீட்டு (பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், கணக்கிலக்கம்: 0007040440 இலங்கை வங்கி) (நிறுவனத்தின் பெயரை வைப்புப் பற்றுச்சீட்டு அல்லது கொடுப்பனவு பற்றுச்சீட்டில் குறிப்பிடுதல் வேண்டும்)
2. விலைமனுக்களை 2022 பெப்ரவரி 21ஆம் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தினுள் பெற்றுக்கொள்ளலாம். தொற்று நிலைமை காரணத்தினால் வைப்புப் பற்றுச்சீட்டு மற்றும் வேண்டுகோள் கடிதத்தின் நகல் பிரதியை மின்னஞ்சல் (dncwsfortender@gmail.com) மூலம் அனுப்பவும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை சாதாரண வேலை நாட்களில விலைமனுக்கள் வழங்கும் இடத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2022 பெப்ரவரி 22ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ஒன்றில் திணைக்களத்தின் 2ஆம் தளத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கூரியர் சேவை மூலம் அனுப்பலாம்.
5. சகல விலைமனுக்களும் இதே முகவரியில் 2022 பெப்ரவரி 22ஆம் திகதி மு.ப. 10.15 மணிக்கு வருகை தந்துள்ள விலைமனுதாரர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். பிந்திய விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.
6. விலைமனுப்பிணை முறி தலவத்துகொட, இல. 1114, பன்னிப்பிட்டிய வீதி, தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் 2022 ஜுன் 22ஆம் திகதி வரையில் (விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் ஆகக் குறைந்தது 120 நாட்களுக்கு) செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திற்கு,**
**இல. 1114, பன்னிப்பிட்டிய வீதி, தலவத்துகொட.**

2022-01-31.

## மீட்கப்படாத அடகு தங்க நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்

வ/ப வயம்ப கூட்டுறவு கிராமிய வங்கிச் சங்கத்தின் முகவரான வ/ப உடுபத்தாவ பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குரித்தான, உடுபத்தாவ, தும்மலசூரிய, வெலிபென்னகஹமுல்ல, எதுன்கஹகொட்டுவ, ஹொரதபொல மற்றும் யகம்வெல போன்ற கிராமிய வங்கிக் கிளைகளில்

2021-08-31ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத அடகுத் தங்க நகைகள் 2022-02-19 மற்றும் 20ஆம் திகதிகளில் மு.ப. 9.00 மணிக்கு வ/ப உடுபத்தாவ பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**பொது முகாமையாளர்.**

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 05, திம்பிரிகஸ்யாய வீதி, இல. 270/6 இல் வசிக்கும் **மஹமென்திகே நிமல்கா ருக்லன்தி மெண்டிஸ்** (தே.அ.அ. இலக்கம் 755211843V) என்ற நபருக்கு கொழும்பு பகிரங்க நொத்தாரிசு **மஹேஷா அலஹகோன்** மூலம் எழுதி உறுதி செய்யப்பட்ட 2020.01.28ஆம் திகதிய விசேட அற்றோணித் தத்துவம் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசில் நுகேகொடை, ரைமொன்ட் வீதி, இல. 31 என்ற முகவரியைச் சேர்ந்தவரும் நியூசிலாந்து, மனுகவு 2010, பகுரங்கா ஹைட்ஸ், லா ட்ரொப் ஸ்ட்ரீட், இல. 28 என்ற முகவரியில் தற்போது வசிப்பவருமான **அவுஷான் ருசின்திர சிறினந்த** (கடவுச்சீட்டு இல. LM394262) என்ற என்னால் வழங்கப்பட்ட அனைத்து ஆற்றல் மற்றும் அதிகாரங்களும் இத்தால் ரத்துச் செய்யப்பட்டு அகற்றப்படுகிறது.

தற்பேதைய பத்திரத்தை நிறைவேற்றிய பின் மேற்குறிப்பிடப்பட்ட **ஹமென்திகே நிமல்கா ருக்லன்தி மெண்டிஸ்** மேற்குறிப்பிடப்பட்ட 2020.01.28ஆம் திகதிய விசேட அற்றோணித் தத்துவத்தின் கீழ் அல்லது தொடர்தல் மூலம் மேற்கொள்ளப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட அனைத்து அல்லது எந்த ஒரு செயற்பாடும் எனது பெயரில் அல்லது எனது சார்பில் மேற்கொள்ளப்பட்ட எனது செயலாக கருதப்படக் கூடாது என்று இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் நான் மேலும் அறியத்தருகிறேன்.

**அவுஷான் ருசின்திர சிறினந்த**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.




## விசேட அதிரடிப்படை
### (இலங்கை பொலிஸ்)

## விலை மனுக்கோரல் (IFB)
### (கட்டிட நிர்மாணம்)

1. விசேட அதிரடிப்படை, இலக்கம் 223, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07, தளபதியினால், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து மனுக்கள் கோரப்படுகின்றது.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஒப்பந்த காலம் காலம் (நாட்கள்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ.மில்லியன்) | மனு காப்புறுதிப் பிணைத் தொகை (ரூ) | CIDA தரம் | ஒப்பந்த கட்டணம் (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| 01 | STF திருகோணமலை முகாமில் படையினர் தங்கும் இல. 01 வீட்டினை புனரமைத்தல் STF/B/C/07/2022 | 90 (நாட்கள்) | 2.9 M | 29,000.00 | C7அல்லது C8 | 2,500.00 |
| 02 | STF திருகோணமலை முகாமில் படையினர் தங்கும் இல. 02 வீட்டினை புனரமைத்தல் STF/B/C/29/2022 | 90 (நாட்கள்) | 2.9 M | 29,000.00 | C7அல்லது C8 | 2,500.00 |
| 03 | STF கோணஹேன முகாமில் மனித வளப் பிரிவு சுவர் அலமாரிகளைத் தயாரித்தல் STF/B/C/08/2022 | 45 (நாட்கள்) | 3.0 M | 45,880.00 | C8 அல்லது அதற்கு மேல் | 2,500.00 |
| 04 | STF கிளிநொச்சி முகாமில் வாகன திரத்துமிட மேம்பாடுகள் STF/B/C/10/2022 | 60 (நாட்கள்) | 4.3 M | 70,900.00 | C8 அல்லது அதற்கு மேல் | 2,500.00 |
| 05 | STF கட்டுகுருந்த பயிற்சி முகாம் இல. 89 கட்டிடத்தினை புனரமைத்தல் STF/B/C/37/2022 | 120 (நாட்கள்) | 5.9 M | 82,100.00 | C7 அல்லது அதற்கு மேல் | 2,500.00 |

02. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும் (NCB)

03. இதற்காக ஆர்வம் காட்டும் தகுதியான மனுதாரர்கள் மேலதிக தகவல்களை விசேட அதிரடிப்படை, பணிப்பாளர் / கட்டிடம் அவர்களிடம் பெற்றுக்கொள்ளவதுடன், **2022.01.31 ஆம் திகதி முதல் 2022.02.21 ஆம் திகதி வரை** பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்கள் தவிர்ந்த வார நாட்களில் **காலை 09.00** மணி முதல் **மாலை 15.00** மணி நேரம் வரை மனு ஆவணங்களை பரிசீலனை செய்ய முடியும்.

04. தகுதியான அனைத்து மனுதாரர்களும் குறித்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற சட்டப்பூர்வமான உரிமையை கொண்டுள்ளனர். மனுதாரர்களால் கட்டுமான பயிற்சி மற்றும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD/CIDA) தரம் மற்றும் 1987 இலக்கம் 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் (Public Contract Act) பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட மனுவுடன் இந்த பதிவுச்சான்றிதழின் நகல் பிரதிகள் இணைக்கப்படாதவிடத்து மனுக்கள் தகுதி நீக்கம் செய்யப்படும். மனுதாரரின் பெயரை தேசிய கொள்வனவு ஆணைக்குழுவில் (National Procurement Commission) தவறாக ஆவணத்துடன் சேர்க்கக்கூடாதுதென்பதுடன் மேலதிக விபரங்கள் மனு ஆவணத்துடன் வழங்கப்பட்டுள்ளன.

05. எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை **2022.01.31** ஆம் திகதியிலிருந்து **2022.02.21** ஆம் திகதி வரை பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்களைத் தவிர வார நாட்களில் **மு.ப.09.00** முதல் **பி.ப.03.00** மணிவரை **இல-223, பௌத்தாலோக்க மாவத்தை, விசேட அதிரடிப்படை தலைமை அலுவலகம், பணிப்பாளர் / கட்டிடம் வழங்கல் பிரிவில்** ICTAD அல்லது CIDA பதிவுடன் சமர்ப்பித்து இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்களால் மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளச்செலுத்தப்படாத கட்டணத்துடன் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். ஒரு நிறுவனத்திற்கு மனுகோரல் விண்ணப்ப படிவம் ஒன்று மட்டுமே வழங்கப்படும்.

06. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை பிரதிகளுடன் **2022.02.22** ஆம் திகதி **பி.ப.02.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் இல-223, பௌத்தாலோக்க மாவத்தை, விசேட அதிரடிப்படை தலைமையகம், பணிப்பாளர் / கட்டிட அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இடுதல் மனுக்கள் திறக்கப்படும் நேரத்திற்கு முன்னர் கிடைக்குமாறு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். மனுக்கள் இடப்பட்டுள்ள உறையின் இடது பக்கமேல் மூலையில் ஒப்பந்த இலக்கத்தினை தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கால தாமதமாக கிடைக்கப்படும் மனுக்கள் நிராகரிக்கப்படும். மேலும் தனிப்பட்ட முறையில் சமூகமளிக்கும் மனுதாரர் அல்லது அவரது உரிமம் பெற்ற பிரதிநிதிக்கு முன்னிலையில் **2022.02.22 ஆம் திகதி இல-223, பௌத்தாலோக்க மாவத்தை, விசேட அதிரடிப்படை, தலைமையக கேட்போர் கூடத்தில் பி.ப.02.00 மணிக்கு மனுக்கள் திறக்கப்படும். மனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற பின்னர் மனுக்கள் திறக்கப்படும் வேளையில் பங்கேற்கும் மனுதாரரின் பிரதிநிதிகள் மனுதாரரிடமிருந்து எழுத்துப்பூர்வ அனுமதியை பெற வேண்டும். மனுதாரரின் எழுத்துப்பூர்வ அனுமதியை வழங்கத் தவறிய எந்த முகவரும் அச்சந்தர்பத்தில் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.**

07. சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களின் செல்லுபடியாகும் காலம் **91 நாட்கள்** வரையாகும்.

08. அனைத்து மனுக்களும், மனுப் பிணையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும், மேலும் சமர்ப்பிக்கப்பட்ட மனுப் பிணையானது பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

    i. இலங்கையில் செயல்படும் வணிக வங்கியிடமிருந்து மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட பிணையாளராக இருத்தல் வேண்டும்.

    ii. மனு பிணையானது படைத்தளபதி / விசேட அதிரடிப்படை என்ற பெயரில் இருக்க வேண்டும்.

    iii. மனு படிவ தொகுப்பின் 9 ஆம் பிரிவில் இல் சேர்க்கப்பட்டுள்ள படிவத்தின் படி நிபந்தனையற்ற கோரிக்கைப் பத்திரமானது மனுக்கள் **2022.02.22** ஆம் திகதி முதல் **2021.05.24** வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

09. தள வருகையைத் தொடர்ந்து, **2022.02.14 ஆம் திகதி 10.00** மணிக்கு **விசேட அதிரடிப்படை தலைமையகம், இல-223, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07 விசேட அதிரடிப்படை, கேட்போர்கூடத்தில்** முன்மனுக் கூட்டம் நடைபெறும்.

10. வழங்கப்படும் நிதி ஒழுங்குமுறைகள் மற்றும் திறைசேரி சுற்றறிக்கைகளில் ஏதேனும் திருத்தங்களைச் செய்வதற்கான உரிமை கொள்முதல் குழுவினருக்கு உண்டு. கொள்முதல் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதி தீர்மானமாக காணப்படும்.

11. மேலதிக விபரங்களை பின்வரும் முகவரியில் அல்லது தொலைபேசி எண்களினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

**விலாசம்**
பணிப்பாளர் / கட்டிடம்
விசேட அதிரடிப்படை
இல-223, பௌத்தாலோக்க மாவத்தை,
கொழும்பு 07.

**தொலைப்பேசி இலக்கம்**
பிரதான - 011 2589784
பொது - 011 2500471 / 2589741 - நீடிப்பு: 262
பெக்ஸ் - 011 2588499 / 2589784

தளபதி
விசேட அதிரடிப்படை.

## 1. விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை போக்குவரத்து சபை (SLTB)
## Bid for the Supply of Brake, Spring, Battery Spares & Oil Seals
### Procurement No.: SLTB/TS/GEN/02-III/2020-1

1. 2022.02.22 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணி வரையும் Brake, Spring, Battery Spares & Oil Seals ஆகியவற்றின் வழங்கலுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து 90 நாட்கள் கடன் அடிப்படையில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை போக்குவரத்து சபை பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார். விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். 2022.01.31 ஆம் திகதியிலிருந்து 2022.02.21 ஆம் திகதி வரையும் அலுவலக நேரங்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக 20,000 ரூபாவைச் செலுத்திய பின்னர்,கிருளவீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இ.போ.ச. பெறுகைக் குழுவின் செயலாளரிடமிருந்து ஆங்கிலமொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம்.

| விளக்கம் | விலைமனுப்பிணை (ரூபாவில்) |
|---|---|
| 90 நாட்கள் கடன் அடிப்படையில் ஒரு வருடத்திற்கு பிரேக், ஸ்பிரிங், பட்டரி உதிரிப்பாகங்கள் மற்றும் ஒயில் சீல்கள் ஆகியவற்றை வழங்கல். | **விலைமனுக்களை வழங்குதல்**<br>பிரேக் உதிரிகள் மட்டும் - 1,000,000.00<br>ஸ்பிரிங் உதிரிகள் மட்டும் - 100,000.00<br>பற்றறி உதிரிகள் மட்டும் - 300,000.00<br>ஒயில் சீல் மட்டும் - 300,000.00<br>மேற்படி எல்லா உருப்படிகளுக்கும் 1,500,000.00 |

2. இந்த விலைமனுவிற்காக பிரேக், ஸ்பிரிங், பட்டரி உதிரிப்பாகங்கள் மற்றும் ஒயில் சீல்கள் ஆகியவற்றை வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் ஏகநியமிக்கப்பட்ட உள்ளூர் பிரதிநிதிகள்/தரஅங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மாத்திரமே முன்வைப்பதற்கான தகுதியை பெற்றுக் கொள்வர்.

3. உரித்தான வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் அதிகாரம் மற்றும் சான்று இல்லாமல் நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்ளூர் உற்பத்தியாளர்களை பொறுத்தவரையில் பதிவில்லாமல் அல்லது ஆவணச் சான்று இல்லாமல் முன்வைக்கப்பட்டு பிரேக், ஸ்பிரிங், பட்டரி உதிரிப்பாகங்கள் மற்றும் ஒயில் சீல்கள் ஆகியவற்றை இலங்கை போக்குவரத்து சபையின் தொழில்நுட்பத்திற்கான பிரதி பொது முகாமையாளரினால் பரீட்சிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டவைகள் பரிசீலனை செய்யப்படமாட்டாது.

4. (அ) எந்தவொரு விலைமனுதாரருக்கும் முகவரொருவராக அல்லது உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக அல்லது அவரது சார்பாக செயற்படும் எந்தவொரு நபரும் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னதாக இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதியானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான மூலப்பிரதி சான்றிதழை சமர்ப்பிக்கத்தவறும் அவ்வாறான விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

   (ஆ) 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் விலைமனுதாரர்கள் தம்மை விலைமனுக்களை சமர்ப்பித்த பின்னர் உடனடியாகவும் பெறுகையை வழங்குவதற்கு முன்னராகவும் விலைமனுக்களை விலைமனுதாரர்கள் பதிவுசெய்தல் வேண்டும். உரித்தான பெறுகை குழுவிற்கு பொது ஒப்பந்தங்களின் பிரகாரம் பதிவுச் சான்றிதழை அவ்வாறான விலைமனுதாரர் சமர்ப்பிக்காவிடின்,பெறுகையானது எந்தவொரு விலைமனுதாரருக்கும் வழங்கப்படமாட்டாது.

5. விலைமனுக்கள் 2022.05.23 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். இருப்பினும், ஒப்பந்தத்தை வழங்கிய பின்னர் ஒரு (01) வருட காலப்பகுதிக்கு முன்வைக்கப்பட்ட விலைகள் நிலையாகவிருத்தல் வேண்டும்.

6. விலைமனுக்கள் 2022.06.22 ஆம் திகதி வரையும்செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் மாற்ற முடியாததும் நிபந்தனையற்றதும் இலங்கை போக்குவரத்து சபையினால் மேற்கொள்ளப்படும் எழுத்து மூலமான முதலாவது கோரிக்கையின் அடிப்படையில் ரொக்கப் பணமாக மாற்றக்கூடியதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பதிவு பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் அல்லது இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் பதிவு செய்யப்பட்ட காப்புறுதி முகவராண்மையினால் வழங்கப்பட்டதுமாகவிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.

7. விலைமனு ஆவணத்தின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் சிற்றொப்பமிட்டு அவரது இலச்சினை பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

8. விலைமனுக்கள் 2022.02.22 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபை பெறுகைக் குழுவின் செயலாளரின் அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள முத்திரையிடப்பட்ட தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Supply of Brake, Spring, Battery Spares & Oil Seals"** என குறிப்பிடப்படல் வேண்டும்.

9. விலைமனுக்களை அவைகளை மூடிய பின்னர், உடனடியாகவே கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபை பெறுகைக் குழுவின் செயலாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர், இபோச பெறுகைக் குழு,**
**பெறுகைப் பிரிவு,**
**200, கிருள வீதி, கொழும்பு-05.**
**விசாரணைகள்: செயலாளர், பெறுகைப் பிரிவு, இலங்கை போக்குவரத்து சபை**
**தொலைபேசி: 011 7706110, 0771056110. தொலைபேசி/தொலைநகல்: 011 2588457**

### கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம்
### கரையோர பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

## விலை மனுக்கோரல் (IFB)

## PVC பூசப்பட்ட அதிக அளவில் கால்வனேற்றப்பட்ட கேபியன் பெட்டிகள் மற்றும் நெய்யப்படாத ஜியோடெக்ஸ்டைல்களை வழங்குதல்

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தின் சார்பாக திணைக்கள கொள்முதல் குழுவின் தலைவர், கடலோரப் பாதுகாப்புப் பணிகளுக்காக PVC பூசப்பட்ட அதிக அளவில் கால்வனேற்றப்பட்ட கேபியன் பெட்டிகள் மற்றும் நெய்யப்படாத ஜியோடெக்ஸ்டைல்களை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது. ஒவ்வொரு கொள்முதல் தனிப்பட்ட மற்றும் சுயாதீனமான கொள்முதல் நடவடிக்கையாகும்.

| ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | வழங்களின் விபரம் | மனுப்பாதுகாப்பு (ரூ).மற்றும் மனுக்கள் செல்லுபடியாகும் காலம் | வழங்கல் காலம் (அதிகபட்ச) |
|---|---|---|---|
| PVC பூசப்பட்ட அதிக அளவில் கால்வனேற்றப்பட்ட கேபியன் பெட்டிகளை வழங்கல் **(CCD/CD/2022/51)** | • 350Nos of nos. gabions boxes in the size of 2m x 1m x 0.5m<br>• 600Nos of nos. gabions boxes in the size of 1m x 1m x 1m | 100,000/= 77 நாட்கள் | 45 நாட்கள் |
| நெய்யப்படாத ஜியோடெக்ஸ்டைல்களை வழங்குதல் **(CCD/CD/2022/52)** | Supply of 40,000m$^2$ of non-woven geotextile | 250,000/= 77 நாட்கள் | 60 நாட்கள் |

விலை மனுக்கள் **தேசிய போட்டிமுறை மனுக்கோரல் முறையில் இடம்பெறும்.** ஒவ்வொரு கொள்முதல் நடவடிக்கைகளுக்கும் தனி மனு ஆவணம் வழங்கப்படும்.

ஒப்பந்தத்திற்கு தகுதியுடைய மனுதாரர்களின் பெயர் கருப்புப்பட்டியலில் (Black Listed) இடம் பெறாதிருத்தல் மற்றும் 1987 இலக்கம் 03 ஆம் ஒப்பந்தச் சட்டத்தின்படி, மனுவினைப் பெற்றுக்கொள்வதற்கு நிறுவனப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்தல் வேண்டும்.

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மேலதிக தகவல்களை சிரேஷ்ட பொறியியலாளர், (கரையோர அபிவிருத்தி) மற்றும் மனு ஆவணங்களை வேளைநாட்களில் **மு.ப.09.00 மணி முதல் பி.ப.15.00** மணிவரை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

பணிப்பாளர் நாயகம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்திற்கு எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை சமர்ப்பித்து மற்றும் மீள்செலுத்தப்படாத கட்டணமாக **(ரூ.3,500.00)** னை திணைக்களத்தின் பொருளாளரிடம் செலுத்துவதன் மூலம் ஆங்கில மொழியிலான மனு ஆவணத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

மனு ஆவணங்கள் **2022.01.31** முதல் **2022.02.18** வரை **0900 மணி முதல் 1500 மணி** வரை வேலை நாட்களில் மட்டுமே வழங்கப்படும். **2022.02.21** ஆம் திகதி **1400** மணிக்கு அல்லது அதற்கு முன் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

மூடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கத்தினை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். மனுக்கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் **2022.02.21** ஆம் திகதி **1400** மணிக்கு அதே முகவரியில் மனுக்கள் திறக்கப்படும். தாமதமாக கிடைக்கப்பெறும் மனுக்கள் நிராகரிக்கப்படும்.

மேலே குறிப்பிடப்பட்ட முகவரியானது :

**சிரேஷ்ட பொறியிலாளர், (கரையோர அபிவிருத்தி),**
**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம்,**
**நான்காம் மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை,**
**கொழும்பு 10,**
**இலங்கை.**
**தொலைபேசி : +94 11 2472622**
**தொலைநகல் : +94 11 2438005**

**தலைவர்,**
**திணைக்களத்தின் கொள்முதல் குழு,**
**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம்.**

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

கட்டிடங்கள் திணைக்களம்

# கேள்விகளுக்கான அழைப்பு

**ஹம்பாந்தோட்டையிலுள்ள பழைய மாவட்ட தொழில் அலுவலகக் கட்டிடத்தை விடுமுறை பங்களாவாக மாற்றுவதற்கான புதுப்பித்தல் வேலைகள் மற்றும் பழைய மாவட்ட தொழில் அலுவலகம் மற்றும் விடுமுறை பங்களாவின் எல்லைச் சுவர், மழை நீர் வடிகான், சங்கிலித் தொடர்வேலி என்பவற்றின் புதுப்பித்தல் வேலைகள்**

**(ஒப்பந்த இலக்கம்: RPC/Zone 06/01-C/2022)**

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டதும் மற்றும் 10.1 மில்லியன் ரூபா மதிப்பீட்டுச் செலவைக் கொண்டதுமான ஹம்பாந்தோட்டையிலுள்ள பழைய மாவட்ட தொழில் அலுவலகக் கட்டிடத்தை விடுமுறை பங்களாவாக மாற்றுவதற்கான புதுப்பித்தல் வேலைகள் மற்றும் பழைய மாவட்ட தொழில் அலுவலகம் மற்றும் விடுமுறை பங்களாவின் எல்லைச் சுவர், மழை நீர் வடிகான், சங்கிலித் தொடர்வேலி என்பவற்றின் புதுப்பித்தல் வேலைகளுக்காக தகைமையும் தகுதியும் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளை கட்டிடத் திணைக்களத்தின் சார்பில் பிராந்திய பெறுகைக் குழு (வலயம் 6) பெறுகைக் குழுத் தலைவர் கோருகிறார்.

   நிர்மாணக் காலம் 91 நாட்கள்.

2. கேள்விகள் தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் இடம்பெறும். இப்பெறுகையின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாக இருப்பதனால் 04/2016 (iii) ஆம் இலக்கம் மற்றும் 03/2020ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளதற்கமைய பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தரம் முன்னுரிமை என்பன பிரயோகிக்கப்படும்.

3. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் கேள்விகள் மூடப்படும் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) கட்டிட நிர்மாண ஒப்பந்தக்காரர்களுக்கான C6 அல்லது C5 தரப் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். குறித்த பதிவானது ஒப்பந்தம் வழங்கும் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

   பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் கேள்விதாரர்கள் 1987இன் 3ம் இலக்க ஒப்பந்த விதிகள் பற்றிய ஒப்பந்தச் சட்டத்தின் பெறுகை விதிகளின் பிரகாரம் தம்மைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதியை (Original Certificate of PCA 03) கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். PCA 03 பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு விலைமனுதாரருக்கும் இந்தப் பெறுகை கையளிக்கப்பட மாட்டாது.

4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் காலி, இல. 10, அப்பர் டிக்சன் வீதி. கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 6), பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அதே முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம். தொடர்பு தொடர்பு இலக்கங்கள்: தொலைபேசி: 091-2222583, தொலைமடல்: 091-2234838

5. மீளளிக்கப்படாத கட்டணமாக நான்காயிரம் ரூபாவை (ரூபா 4,000.00) 2022-01-31ஆம் திகதி முதல் 2022-02-14ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் காலி, இல. 10, அப்பர் டிக்சன் வீதி. கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 6), பிரதம பொறியியலாளர் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

6. கேள்விகளை 2022-02-14ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு (வலயம் 06), இல. 10, அப்பர் டிக்சன் வீதி, காலி முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். காலி, இல. 10, அப்பர் டிக்சன் வீதி. கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 6), பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் வருகை தந்துள்ள கேள்விதாரர்களின் கேள்வியில் பங்குபற்ற தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.

7. கேள்விகள் பெற்றுக்கொள்ளும் இறுதி நாள் அல்லது நீடிக்கப்பட்ட காலத்திலிருந்து 77 நாட்களுக்கு கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.

8. அனைத்துக் கேள்விகளுடனும்
   * கேள்வி ஆவணத்தின் 09ம் பிரிவில் உள்ளடங்கும் படிவத்தின்படி
   * கட்டிடப் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுதப்பட்ட
   * 130,000.00 ரூபா தொகைக்கு
   * 2022 மே 30ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும்
   * கேள்வித் தரவின் 16.2ஆம் வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட முகவரகம் ஒன்றினால் வழங்கப்பட்ட கேள்விப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பொறி. (திருமதி) கமனி லியனகே,**
**கட்டிடங்கள் பணிப்பாளர் (பிராந்தியம் 3),**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2ம் மாடி, ''செத்சிறிபாய",**
**பத்தரமுல்லை.**
**www.buildings.gov.lk**

BE BETTER INFORMED!




News you can trust now free on your mobile phone.

Dinamina Daily News Thinakaran

VISIT apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE

காணி அமைச்சு

## காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழு

### 2022ஆம் ஆண்டிற்கான உரிமம் பெற்ற நில அளவையாளர்களைப் பதிவு செய்தல்

2022ஆம் ஆண்டில் காணிசீர்த்திருத்த ஆணைக்குழுவின் காணிகளை அளவீடு செய்து கொள்வதற்காக தகைமையும் உரிமமும் பெற்றுள்ள நில அளவையாளர்களைப் பதிவுசெய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக நில அளவையாளர் அதிகாரப் பத்திரத்தின் பிரதியொன்றுடன் 2022.01.31 முதல் 2022.02.14 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை அலுவலக நேரங்களில் விண்ணப்பிக்கலாமென்பதுடன் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் தகைமையுள்ள விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படும்.

காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் பிரதான அலுவலகத்தில் அல்லது மாவட்ட அலுவலகங்களில் மீளளிக்கப்படாத ரூபா 5000.00 + VAT தொகையை ரொக்கப்பணமாக மாத்திரம் செலுத்தி இதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்களை வழங்கல் மற்றும் பதிவு தொடர்பான மேலதிக விபரங்களை பிரதிப்பணிப்பாளர்/ அளவை மற்றும் வேறாக்குதல் (தொலைபேசி இலக்கம்: 0767 998649/ 0112144795) மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**சட்டத்தரணி,**
**நிலன்த விஜேசிங்ஹ,**
**தலைவர்,**
**காணிச்சீர்திருத்த ஆணைக்குழு.**

**இலக்கம்: 475,**
**கடுவெல வீதி,**
**பத்தரமுல்ல.**
2022.01.31

### 1964 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல.28 இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது குறிப்பு எண் : திபிராலே/1/8/3/71**

இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருவதாவது 14.02.2022 ஆம் திகதி பிரதேச செயலாளர் திம்பிரியகஸ்யாயவில் உள்ள கீழ்வரும் காணிகளின் உரிமம் மற்றும் நஷ்டஈட்டு விசாரணைகள் காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 09 இன் கீழ் அதனுடன் சம்பந்தப்பட்ட என்னால் அரச உரிமத்தின் கீழ் என்னால் நடத்தப்படும் என்பதை தெரிவிப்பதுடன் அக்காணியில் யாருக்காவது அக்கறை இருப்பின் குறிப்பிட்ட விசாரணைக்கு சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றது. மேலதிக தகவல்களுக்காக 14.01.2022ஆம் திகதியிட்ட 2262/48 இலக்கமிடப்பட்ட விசேட வர்த்தமானியை iii பகுதியை பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | - மேற்கு |
| மாவட்டம் | - கொழும்பு |
| பிரதேச செயலாளர் பிரிவு | - திம்பிரியகஸ்யாய |
| கிராம நிலதாரி பிரிவு | - தெமடகொட |
| கிராமங்களின் பெயர் | - தெமடகொட |
| ஆரம்பவரைபட இல | - ஆ. வ. CO 9984 |
| மொத்த துண்டு இல | - துண்டு இல 01 முதல் 93 வரை |
| நீளம் | - 0.3809 ஹெக்டேர் |

**பிரியந்தா திசானாயக**
**பிரதேச செயலகம்**
**திம்பிரியகஸ்யாய.**

**பிரதேச செயலகம், திம்பிரியகஸ்யாய**
**27.01.2022**

### வ/ப வடமேல் மாகாண அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் சகல அங்கத்தவர்களுக்கு விடுக்கப்படும் அறிவித்தல்

வ/ப வடமேல் மாகாண அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் ப.இ.வ/ப/சமு/11 மற்றும் 2016.08.15 திகதிய பதிவு செய்த குருநாகல் மாவட்டத்திற்குள் செயற்படும் கூட்டுறவுச் சங்கமாகும் சங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகளை இலகுவாக்குவதற்கு அங்கத்தவர்களின் தரவுகளை சேகரிப்பதற்கும் அங்கத்தவர் பெயர் பட்டியலை நாளதுவரைக்கு உற்படுத்துவதற்கும் 2022.01.21 இல் நடைபெற்ற பணிப்பாளர் சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இச் சங்கத்தின் செயற்பாட்டு அங்கத்தவராக செயற்படுவதற்கு இணங்குவதாயின் இதனோடு உள்ள மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட உங்களது தகவல்களை 2022.02.22 ஆம் திகதிக்கு முன் பதிவுத்தபாலில் அல்லது தலைமையகத்திற்கு கொண்டுவந்து ஒப்படைத்து அங்கத்துவத்தை உறுதி செய்துகொள்ளுமாறு இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

**சங்கத்தின் கௌரவ தலைவர்**

**சங்கத்தின் முகவரி**
**வ/ப வடமேல் மாகாண அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்**
**மஹகெலிய சந்தி**
**மஹகெலிய**
**தொலைபேசி இல : 037-2057745, 0770118985.**

அங்கத்துவத்தை உறுதி செய்யும் விண்ணப்பம்

1. அங்கத்தவர் இலக்கம் :-
2. பெயர் :-
3. முகவரி :-
4. பங்குத்தொகை :-
5. பிரதேச செயலாளர் பிரிவு :-
6. கிராம அதிகாரி பிரிவு :-

வரையறுக்கப்பட்ட வடமேல் மாகாண அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் செயற்பாட்டு அங்கத்தவராக செயற்படுவதற்கு இணங்குகிறேன்.

**திகதி:** **அங்கத்தவர்:**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## பெறுகை அறிவித்தல்

### குறிகட்டுவான் மற்றும் நெடுந்தீவு இடையே இயங்கும் குமுதினி பயணிகள் மரப்படகினை பழுதுபார்த்தல் / புதுப்பித்தல்

01. வட மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாண பணிப்பாளரினால் குறிகட்டுவான் மற்றும் நெடுந்தீவு இடையே இயங்கும் குமுதினி பயணிகள் மரப்படகினை பழுதுபார்த்தல் / புதுப்பித்தல் பழுதுபார்ப்பு / புனரமைப்புக்காக மனுக்கோரலுக்காக தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது. குறிகட்டுவானில் படகுப் மையத்தில் இந்த படகினை பரிசீலனை செய்ய முடியும்.

02. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **"மேற்கோள் கோரல்"** ஆவணங்களை இலக்கம் 761, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மாகாண பணிப்பாளர் (வட மாகாணம்) அலுவலகத்தில் அல்லது 5ஆம் மாடி "மகநெகும மஹமெதுர" இல.216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லையில் அமைந்துள்ள பணிப்பாளர் இயந்திரவியல் அலுவலகத்தில் **2022.01.31** ஆம் திகதியிலிருந்து **2022.02.18** ஆம் திகதி வரை இலவசமாக பரீட்சிக்கவும், பெற்றுக்கொள்ளவும் முடியும்.

03. மூடப்பட்ட மேற்கோள்களை **2022.02.21** ஆம் திகதி **பி.ப.2.00** மணிக்கு முன்னர் **மாகாணப் பணிப்பாளர் (வட மாகாணம்) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இலக்கம் 761, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பப்பட்ட மேற்கோள்கள் ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக அதே அலுவலகத்தில் திறக்கப்படும்.

04. மனுக்களுடன், மேற்கோள் சமர்ப்பிப்பு முடிவடையும் நாளிலிருந்து **105 நாட்களுக்கு** செல்லுபடியாகும் **ரூ.175,000.00** க்கான வங்கி வரைவோலை அல்லது வங்கி பாதுகாப்பு பிணையினை மேற்கோளுடன் சமர்ப்பிக்க வேண்டும். தேவையான மனுப் பாதுகாப்பு இணைக்கப்படாத மேற்கோள்கள் நிராகரிக்கப்படும்.

05. படகு பழுது / புதுப்பிப்புக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் **"மேற்கோள் கோரல்"** ஆவணத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

06. மேலதிக விபரங்களையும் தெளிவுபடுத்தல்களையும் வட மாகாண பணிப்பாளரிடமிருந்து **021-2222580 / 024-2222590** அல்லது இயந்திரவியல் பணிப்பாளரிடமிருந்து **011-2872273 / 011-2046354** என்ற தொலைபேசி எண்களினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

**மாகாண பணிப்பாளர் - வட மாகாணம்**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**
**இல-761, கடற்கரை சாலை,**
**குருநகர், யாழ்ப்பாணம்.**

## பகிரங்க ஏலவிற்பனை

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்திற்குரிய அனைத்து தங்க கடன் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட தங்க கடனுடன் தொடர்புடைய 2021/12/31 திகதிக்கு காலாவதியாகி இதுவரை மீட்கப்படாத அனைத்து தங்க நகைகளும் 2022/02/22 மற்றும் 2022/02/23 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00க்கு கீழுள்ள விலாசத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ,**
(PB1079/PQ)
இல. 19, புகையிரத வீதி, நுகேகொடை.
தொலைபேசி: 0117 444 222

## பெறுகை அறிவித்தல்

### பண்டாரவளை மாநகர சபை
### உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்

பண்டாரவளை மாநகர சபையின் பெறுகைக் குழுத்தலைவராகிய என்னால் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து மற்றும் பதிவு செய்யப் பெற்றுள்ள சங்கங்கள் மற்றும் கம்பனிகளிடமிருந்து இத்தால் விலைமனுக் கோரப்படுகின்றது.

| தொடர் இலக்கம் | உபகரணங்கள் | மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் | மீளளிக்கப் படும் விலைமனு வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 01 | மின் விளக்குத் தூண்கள் | 10000.00 | 75,000.00 |
| 02 | டெஸ்க்டொப் கணனிகள் சர்வர்கள் மற்றும் கணனி துணை உறுப்புக்கள் | 5000.00 | 15000.00 |
| 03 | தீயணைப்பு உபகரணங்கள் | 1000.00 | 5000.00 |

விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளல் வழங்கல் மற்றும் திறத்தல் பின்வரும் தினங்களில் மற்றும் நேரங்களில் பண்டாரவளை மாநகர சபையில் மேற்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| விலைமனுப்படிவங்களை வழங்கல் | : 2022.01.31 முதல் 2022.02.21 அன்று பி.ப. 2.00 வரை |
| விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளல் | : 2022.02.22 அன்று பி.ப. 2.00 வரை |
| விலைமனுத்திறத்தல் | : 2022.02.22 அன்று பி.ப. 2.00 கடந்தவுடன் |

மேலும் இது தொடர்பான மேலதிக விபரங்களை பண்டாரவளை மாநகர சபைக்கு வருகைதந்து அல்லது தொலைபேசி இலக்கம் 057-2222275 மூலம் மாநகர கணக்காளர் அல்லது மாநகரப் பொறியியலாளரை அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**ஜனக நிஷாந்த ரத்நாயக்க,**
**தலைவர், பெறுகைக் குழு/**
**மாநகர முதல்வர்.**

2022.01.25ஆம் திகதி
**பூங்கா வீதி, பண்டாரவளை,**
**பண்டாரவளை மாநகர சபை.**

## இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை நிலைபெறுதகு சக்தி துறைக்கு புறோட் கொம்மியுனிகேசன்ஸ் இண்டர்பேஸை செயற்படுத்துவதற்காக பொதுமக்கள் தொடர்பு முகவரான்மையொன்றை ஈடுபடுத்தல்**

**Procurement No.: SEA/PD/ONP/03-2022**

1. To operate a broad communications interface for the sustainable energy sector of Sri Lanka இற்காக பொருத்தமான பொதுமக்கள் தொடர்பு முகவரான்மையொன்றை தெரிவு செய்வதற்காக தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரலின் கீழ் பொருத்தமான சேவை வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்களை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

2. ஆர்வமுள்ள விலைமனுதாரர் **www.energy.gov.lk** என்ற இநிசஅ இன் இணையதளத்தில் விலைமனு ஆவணத்தை பரீட்சிக்கலாம் / இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். தமது விலைமனுக்களை சமர்ப்பிக்க விரும்பும் ஆர்வமுள்ள சாரார் டொரிங்டன் சதுக்க இலங்கை வங்கிக் கிளையின் (453) 0074944408 என்ற இநிசஅ இன் பொதுவான கணக்கிலக்கத்திற்கு ரொக்கப் பணத்தில் 1500 இலங்கை ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்துதல் வேண்டும்.

3. விலைமனுவுடன் மேலேயுள்ள பணக்கொடுப்பனவின் பற்றுச்சீட்டானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பணக்கொடுப்பனவு பற்றுச்சீட்டில்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பற்றுச்சீட்டின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியொன்று **procurement.slsea@gmail.com** மற்றும் **slseafinance@gmail.com** என்ற மின்னஞ்சல்களுக்கு அனுப்பப்படல் வேண்டும்.

4. 2022 பெப்ரவரி 3 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு ஒன்-லைன் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஒன்-லைன் கூட்டத்திற்கு சமுகமளிக்க விரும்பின் கூட்ட இணைப்பை பெறுவதற்காக மின்னஞ்சலொன்றை **procurement.slsea@gmail.com** என்பதற்கு அனுப்பலாம்.

5. 2022 பெப்ரவரி 22 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'Public Relation Agency to Operate a Broad Communications Interface – SEA/PD/ONP/03-2022' என குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை, இல. 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு-07 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-07, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, 72 ஆம் இலக்கத்திலுள்ள இநிசஅ இன் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். தற்போதுள்ள தொற்று நிலைமை காரணமாக விலைமனுக்கள் அவைகளின் மூடும் நேரத்தின் பின்னர் விலைமனுதாரர்களின் நேரடியான உடலிருப்பின்றி (physical presence) திறக்கப்படுவதுடன் ஒன்-லைன் கூட்டத்திற்கான இணைப்பொன்றை பெற்றுக் கொள்வதற்காக தபாலுறையின் (விலைமனு) வெளிப்பக்கத்தில் மின்னஞ்சல் முகவரியொன்று குறிப்பிடுவதன் மூலம் 'Google Meet' ஊடாக விலைமனுக்களை திறத்தலின் ஒன்-லைனில் விலைமனுதாரர்கள் இணைந்து கொள்ளலாம். அனைத்து விலைமனுக்களும் 100,000 இலங்கை ரூபா பெறுமதியான ரொக்கப் பண வைப்பாக விலைமனுப்பிணையொன்றாக மேலேயுள்ள 2 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள இநிசஅ இன் பொதுவான வங்கி கணக்கிற்கு வரவு வைக்கப்படலாம் அல்லது விலைமனு ஆவணத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறான வங்கி உத்தரவாதமொன்றுடனும் 2022 ஜூன் 09 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும்.

6. மேலதிக விபரங்களை 0112575030 என்ற தொலைபேசி இலக்கத்தை அலுவலக நேரங்களில் அழைப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை,**
**இல. 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு-07.**
**தொலைபேசி: 94(0) 112575030. தொலைநகல்: 94(0) 112575089**
**மின்னஞ்சல்: info@energy.gov.lk. இணையம்: www.energy.gov.lk**
**2022 சனவரி 31 ஆம் திகதியன்று.**

Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz It's what you want
Classified
Inquiries :- Ramani - 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
Lake House Branch
Acc. No. 000000377



## அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ்:

# ஆஷ்லே பார்ட்டி மகுடம் சூடினார்!

அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் ஆஷ்லே பார்ட்டி வெற்றிபெற்று மகுடம் சூட்டியுள்ளார்.

44 ஆண்டுகளுக்குப் பின்னர் குறித்த தொடரில் பட்டத்தை வென்ற முதல் அவுஸ்திரேலிய வீராங்கனை என்ற பெயரையும் ஆஷ்லே பார்ட்டி வென்றுள்ளார். மெல்போனில் நடைபெற்றுவரும் ஆண்டின் முதலாவது கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்துபெற்ற குறித்த தொடரின் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவின் இறுதி போட்டி சனிக்கிழமை இடம்பெற்றது.



இதில் அமெரிக்க வீராங்கனையான டேனியல் காலின்ஸை எதிர்கொண்ட ஆஷ்லே பார்ட்டி போட்டியின் முதல் செட்டை 63 என கைப்பற்றினார். இதனை அடுத்து விறுவிறுப்பாக இடம்பெற்ற இரண்டாவது செட், டை பிரெக்வரை நீடிக்க அதனையும் போராடி ஆஷ்லே பார்ட்டி 76 என கைப்பற்றினார்.

முதல் முறையாக கிராண்ட்ஸ்லாம் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்ற டேனியல் காலின்ஸை 63, 76 என்ற கணக்கில் தோற்கடித்து மூன்றாவது பட்டத்தை வென்றார்.

## கல்முனை ஹொலிபீல்ட் 26 ஆவது ஆண்டு விழா



( மாளிகைக்காடு குறுப் நிருபர்)

கல்முனை பிரதேசத்தின் மூத்த விளையாட்டுக்கழகங்களுள் ஒன்றான கல்முனை ஹொலிபீல்ட் விளையாட்டுக் கழகத்தின் 26 ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் அங்கத்தவர் ஒன்று கூடலும் விளையாட்டுக் கழக செயலாளர் பேராசிரியர் கலாநிதி எஸ். எல். றியாஸ் அவர்களின் நெறிப்படுத்தலில் கழகத்தின" தலைவரும் , சமாதான ஊடக அமைப்பின் தலைவருமான எம்.எம். ஜெஸ்மின் தலைமையில் கடந்த சனிக்கிழமை சம்மாந்துறை சமாதான கற்கைகள் நிலைய வளாக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்விற்கு அம்பாறை மாவட்ட கிரிக்கட் சம்மேளனத்தின் தலைவர் இந்திக நளீன் ஜயவிக்ரம, செயலாளர் சிதத் லியனராய்ச்சி ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

கழகத்தின் தலைவராக மீண்டும் எம்.எம். ஜெஸ்மின், செயலாளராக பேராசிரியர் கலாநிதி எஸ்.எல். றியாஸ், பொருளாளராக எம்.எச்.எம். ஹனீஃப் ஆகியோரும் தவிசாளராக சமீர் யுனூஸ் மற்றும் பிரதித்தவிசாளராக யூ.எல். எம்.றியாஸ், உப செயலாளராக பஸ்மி காசிம், கலாச்சார செயலாளராக மௌலவி சபா முஹம்மத் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

நிகழ்வின் இறுதியில் அம்பாறை மாவட்ட கிரிக்கட் சம்மேளனத்தின் தலைவர் இந்திக நளீன் ஜயவிக்ரம , செயலாளர் சிதத் லியனராய்ச்சி ஆகியோர் கல்முனை ஹோலிபீல்ட விளையாட்டு கழக நிர்வாகிகளினால் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

### சுதந்திர கிண்ண கால்பந்து லீக் தொடர்

## சபரகமுவ,மேல் மாகாண அணிகளுக்கு முதல் வெற்றி

யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை (29) இடம்பெற்ற மாகாண அணிகளுக்கு இடையிலான சுதந்திர கிண்ண கால்பந்து லீக் தொடரின் இரண்டு போட்டிகளில் மேல் மாகாண அணியும், சபரகமுவ மாகாண அணியும் வெற்றிகளைப் பெற்று தமது முதல் வெற்றியைப் பதிவு செய்துகொண்டன.



யாழ்ப்பாணம் அரியாலையில் அமைந்துள்ள இலங்கை கால்பந்து சம்மேளன பயிற்சி நிலைய மைதானத்தில் ஆரம்பமான இந்தப் போட்டி இரண்டு அணிகளுக்கும் முதல் வெற்றியைப் பதிவு செய்வதற்கான ஆட்டமாக இருந்தது. ஏற்கனவே, இரண்டு அணிகளும் தமது முதல் போட்டியை சமநிலையில் முடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆட்டத்தின் முதல் பாதியில் இரண்டு அணிகளும் கோல் பெறாமையினால் முதல் 45 நிமிட ஆட்டம் சமநிலையில் நிறைவுற்றது. எனினும், இரண்டாம் பாதியின் 58ஆவது நிமிடத்தில் சபரகமுவ அணியின் 21 வயதின்கீழ் வீரர் முஷ்பிக் பெற்ற கோலினால், ஆட்ட நிறைவில் சபரகமுவ அணி 10 என வெற்றியைப் பதிவு செய்தது. யாழ்ப்பாணம் துறையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற இந்தப் போட்டியின் 43ஆவது நிமிடத்தில் சொஜோத் ஜசூக் மேல் மாகாண அணிக்கான முதல் கோலைப் பெற்று, முதல் பாதியில் அவ்வணியை முன்னிலைப் படுத்தினார்.

மீண்டும், இரண்டாம் பாதி ஆரம்பமாகி 4 நிமிடங்களில் மொஹமட் ஹஸ்மீர் மேல் மாகாண அணிக்கான அடுத்த கோலையும் போட்டு இந்த தொடரில் தனது இரண்டாவது கோலைப் பதிவு செய்தார்.

தொடர்ந்து, மாற்று வீரராக வந்த நவீன் ஜூட் போட்டியின் உபாதையீடு நேரத்தில் மேல் மாகாணத்திற்கான மூன்றாவது கோலையும் பெற, போட்டி நிறைவில் 30 என அவ்வணி இலகுவான வெற்றியைப் பதிவு செய்தது. இந்த இரண்டு அணிகளும் தமது முதல் போட்டியை சமநிலையில் முடிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதில் அமெரிக்கா தலையிடுவதை நிறுத்த வேண்டும் -சீனா எச்சரிக்கை!

பீஜிங் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதில் அமெரிக்கா தலையிடுவதை நிறுத்த வேண்டும் என சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்க இராஜாங்க செயலாளர் அண்டனி பிளிங்கனிடம் பேசிய சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யி இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தைவான் விவகாரத்தில் சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே மோதல் போக்கு நிலவி வருகிறது.

இது குளிர்கால ஒலிம்பிக் போட்டியின் போதும் எதிரொலிக்கும் என சீனா கருதுகின்றது.




ஏற்கனவே சீனாவின் மனித உரிமை மீறல்களால் குளிர்கால ஒலிம்பிக்கிற்கு அதிகாரப்பூர்வ குழுவை அனுப்பப் போவதில்லை என அமெரிக்கா கடந்த மாதம் அறிவித்திருந்தது.

இந்த நிலையிலேயே அமெரிக்காவுக்கு சீனா கடும் எச்சரிக்கையினை விடுத்துள்ளது.

சீனாவின் பீஜிங் நகரில் குளிர்கால ஒலிம்பிக் போட்டி எதிர்வரும் 4ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதுடன், 20ஆம் திகதி நிறைவடையவுள்ளது என்பதுக் குறிப்பிடத்தக்கது.

## இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழக அணி சம்பியன்

(யாழ் மாவட்ட விளையாட்டு நிருபர்)

அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம் ஊழவர் திருவிழாவை முன்னிட்டு வலிகாம கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்திய ஊழவர் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்ட தொடரின் இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது



கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி எதிர்த்து இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

முதல் பாதி ஆட்டத்தில் இரண்டு அணிகளும் இரண்டு அணிகளும் எதுவித கோல்களையும் பதிவு செய்யாத நிலையில் முதல் பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது. இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணியினரும் தமது அணி கான கோல்களை பதிவு செய்வதற்காக கடுமையாக மோதிக் கொண்டனர். இதன் பயனாக இரண்டு அணியினருக்கும் கோல்களை பதிவு செய்வதற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெற்ற போதும் அதனை தவற விட்டனர்.

ஆட்டம் முடிவதற்கு பத்து நிமிடங்கள் இருக்க விழாவை இளவாலை சென்.லூட்ஸ விளையாட்டுக்கழக அணியினர் தமது அணிக்காக அடுத்து அடுத்து இரண்டு கோல்களை பதிவு செய்ய இரண்டாம் பாதி ஆட்டம் முடிவுக்கு வந்தது. ஆட்ட நேர முடிவில் இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழக அணி 2 :0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.





அக்கரைப்பற்று லெஜென் அணியின் ஏற்பாட்டில் கழகத் தலைவர் நிஹால் முஸ்தபா தலைமையில் அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற நிகழ்வில் சாய்ந்தமருது கடினபந்து கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் காலித்தீனின் விளையாட்டுத்துறையில் காட்டிய திறமையைப் பாராட்டி நிஹால் முஸ்தபாவால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிப்பதையும், அருகில் நியூஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் முகம்மட் றியாஸ் உட்பட கழக முக்கியஸ்தர்களையும் படத்தில் காணலாம். (படம்: ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

## செஹான் சேமசிங்க சம்பியன்ஷிப் ஆண்கள் சைக்கிள் ஓட்டப் போட்டி




( கல்நேவ தினகரன் விசேட நிருபர் )

செஹான் சேமசிங்க தடகள சம்பியன்ஷிப் ஆண்கள் சைக்கிள் ஓட்டப் போட்டி கடந்த 23 ஆம் திகதி அனுராதபுரம் விமான நிலைய வீதியில் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நாடு முழுவதிலும் 200 இற்கும் அதிகமான போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

இப்போட்டியானது 140 கிலோ மீற்றர் தூரத்தை கொண்டதாகும். இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவின் அனுசரணையில் அனுராதபுரம் மாவட்ட சைக்கிள் ஓட்ட சங்கம் அனுராதபுரம் டுவில் சைக்கிள் ஓட்ட விளையாட்டு கழகம் மற்றும் இலங்கை சைக்கிள் ஓட்ட நடுவர் சங்கம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த திறந்த ஸ்டென்டட் சைக்கிள் ஓட்ட போட்டியில் முதலாம் இடத்தை தெஹிவல கல்கிஸ்ஸ நகர சபை விளையாட்டுக்கழகத்தை சேர்ந்த பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்ட பீ.நிசந்த பெரேரா பெற்றுக் கொண்டார். இவருக்கு ரூபா ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசு வழங்கப்பட்டது. இரண்டாம் இடத்தை இலங்கை துறைமுக அதிகார சபையைச் சேர்ந்த எல்.எஸ்.எல்.சீ த சில்வா என்பவர் பெற்றுக் கொண்டதுடன் அவருக்கு ரூபா 75000 பணப்பரிசும்,மூன்றாம் இடத்தை தெஹிவல கல்கிஸ்ஸ நகரசபை விளையாட்டடிக்கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்ட சதுர மதுசான் சில்வா பெற்றுக் கொண்டார். இவருக்கு ரூபா 50000 பணப்பரிசு வழங்கி வைக்கப்பட்டத

எஸ்.எஸ்.எல்.சில்வா இரண்டாம் இடத்தையும்,தெஹிவல கல்கிஸ்ஸ நகர சபை விளையாட்டுக்கழக சதுர மதுசன் சில்வா மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். இவர்களுக்கு முறையே ஒரு இலட்சம்,75000 ரூபா, 50000ரூபா பணப்பரிசு இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவினால் வழங்கி வைக்கப்பட்டது அதன் போது எடுத்த படம் .

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜனவரி மாதம் 31ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.